கோவைகிழார் கட்டுரைகள்

(தொகுதி 1)

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்தைந்தாம் பட்டம் கயிலைப்புனிதர் முனைவர் திருப்பெருந்திரு குருமகாசன்னிதானங்களின் அருளாணையின் வண்ணம் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது ஆண்டு ஐப்பசித் திங்கள் 4 ஆம் நாள் (21.10.2022) மகம் விண்மீன் **அருள்திரு சாந்தலிங்கப் பெருமான் மாதக் குருவழிபாட்டு** *நிகழ்வில் வெளியிடப்பெற்றது.*

வெளியீடு

தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி,
பேரூர், கோவை-10.

நூற் குறிப்பு

பதிப்புரிமை : தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்

நூலின் பெயர் : கோவைகிழார் கட்டுரைகள் [தொகுதி 1]

ஆசிரியர் : கோவைகிழார்

நூல்வகை : கட்டுரைகள்

ஆண்டு : 2022

பதிப்பாசிரியர் : திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்

உரிமை : நூலகத்திற்கு

வெளியீடு : தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகம்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை
அறிவியல் தமிழ்க்கல்லூரி
பேரூர், கோவை – 641010


அச்சாக்கம் : சௌமி அச்சகம்,
1 ஈ, துடியலூர் ரோடு, சரவணம்பட்டி,
கோவை – 641 035
9842252779.

ரூ.50/- மதிப்புள்ள இந்நூல் முனைவர். திருமதி வி.உமாபதி - திரு.வே.கல்யாணசுந்தரம் இணையரின் பொருளுதவியால் வெளியிடப்படுகின்றது.

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்
பேரூராதீன குருமகாசந்நிதானம் கயிலைப் புனிதர்
முனைவர் ***திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்***
பேரூராதீனம், பேரூர், கோவை



பதிப்புரை

இன்ப அன்பினீர்,

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருகுக. 70 ஆண்டுகாலப் பழைமை வாய்ந்த நமது ஆதீனக் கல்லூரியின் முதல் முதல்வராகப் பணியாற்றிய சிறப்புக்குரியவர் கோவைகிழார் அவர்கள். அவர் கவிதை, கட்டுரை, நாடகம், செய்யுள், கோயில் ஆய்வு, வரலாற்றுப் பதிவு, பயண இலக்கியம் எனப் பலதுறையிலும் பங்களிப்பைச் செய்தவர். அத்தகைய படைப்புகளில் சில கட்டுரைகள் **திரு.ம.ரா.போ குருசாமி ஐயா** அவர்களால் தொகுக்கப்பெற்று 'திருக்குறளில் ஓர் அரிய கருத்து' என்னும் பெயரில் **கோவைகிழார்** நூற்றாண்டு நிகழ்வில் திருப்பெருந்திரு இருபத்து நான்காம் குருமகாசன்னிதானங்கள் அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பெற்றன. அந்த நூல் இப்போது **கோவைகிழார் கட்டுரைகள் தொகுதி 1** என்னும் நூலாக நமது ஆதீனக் கல்லூரியின் தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகத்தால் வெளியிடப்பெறுவது பாராட்டுக்குரியது. கோவைகிழார் கையெழுத்துப் பிரதி உள்ளிட்ட பல அரிய நூல்களை வெளிக்கொணரும் முயற்சியில் ஆர்வம் கொண்டு செயல்பட்டுவரும் கல்லூரி நூலகர் முனைவர். திருமதி.அபிராமி மற்றும் குழுவினரின் முயற்சிகள் சிறப்புற வாழ்த்துகிறோம். இந்நூலுக்குப் புரவலர்களாக அமைந்தவர்கள் **முனைவர் திருமதி வி.உமாபதி - திரு.வே.கல்யாணசுந்தரம்** இணையர் ஆவர். **முனைவர் வி.உமாபதி** அவர்கள் நம் கல்லூரித்

தமிழ்த்துறையில் இணைப்பேராசிரியகவும் துறைத்-தலைவராகவும் பணியாற்றியவர்கள். பணிக்காலத்தில் மாணாக்கர் நலனிலும் கல்லூரி வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டு செயல்பட்ட சிறப்புக்குரியவர்கள். அவர்களும் நூல் வெளியீட்டில் முனைந்து செயல்பட்டுவரும் அன்பர்களும் நூலினை அச்சாக்கம் செய்து வழங்கிய சௌமி அச்சகத்தாரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று வாழ அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளும் சாந்தலிங்கப் பெருமான் தண்ணருளும் கயிலைக்குருமணி இருபத்துநான்காம் குருமகாசன்னிதானங்களின் குருவருளும் துணைநிற்க வாழ்த்துகிறோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

சாந்தலிங்க மருதாசல அடிகள்.

பொருளடக்கம்

1. கொங்கு நாட்டுத் தமிழ்ப் புலமை 5

2. இன்பச் சுவை 23

3. அவலச் சுவை 26

4. கவிதை இயல்பு 47

5. திருக்குறளில் சில அரிய கருத்துக்கள் 61

6. திருவாசகத்தில் கண்ட உயிர் வகைகள் 66

7. பாவைப் பாடல்களின் காலம் 71

8. கம்பர் ஓர் ஏழை 79

9. கம்பரும் உழவியலும் 87

10. கந்தர் கலிவெண்பா 90

11. தனித்தமிழ்க் கொள்கை 94

கொங்கு நாட்டில் தமிழ்ப் புலமை

கொங்கு நாடு ஒரு. தனி நாடாகச் சங்கத்தார் காலத்திலும், சைவ சமய மேம்பாட்டுக் காலத்திலும் விளங்கியது. ஆனால், சிற்சில நூற்றாண்டுகளில் அரசியல் புரட்சிகளினால் சேர நாட்டுடன் கலப்புப் பெற்றிருந்தது. அதுவும் சிற்சில பகுதிகள் மட்டும் சேரர் ஆட்சிக்குள் உட்பட்டுப் பிறகு தனி உரிமை கொண்டது. இதற்குக் கல்வெட்டுச் சாசனங்களும், அருணகிரிநாதர் வாக்காகிய சேரர் கொங்கு நன்னாடு' போன்ற கூற்றுக்களுமே சான்றுகள் ஆகும். 'கொங்கு நாட்டின் தமிழ் வளர்ச்சியைக் குறித்து ஏனை நாட்டார் ஒன்றும் அறிய மாட்டார்கள். அதனை ஒரு சிறிது புலப்படுத்த இச்சிறு கட்டுரை வெளியிடப்பட்டது.

கொங்கு நாட்டின் தமிழ்ப்புலமை சங்ககாலம் முதற்கொண்டே விளங்கி வந்திருக்கிறது. சங்க நூல்களில் கொங்கு நாடு, கொங்கு மன்னர், கொங்கு மக்கள். கொங்கர் வீரம் ஆகியன பற்றி அடிக்கடி பாராட்டப் பட்டிருக்கின்றன.

புறநானூற்றில் நூற்று முப்பது பாடல்களில் கொங்கர்களைப் பற்றி ஏணிச்சேரி முடமோசியாரும் முந்நூற்று எழுபத்து மூன்றாம் பாடலில் கொங்கினைப் பற்றிக் கோவூர் கிழாரும் பாடியிருத்தலைக் காணலாம். மேலும், கொங்கு நாட்டுக் கோசர்களைப் பற்றிப் புறம் 169-ஆம் பாடலில் காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக் கண்ணனாரும் 396-இல் மாங்குடி மருதனாரும் பாடியுள்ளார்கள்.

இனி, கொங்கு நாட்டுக் குறுநில மன்னர் அதிகமானைப் பற்றிப் பல பாடல்கள் உண்டு. ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த அதிகமானும் இவனே. அவன் வமிசத்தினராகிய அதிக மான்கள் பலர் தகடூரில் ஆண்டவர். அவர்கள் வீரச்செயல்களைப் பற்றித் 'தகடூர் யாத்திரை' என்ற அரிய நூல் அக் காலத்திலேயே இயற்றப் பெற்றது. அந்நூல் முழுவதும் இப்போது கிடைக்கவில்லை. தகடூர் என்பது தற்காலத்

தருமபுரி. மேலும், கொங்கு மண்டலத்து இளங்கோசர் என்ற மன்னர் தமது நாட்டில் பத்தினிக் கடவுளுக்குச் சாந்தி செய்ததைச் சிலப்பதிகாரம் கூறும்.

ஆகவே, கொங்கு நாட்டுப் புலமை சங்க காலத்தி லேயே விளக்கமாக இருந்தது என்க.

சங்ககாலப் புலவர்கள்

இனி, சங்கப் புலவர் களிலே அடியிற் குறிக்கப் பெற்ற புலவர்கள் கொங்கு நாட்டவர்கள் என்று அவரவர்களுடைய ஊர்ப் பெயர்களைக் கொண்டு ஒருவாறாகத் திடமாகக் கூறமுடியும். அவர்கள் இயற்றியிருக்கும் செய்யுட்களிலிருந்து சில சிறந்த கருத்துக்களையும் எடுத்து எழுதுவோம்.

1. செங்குன்றூர் கிழார் : இவருடைய ஊர் கொடிமாடச் செங்குன்றூர் என்ற திருச்செங்கோடு. (சேலம் ஜில்லா) திருவள்ளுவ மாலையிற் கணட புலவர்களுள் ஒருவர். அவர் பாடிய வெண்பா,

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல் - நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்

- (திருவள்ளுவமாலை - 34)

இதில் திருவள்ளுவருக்கும் புலவர் பிறர்க்கும் உள்ள பேதத்திற்கு உவமை கூறுகின்றார். இவர் மதுரையில் தமிழாசிரியராக அமர்ந்தவர்.

2. பொன்முடியார் : இவருடைய ஊர் பொன்முடி (கோவை மாவட்டம்) இவர் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் நண்பர். ''தகடூர் யாத்திரை'' யில் இவரது பாடல் உண்டு. இவர் நண்பர் அரிசில் கிழார். பாடப்பட்டோன் தகடூர் அதிகமான் நெடுமான் அஞ்சி (கொங்கு நாட்டுவேள்). இவருடைய செய்யுட்கள்

புறநானூற்றில் மூன்றும்[1] திருவள்ளுவ மாலையில் ஒன்றும் உண்டு. காசிபன் தந்த குறள் (வாமனன்) மண்ணில் நின்று உலகத்தை அளந்தது; ஆனால், திருவள்ளுவர் தந்த குறள் விண்ணின்றும் மண்ணின்றும் உலகத்தை அளந்தது என்று பெருமையாகக் கூறினார்.

கானின்ற எதாங்கலாய் காசிபனார் தந்தது முன்
கூநின் றளந்த குறளென்ப-நூன் முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார்
தாநின் றளந்த குறள்.

3. பெருந்தலைச் சாத்தனார் : இவருடைய ஊர் பவானிக் கரையிலுள்ள பெருந்தலையூர். இவர் குமணனைப் பாடி - இளங்குமணனக்கிருந்த மாறுபாட்டைப் போக்கினவர். அக் குமணனும் கொங்கு நாட்டவனே (ஆன்பொருநைக் கரையிலுள்ள கொழுமம்) இவர் பாடியனவாகப் புறநானூற்றில் ஆறு செய்யுட்களும் அகநானூற்றில் இரண்டு செய்யுட்களும் நற்றிணையில் ஒரு செய்யுளும் இடம் பெற்றுள்ளன.[2]

4. அந்தி கீரனார்: இவருடைய ஊர் பவானி தாலூக்கா அந்தியூர் என்பது. இவர் இளங்கீரனார் எனவும் படுவர். இவர் பாடியது அகநானூற்றில் ஒரு பாடல்[3].

நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு, குறைந்தோர்
பயன் இன்மையின் பற்று விட்டு, ஒரூ உம்
நயன் இல் மாக்கள் போல, வண்டினம்
சுனைப் பூ நீத்து, சினைப் பூப் படர,
மை இல் மான் இனம் மருள, பையென
வெந்து ஆறு பொன்னின் அந்தி பூப்ப,
ஐயறிவு அகற்றும் கையறு படரோடு

---

1. புறநானூறு *299, 310, 312*
2. புறநானூறு *151, 164, 165, 205, 209, 294* அகநானூறு *13, 224* நற்றிணை *262*
3. அகநானூறு *71*

அகல் இரு வானம் அம்மஞ்சு ஈன,
பகல் ஆற்றுப்படுத்த பழங்கண் மாலை,
காதலர்ப் பிரிந்த புலம்பின் நோதக,
ஆர் அஞர் உறுநர் அரு நிறம் சுட்டிக்,
கூர் எஃகு எறிஞரின் அலைத்தல் ஆனாது,
எள் அற இயற்றிய நிழல் காண் மண்டிலத்து
உள் ஊது ஆவியின் பைப் பய நுணுகி,
மதுகை மாய்தல் வேண்டும்-பெரிது அழிந்து,
இது கொல்-வாழி, தோழி! என் உயிர்
விலங்கு வெங் கடு வளி எடுப்பத்
துளங்கு மரப் புள்ளின் துறக்கும் பொழுதே?

(அகநானூறு 71)

5. கருவூர்க்கதப்பிள்ளை : இவர் ஊர் கருவூர் (கொங்கு நாடு - *திருச்சி ஜில்லா)* பாடல் பெற்ற கொங்கு நாட்டுத் தலங்களுள் ஒன்று. இவரால் பாடப் பெற்றோன் நாஞ்சில் வள்ளுவன். நாஞ்சில் நாடு திருவிதாங்கூர்ச் சீமையில் தெற்குக் கோடியில் உள்ள தமிழ் வழங்கும் நாடு. இவர் பாடியன புறநானூற்றில் ஒரு பாடல் அகநானூற்றிலும் நற்றிணையிலும் ஒவ்வொரு பாடல்.* புறநானூற்றுப் பாடல், பிட்டங் கொற்றனைப் பாடியது.

6. கருவூர் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார்: இவரும் கருவூரே. இவர் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த தானைப் பாடினார்:

உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
முழூஉ வள்ளூர முணக்கு மள்ள
புலவுதி மாதோ நீயே
பலராலத்தை நின் குறியிருந் தோரே.[1]

---

* புறநானூறு *168*-அகதானூறு *309*-நற்றிணை *343*

1 புறநானூறு *219*

7. கருவூர்க்கோசனார் இவரும் கருவூரே. கோசன் கொங்கு நாட்டுப் பண்டைக் குடிவகை பாலைத் திணையில் இவர் பாடிய ஒரு பாடல் நற்றிணையில் இடம் பெற்றுள்ளது:

இசையு மின்பமு மீதலு மூன்றும்
அசையுந ரிருந்தோர்க் கரும்புணர் வின்மென
வினைவயிற் பிரிந்த வேறுபடு கொள்கை
அரும்பவி ழலரிச் சுரும்புண் பால்போது
அணிய வருதும் நின் மணியிருங் கதுப்பென
எஞ்சா வஞ்சினம் நெஞ்சுணக் கூறி
மைசூழ் வெற்பின் மலைபல விறந்து
செய்பொருட் ககன்ற செயர் தீர் காதலர்
கேளார் கொல்லோ தோழி தோள
இலங்குவளை நெகிழ்த்த கலங்கஞ ரெள்ளி
நகுவது போல மின்னி
ஆர்ப்பது போலுமிக் கார்ப்பெயற் குரலே.[2]

8. உரோடோகத்துச் கந்தரத்தனார் : உரோடாம் என்பது உலகடம் என இக்காலம் மருவிற்று. (பவானி தாலுக்கா) இவர் பாடியனவாகக் கொள்ளத் தக்க சங்க இலக்கியப் பாடல்கள் எட்டாகும்.[3]

சமணப்புலவர்கள்

சமணர்கள் தமிழ் நாட்டில் சங்க காலம் முதற் கொண்டே தமிழை ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் அந்நாளிலேயே கொங்கு நாட்டிலும் குடியேறியிருக்கிறார்கள்.

---

2. நற்றிணை 214

3. அகநானூறு 23, 95, 191- குறுந்தொகை 155 நற்றிணை 116, 146, 238, 306 சமாஜப் பதிப்பில் 'கந்தரத்தனார்' என்ற அளவே பெயா காணப்படு கின்றது. ஐயரவர்களின் குறுந்தொகைப் பதிப்பிலே உரோடகத்துக் காரத்தன் எனவும், பிரதிபேதமாக ஒ ரோடகத்துக் கந்தரத்தனார் எனவும் காண்கிறோம்.

மற்ற நாடுகளில் இருப்பதைப் போலக் கொங்கு நாட்டிலும் மலைகளில் சமணப் படுக்கைகள் இருப்பதே அதற்குச் சான்று. ஆறு நாட்டார்மலை (புகலூருக்கருகில் உள்ள வேலாயுதம் -பாளையம்) - ஐவர் மலை (பழனி தாலுக்காப் புஷ்பத்தூருக்கு அருகில் உள்ளது)- இவைகளில் அப் படுக்கைகள் உண்டு. பண்டைக் கல்வெட்டுக்களும் இருக்கின்றன. மேலும், அரசண்ணாமலை (விஜய மங்கலத்திற்கு அருகு, திரிமூர்த்திமலை (உடுமலைப் பேட்டையிலிருந்து 12 கல், என்பவைகளில் கோயில்கள் இருக்கின்றன. திரிமூர்த்திமலைப் பிம்பம் சமண தீர்த்தங்கரருடையதே. அரசண்ணாமலை நேமிநாதர். இவைகளேயன்றி, விஜயமங்கலம் (சந்திரப் பிரபாகர்).

திங்களூர் - (புஷ்பநாதர்),

வெள்ளோடு - (ஆதிநாதர்),

பூந்துறை - (பரதசநாதர்),

சீனாபுரம் - (ஆதிநாதர்)

ஆகிய ஊர்களில் சமண ஆலயங்கள் உண்டு. இங்கே பூசை செய்யும் சமணக் குடும்பங்கள் தலைமுறை தலைமுறையாக இன்னமும் இருக்கின்றன. இங்கே குடியேறிய, சமணர்கள் ஆலயங்கள் கட்டிச் சங்கம் நிறுவித் தமிழைப் போற்றி வந்தார்கள். அச்சமணப் புலவர்களே கொங்கு நாட்டின் தமிழ்ப்புலமையைச் சிறப்பித்துக் காட்டினவர்கள். கி. பி. 2 ஆம் நூற்றாண்டு முதல் 9 ஆம் நாற்றாண்டு வரை கொங்கு நாடு தலைக்காட்டு மன்னர் களால் ஆளப்பட்டது. அவர்கள் கங்க வம்சத்தினர் அவர்களிலே பல பேர் சமணர்களாக இருந்தார்கள். அவர்கள் ஆதரவிலே கொங்கு நாட்டில் சமணம் முன்னேறியிருக்கலாம். இனி, அச்சமணப் புலவர்களில் சிறந்த புலவர்களைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

1. கொங்கு வேளிர் இவர் வாழ்ந்து விளங்கியது விஜயமங்கலம். வடநாட்டில் பைசாச மொழியில்,

குணாட்டியர் எழுதிய 'பிரகத் கதா' என்ற சிறந்த நூலைத் தமிழ் ஆக்கி, அதற்குப் பெருங்கதை' அல்லது 'மாக்கதை' என்ற பெயர் தந்து அகவற்பாவில் இயற்றியுள்ளார். இது ஐம்பெருங்காப்பியங்களோடு ஒப்பிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றது. இப்போது தமிழ் நூல் முழுதும் கிடைக்கவில்லை. கிடைத்த பகுதி மட்டும் வெளிவந்துள்ளது. பைசாச மொழியில் குணாட்டியர் எழுதியதைக் கி. பி. 570-இல் கொங்கு நாட்டை ஆண்ட கங்கருள் அரசன் அவனீதன் என்ற துர்விநீதன் என்பான் வடமொழியில் இயற்றினான். அதனை முன்னிட்டுக் கொங்குவேளிர் இதனைத் தமிழில் செய்திருக்கலாம்.

2. அடியார்க்கு நல்லார் இவரது ஊர் குறும்பு நாட்டு நிரம்பையூர். குறும்பு நாடு கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளில் ஒன்று. 'கொங்கில் குறும்பில் குரக்குத்தளி யாய்' என்பது சுந்தரர் வாக்கு. மலை நாட்டு இளங்கோவடிகள் அருளிச் செய்த சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரை கண்ட பெரியார் இவரே. இவரது உரை இல்லாவிடில் பல பண்டைக் காலத்து வழக்கங்களும் பொருள்களும் நமக்குக் கிடைக்காமல் மறைந்து போயிருக்கும்.

3. பவணந்தி முனிவர் இவரது ஊர் சனகை என்பது. இவ்வூர் கொங்கு நாட்டில் திங்களூருக்கு அடுத்துள்ள சீனாபுரம் என்று தெரிகிறது. இவ்வட்டத்தில் சமண ஆலயங்கள் பெரும்பான்மை இருத்தல் காண்க. இதைச் சன நாதபுரம் என்றும், அது தொண்டை மண்ட லத்தைச் சார்ந்த தென்றும் இதுகாறும் எண்ணப்பட்டது. இம் முனிவர் நன்னூல் என்ற சிறந்த தமிழ் இலக்கண நூல் இயற்றிய பெரியார். இவ்விலக்கணமே இக்காலத்து மாணவர்களுக்குப் பெரும் உதவியாக இருப்பது.

4. குணவீர பண்டிதர் இவர் நேமிநாதம், வச்சணந்திமாலை என்ற இரண்டு இலக்கண நூல்களை இயற்றினவர். இவருடைய ஆசிரியர் வச்சணந்தி முனிவர்.

5. வச்சிணந்தி முனிவர் : இவரும் இவருடைய மாணாக்கர் குணவீர பண்டிதரும் கொங்கு நாட்டு வாரக்கா நாட்டுக் களந்தையில் இருந்தவர்கள். இவ்வூர் இப்பொழுது ஒரு சிறந்த சிவத்தலமாக இருக்கிறது. சுவாமியின் பெயர் ஆதித்தேசுவரர். ஆலயம் புராதனமானது. கொங்குச் சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் உண்டு. இவ்வூரைக் கருவூர்த் தேவரும் திருவிசைப்பாவில் ஒரு பதிகத்தில் பாடியுள்ளார். இவ்வூர்ச் சுற்றுப் புறங்களில் அமணலிங்கேசுவரர் ஆலயங்கள் உண்டு, சில கல்வெட்டுக்களில் ஆதிபுரீசர் என உள்ளதும் கவனிக்கத் தக்கது. ஆதிநாதர் என்ற தீர்த்தங்கரருக்குச் சம்பந்தம் இருக்குமா?.

6. கார்மேகக் கவிஞர் : இவரது ஊர் விசய மங்கலம். இவரே கொங்கு மண்டல சதகம் பாடியவர்.[1] பண்டைக் காலத்து அரிய சரிதங்களை அழியாமல் நிலை நிறுத்திக் கொங்கு நாட்டிற்குப் பேருதவி செய்தவர் இவருடைய உறவினர்கள் இன்னும் விஜய மங்கலத்தில் குடியிருக்கின்றனர்; அவ்வூர் நெட்டைக் கோபுரம் என்ற சந்திர நாதர் சன்னிதியில் அர்ச்சகம் புரிந்து வருகின்றனர்.

மேலே கூறியுள்ள வகையில் கொங்கு நாட்டுச் சமணப் புலவர்கள் காப்பியம், இலக்கணம், பிரபந்தம் இவைகளில் மிகச் சிறந்த நூல்களை வெளியிட்டுள்ளார் கள் என அறியலாம். இவைகளால் தமிழ் ஆக்கத்திற்கே மிகச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. கொங்குவேள் மாக்கதையினால் வெறுங்கதை இன்பம் மட்டும் ஒல்லாமல் அக்காலத்துத் தமிழர் நாகரிகச் சிறப்புக்கள் பலவும் - அறியக் கிடக்கின்றன. பொறிகள். இசைக் கருவிகள், இசையின்பம், மகளிர் விளையாட்டுப் பொருள்கள் முதலிய பல குறிப்புகளையும் அறியக் கூடும்.

---

1. கொங்கு மண்டல சதகம் மூன்று: அவற்றுள் ஒன்று சிறப்பானது கார் மோகச் கவிஞர் பாடியதாகும்.

சித்தர்கள்

தமிழ் மொழியில் மருத்துவம், தத்துவம், சமயம் ஆகிய அறிவு இயல்களை ஆராய்ந்து வெளியிட்ட பெரியார்கள் சித்தர்களே ஆவார்கள். கொங்கு நாட்டில் பல பெரிய சித்தர்கள் - தோன்றிப் பல இயல்களை ஆராய்ந்து நூல்களையும் அருளிச் செய்திருக்கின்றனர். அவர்களைப் பற்றிச் சில விவரங்களைக் குறிப்போம்.

1. கருவூர்ச்சித்தர் : இப்பெரியார் அவதரித்தது கருவூர். பத்தாம் நூற்றாண்டில் இருந்தவர். திருமுறை களில் அடங்கியுள்ள திருவிசைப்பா அருளிச் செய்தவர் அதில் களந்தை ஆதித்தேசுவரத்தைப் பற்றிய தொன்று உள்ளது. இதுவே கொங்கில் 'வாரக்கா நாட்டுக் களந்தை ஆகும். இது பண்டைத்தலம். தஞ்சை இராச ராசேகவரத்தைப் பாடி அங்குப் பெருவுடையாரை நிலைக்கச் செய்தவரும் இவரே. கருவூர்ப் பசுபதீச்சுரத் தில் இவரது ஆலயம் இருக்கிறது.

2. கஞ்சமலைச் சித்தர்: இவர் திருமூலர் மரபினர். கஞ்சமலையில் சித்து விளைவித்தவர். கஞ்சமலை என்பது கொங்கு நாட்டுச் சேலத்துக்கருகில் உள்ள ஒரு நீண்ட மலை. சித்தர் இம்மலையையே புடம் வைத்துத் தங்கம் வி ளை வித்ததாக ஐதீகம் வழங்குகிறது. இவருடைய சரிதம் அடுத்து உள்ள காபுரம் என்ற வைப்புத் தலத்துப் புராணத்தில் காண்க.

3. போகர், புலிப்பாணி : போகர்' பழனிமலையில் ஐக்கியமானவர். அங்குள்ள முருகக் கடவுள் உருவம் இவரால் உண்டாக்கப் பெற்றதென்பர். இவரது வைத்திய நூல்கள் ஆயிரக்கணக்கான செய்யுட்களைக் கொண்டவை.

4. கொங்கண சித்தர்: இவர் தாராபுரம் தாலூக்கா ஊதியூர் மலையில் ஒரு குகையில் தவம் செய்தவர், இம்மலைக்குக் கொங்கண மலை என்று பெயர். இதற்குத் திருப்புகழ்ப்பாடல் உண்டு.

5. இசைஞானியார் : இச்சித்தர் கொங்கு மண்டலத் தில் தென்கரை நாட்டில் இருந்தவர். இவரைப் பற்றிக் கொங்கு மண்டல சதகத்தில் காண்க.

6. பாம்பாட்டிச் சித்தர் : இச்சித்தர் கோவைக்கு வட மேற்கில் உள்ள மருதமலையில் இருந்தவர். அம்மலை யில் பாம்பாட்டி சுனை முதலிய சான்றுகளை இன்றும் காணலாம். இச்சித்தர் பாடிய பாடல்கள் சிறந்த தத்துவ ஞானத்தை வெளிப்படுத்துபவை.

புராண ஆசிரியர்கள்

ஏனைய தமிழ் நாடுகளைப் போலக் கொங்கு நாட்டி லும் புனிதத் தலங்களுக்குப் பல செய்யுட்கள் ஏற்பட்டி ருக்கின்றன. அவைகளில் சில மிகச் சிறந்த இலக்கிய நூல்கள். அவற்றில் பல அச்சாகி இருக்கின்றன. சில அச்சுப் பெறவில்லை. தெரிந்த மட்டில் கீழே குறிப்பிடு வோம்.

பாடல் பெற்ற தலங்கள்

1. அவிநாசிப் புராணம் : இதனை இயற்றியவர் இளையான் கவிராயர். அவர் ஊர் குன்றிடம் (குண்டடம் தாராபுரம் தாலுக்கா) சைவ வேளாளர். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். நூல் பதின் மூன்று சுருக்கமாக *1020* செய்யுட்கள் கொண்டது.

2. திருமுருகன் பூண்டித் தலபுராணம்: இதனை இயற்றியவர் வித்வான் வாசுதேவ முதலியார். ஓராட்டுக் குப்பை செட்டிபாளையம் (கோவை தாலுக்கா) சைவ (வேளாளர் நூற்றிருபது ஆண்டு களுக்கு முன் இருந்தவர். *11* சருக்கம்; *618* செய்யுள்கள் கொண்டது.

3. பவானிப் புராணம் : மேற்படியார் இயற்றியது. *18* சருக்கம் *901* செய்யுட்கள்.

4. திருச்செங்கோட்டுப் புராணம்: இயற்றியவர் கவிராசபண்டிதர், காசிப கோத்திரம் சங்கர நாராயண ஐயர் குமாரர். அந்தணர் 15 சுருக்கம், 1223 செய்யுட்கள்.

5. கொடுமுடிப் புராணம் இயற்றியவர் வேங்கட ரமணதாசர். ஊர் சாமக்குளம் (கோவை தாலூக்கா). பிராமண குலம். வைணவராய்ப் பிறந்து சைவர் ஆனவர் 12 சுருக்கம், 819 செய்யுட்கள்.

6. கருவூர்ப் புராணம் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை . சத்தியஞானிகள் சீடர். இயற்றிய காலம் 1618 கி. பி. 2 ந சருக்கம் 1529 செய்யுட்கள்.

7. வெஞ்சமாக் கூடற்புராணம் அச்சாகவில்லை, விவரம் தெரியவில்லை. கொங்கு மண்டல சதகப் பதிப்பில் இதிலிருந்து மேற்கொள் எடுத்தாளப்பட்டுள்ளது.

வைப்புத் தலங்கள்

1. திருப்பேரூர்ப் புராணம் இயற்றியவர் கச்சியப்ப முனிவர். சிவஞான முனிவர் மாணாக்கர். சைவ வேளாளர். பல நூல்களை இயற்றியபின் 20.4.1790-இல் ஐக்கியமானார். மிகச் சிறந்த செய்யுள் நடை கொண்டது. 36 படலம் 2220 செய்யுட்கள்.

2. பிறவாநெறிப் புராணம் அல்லது பட்டிப்புராணம் இதுவும் பேரூர்த்தலத்தைப் பற்றியதே, அச்சாகவில்லை. ஆசிரியர் பற்றிய விவரங்கள் தெரிய வில்லை . கி.பி. 1608-இல் இயற்றப்பெற்றது. 6 சுருக்கம் 342 செய்யுட்கள். - 3. குரக்குத்தளிப் புராணம் குறும்பு நாட்டில் உள்ள ஒரு வைப்புத்தலம். சுந்தரரால் பாடப் பெற்றது. இப்போது பெரியபாளையம் என்று வழங்குகிறது. அச்சாகவில்லை ; விவரம் தெரியவில்லை.

4. சேவூர்ப் புராணம் சேவூர் ஒரு வைப்புத்தலம். -மாட்டூர் என்னப்பட்டது. அருகில் மொக்கணீசுரம் உள்ளது (திருவாசகம்) ஆசிரியர் கொடுமுடி சிவஞான தேசிகர்.

5. அன்னியூர் புராணம் இஃது அன்னியூர் என்றும் அன்னூர் என்றும் வழங்குகிறது. பழைய பெயர் மன்னியூர். கோயில் பழையது கல் வெட்டுக்கள் உண்டு. அதில் வடபாரிசா நாட்டு மன்னியூர் என்று கண்டிருக் கிறது. வீரராசேந்திரன் (1203-1252) என்ற கொங்குச் சோழன் காலத்தில் இங்கே திருப்பள்ளி யெழுச்சி பாடப்பட்டது. சம்பந்தர் மடமும் இருந்தது. இதற்குச் சமீபத் தில் ஒரு செய்யுட்புராணமும் அன்னூர்ச் சிலாசாசன ஆராய்ச்சி என்ற நூலும் வெளிவந்துள்ளன, படலம் 1, செய்யுள் 339.

6. தகடூர், தருமபுரி என்றது தற்காலப் பெயர். இவ்வூரைக் குறித்து தகடூர் யாத்திரை என்ற சங்க நூல் இருந்தது.

7. திருக்கரபு புராணம் : இயற்றியவர் விவரம் தெரியவில்லை. இவ்வூர் சேலம் இளம்பள்ளிக்கு அருகிலுள்ளது. உத்தம சோழபுரம் என்பது தற்காலப் பெயர். பழைய கோயில்.

ஏனைய சிவத்தலங்கள்

1. துடிசைப் புராணம் : ஊர் கோவைக்கு வடக்கே ஆறு கல்லில் உள்ளது. தற்போது துடியலூர் எனப்படும். புராண ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கொங்குச் சோழன் குலோத்துங்கன் காலத்தில் இயற்றப்பட்டதாக நூல் கூறுகிறது. 15 சருக்கம் 516 செய்யுட்கள் சுவாமி பெயர் விருந்தீசுவரர். சுந்தரர் இங்கு எழுத்தருளியதாக இந்நூல் கூறுகிறது.

2. பழநித் தல புராணம் : ஆசிரியர் பாலசுப்பிரமணியக் கவிராயர். ஊர்; பழநி துளுவவேளாளர். இயற்றியவர்காலம் கி.பி. 1618-13 சருக்கம் 987 செய்யட்கள், பழநி என்ற பெயர்க்காரணம் மயில் மீது முருகப்பெருமான் வலம்

வந்தவுடன் 'பழம் நீ' என ஈசன் கூறி தழுவி முத்தமிட்டதினால் பெயர் ஏற்பட்டதாம்.

3. அப்பிரமேயத் தல புராணம் : இயற்றியவர் இளையான் கவிராயர். இவரே அவிநாசிப் புராணமும் இயற்றியவர். இத்தலம் தாராபுரம் தாலூக்கா அமராவதிக் கரையில் உள்ளது. 10 சருக்கம் 490 செய்யுட்கள்.

4. திருவெள்ளூர்ப் புராணம் : இயற்றியவர் அஷ்டாவ தானம் சொக்கலிங்கப் புலவர், சைவர் குடி, கூடற்கிழார் - ஊர் குன்றத் தூர் வெள்ளூர்-பேளூர் என்று வழங்குகிறது - சருக்கம் 13 செய்யுட்கள் 653.

5. பாவநாசம் புராணம் : இயற்றியவர் மேலே சொன்ன சொக்கலிங்கப் புலவர். இது சேலம் - சுகவனேசுவர் ஆலயத்தைப் பற்றியது. பழைய கோயில் கல்வெட்டு உண்டு. அதன்படி சுவாமி கிளிவண்ண நாதர் சருக்கம் 12 செய்யுட்கள் 672.

6. தீர்த்தகிரிப் புராணம் ஆசிரியர் சைவ எல்லப்ப நாவலர். அருணாசல புராணம் முதலியவை இயற்றினவர் என்பர். முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். சருக்கம் 14, செய்யுட்கள் 445 சேலம் ஜில்லா ஹரூர் தாலுக்காவில் இவ்வூர் உள்ளது.

7. சிவமலைத்தல புராணம் ஆசிரியர் சீர்காழி அம்பலவாணக் கவிராயர். சருக்கம் 14. செய்யுள்கள் 497.

8. தென்சேரிகிரிப் புராணம் ஆசிரியர் அம்மையப்பர் கருணீகர் குலம்; உரையாசிரியர் பெயர் தெரியவில்லை . அச்சு ஆகவில்லை. 12 சருக்கம் 25. செய்யுட்கள் தென் சேரிகிரி செஞ்சேரி என வழங்கும். முருகன் சன்னிதி, -பல்லடம் தாலூக்கா. திருப்புகழ் உண்டு.

9. தாராபுரத்தல புராணம் இயற்றியவர் வேலாயுத பண்டிதர், ஊர் தாராபுரம் வீமராயர் அக்கிரகாரம், நாவித குலம், சமீப காலம் - 243 செய்யுட்கள்.

10. திரிமூர்த்திமலைப் புராணம் இயற்றியது மேலே கண்ட பண்டிதர். படலம் 18, செய்யுட்கள் 963 உரை நடையிலும் செய்தவர்.

11. கௌசைப் புராணம் இயற்றியவர் கௌமார மடத்துக் கந்தசாமி சுவாமிகள். கௌசை என்பது கோவைத் தாலூக்காக் கோவில்பாளையம். 193 செய்யுட்கள்.

வைணவத் தலங்கள்

காரமடைப் புராணம் இயற்றியவர் இராமானுச தாவலர். ஊர் கரடிவாவி (பல்லடம் தாலூக்கா) -காரமடை அரங்கநாதர் சன்னிதி பெயர் பெற்றது.

ஏனைய புராணங்கள்

1. சைவ புராணம் இயற்றியவர் மேலே கூறிய வேலாயுத பண்டிதர். சைவ புராணக் கதைகளைச் சுருக்கமாகச் செய்யுள் நடையில் கூறியுள்ளார்.

2. வேளாளர் புராணம் இயற்றியவர் கந்தசாமிக் கவிராயர், ஊர் - வீராச்சி மங்கலம் (தாராபுரம் தாலூக்கா).

3. தேவாங்க புராணம் இயற்றியவர் மாம்பழக் கவிராயர். ஊர் பழநி, குலம் விசுவகருமர். பழநித் திருவாயிரம் முதலிய பல பிரபந்தங்களை இயற்றியவர்.

4. க்ஷத்திரிய புராணம்: இயற்றியவர் இராமானுச நாவலர் ஊர் - கரடிவாவி.

5. பலிசவாகு புராணம் : செ. ப. நரசிம்மலு நாயுடு கலா நிதி ஆசிரியர்.

இப்புராணங்களில் பேரூர்ப் புராணம், அவிநாசிப் புராணம், கருவூர்ப் புராணம், தீர்த்தகிரிப் புராணம் என்பவைகள் செய்யுள் நடையிலும் பொருட் சிறப்பிலும் மிகப் பெயர் பெற்றவை.

மற்ற இலக்கியங்கள்

காப்பியங்கள்

1. தக்கை இராமாயணம் : ஆசிரியர் எம்பெருமான் பித்தர்பாடி இடையர் குலம் சங்ககிரி துருக்கம் (சேலம்)

2. குமுண சரித்திரம்: ஆசிரியர் மா.ரா. கந்தசாமிக் கவிராயா. கொழுமத்தில் இருந்த குமண வள்ளலைப் பற்றியது. தேசிய உணர்ச்சி ததும்பிய பாடல்கள்.

3. அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை : ஆசிரியர் அரங்க. நாத கவிராயர் தளவாயப் பேட்டை (பவானி) தேவாங்கர் 30 சருக்கம், 1452 செய்யுட்கள்.

நிகண்டுகள்

1) உரிச்சொல் நிகண்டு : ஆசிரியர் காங்கேயர் ஊர் காங்கயம்.

2) உசித சூடாமணி : ஆசிரியர் ஊற்றுக் குழி சிதம்பரம் பிள்ளை (போ-தா) ப. சங்கரமூர்த்தி பிள்ளை குமாரர். ஒரு நல்ல நிகண்டு நூல்.

சதகங்கள்

1. அறப்பளீசுர சதகம் : இயற்றியவர் அம்ப ல வாணக் கவிராயர். இது கொல்லிமலை வைப்புத்தலம். நீதி நூல் அழகான பாடல்கள்.

2. சோழீசுர சதகம் ஊதியூர் சோழிசுரர் (தாரா புரம்) மீது பாடப்பட்டது.

3. நந்தமண்டல சதகம் - விவரம் தெரியவில்லை.

4. கார்மண்டல சதகம் ஆறைகிழார் இயற்றியது. ஊர் அவி நாசி, கார்காத்த வேளாளரைப் பற்றியது. கார் மண்டலம் கன்னட நாடு என்று கூறும்.

5 கருணாம்பிகை சதகம்: செட்டிபாளையம் (கோவை) வாசுதேவ முதலியார் இயற்றியது. அழகிய பாடல்கள்,

6. மருதாசலமூர்த்தி சதகம்: விவரம் இல்லை .

7. கஞ்சகிரி சித்தேசர் சதகம்: அனந்த நாராயண சர்மா ஆக்கிய நூல்.

குறவஞ்சி

1. பாம்பண கவுண்டன் குறவஞ்சி - பவானி பால் பார்தி முத்துசாமி அய்யர் இயற்றியது.

2. திருச்செங்கோட்டுக் குறவஞ்சி.

3. அமரவிடங்கள் குறவஞ்சி

4. பொங்கலூர்க் குறவஞ்சி - பாமயளப் புலவர்

5. கெங்க நாயக்கர் குறவஞ்சி (கோமங்கலம்)

கோவை

1. அசதிக் கோவை ஔவையார் அசதி மேல் பாடியது.

2. பட்டீசுரக்கோவை - தொண்டாமுத்து சிதம்பர தாண்டவராய முதலியார். செய்யுட்கள் 400

3. உலகுடையான் கோவை

4. கோமள மன்றாடியார் கோவை

5. பட்சிக் கோவை

நாடகம்

1. இரணிய நாடகம்

2. வாணாசுர நாடகம்

3. தொண்டலூர் அரக்கி நாடகம்- வீரபத்திரக் கவுண்ட ர்.

4. அதிசய நாடகம் - கந்தசாமிக் கவிராயர்.

அம்மானை

1. கள்ளழகர் அம்மானை

2. தொட்டராய அம்மானை

பிள்ளைத் தமிழ்

1. மருதாசலக் கடவுள் பிள்ளைத் தமிழ்
அருணாசலக் கவிராயர்; வடவழி செங்குந்தர்

2. கருணாம்பிகை பிள்ளைத் தமிழ்

3. பச்சை நாயகியம்மன் பிள்ளைத் தமிழ்

பள்ளு

1. முக்கூட்டுப் பள்ளு - பழனிசாமிப்பிள்ளை தடாகம்

கலம்பகம்

1 திருச்செங்கோட்டுக் கலம்பகம் - சுந்தர முதலியார்

சில்லறைப் பிரபந்தங்கள்

அண்மைக் காலத்தில் நூறு புலவர்கள் வரை பல பிரபந்தங்களை இயற்றியுள்ளார்கள். மாலை, விருத்தம், மஞ்சரி, ஊஞ்சல், உலா, தூது, பதிகம் முதலிய பல எழுதப்பட்டன. இசை நூல்களாகிய யக்ஷகானம் முதலியவைகளும் எழுதப்பட்டன. நூறு ஆண்டுகள் அளவில் முந்தி இந்நாட்டிலே தெலுங்குப் பாடசாலை களும் தெலுங்குப் புலவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் சாரங்கதா' யக்ஷகானம் என்ற ஒரு அருமையான நூல் இயற்றியுள்ளார்.

6. வெளிநாட்டுப் புலவர்கள்

மேலே கூறிய வகைகளேயன்றி வெளிநாட்டிலிருந்து பல புலவர்கள் கொங்கு நாட்டில் தங்கிச் சென்றிருக் கின்றனர். சைவ சமயக் குரவர்கள், அருணகிரியார் இரட்டைப் புலவர், காள மேகம், சாந்தலிங்கர் முதலிய பல பெரியார்கள் இங்கே வந்து பல பிரபந்தங்களை இயற்றியுள்ளார்கள். தலத் தேவாரங்கள், திருப்புகழ்கள், வசைப் பாடல்கள், தனிப்பாடல்கள், கொலை மறுத்தல் முதலிய சமய நூல்கள் பல

புராணங்கள் முதலியவைகள் வெளிநாட்டிலிருந்து இங்கு வந்த புலவர்களாலே அவர்கள் இங்குத் தங்கியிருந்தபோது பாடப்பட்டன.

முடிவாக ஒரு கருத்துக் கூற வேண்டியிருக்கிறது. இயல் இசை நாடகம் என் முத்தமிழ் வகைகளிலும் கொங்கு நாடு தமிழ் அரசியின் ஆட்சிக்குத் தன் பங்குக் கப்பம் செலுத்தியிருக்கறது. இலக்கியமேயன்றி இலக்கணமும் அக்கப்பத்தில் அடங்கியிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முந்திக் குக்கிராமங்களில் இராக் காலங்களில் இசையுடன தெருச் கூத்துக்கள் என்ற நாட்டு நாடகங்கள் நடை பெற்று வந்தன. கிராமாந்தரங்களில் திருவிழாக்காலங்களில் அழகான நாட்டுப் பாடல்கள் பாடப்பட்டன. அவைகளில் சிறந்தது கள்ளழகர் அம் மானை. அது சரித்திரச் சார்பானது. கொங்கு நாட்டில் வேளாளர்களுக்கும் வேட்டுவர்களுக்கும் நடந்த ஒரு. பெரும் போரைப் பற்றியது. அப்பாடல்களை இப்போது அண்ணன் மார் கோயில்களில் நடக்கும் திருவிழாவின் போது இசைப்பார்கள். அப்பாடல்களில் பல பண்டைய வழக்கங்களும் கூறப்பட்டுள்ளன. ஆகவே தமிழ் அணங்கு கொங்கு நாட்டுப் புலவர் பெருமக்களால் பலவித அரிய அணிப்பாக்களாலே அழகு படுத்தப்பட்டாள் என அறிய வேண்டும்.

2. இன்பச் சுவை

குழந்தை பிறந்ததும் முதலில் கேட்கும் கேள்வி. 'அழுததா?' என்பது. அதனால் அது உயிர் பெற்றிருக்கிறது. பசி கொள்ளுகிறது, மேலும் கேட்கிறது என்பது கருத்து. இரண்டாவது கேள்வி 'அது சிரிக்கிறதா?' - என்பது. 'அது மகிழ்ச்சி அடைகிறதா' என்பதை அறிய இந்தக் கேள்வி. அதனாலே அது மகிழ்ச்சி அடைகிறது என்பது கருத்து. மகிழ்ச்சி உற்றால் குழந்தை இன்பம் அடைகிறது அதனால் அது சிரிக்கிறது என்பதை அறிகிறோம். எல்லா உயிர்களும் இன்பம் அடைகின்றன. எறும்பு முதல் யானை வரை உள்ள சகல உயிர்களும் இன்பம் அடைகின்றன. இன்பம் நுகரும் போது உடல் புளகாங்கிதம் அடையும். அதனை 'மெய்ப்பாடு' என்று தமிழில் கூறுவார்கள்.

மெய்ப்பாடுகள் தமிழில் எட்டு. வடமொழியில் ஒன்று மிகுதியாக இருக்கிறது. அவற்றை 'ரசங்கள்' அல்லது 'சுவைகள்' என்கிறார்கள்.

தமிழ்	வடமொழி
1. உவகை	சிருங்காரம்
2. அழுகை	கருணம்
3. பெருமிதம்	வீரம்
4. வெகுளி	ரௌத்திரம்
5. நகை	ஹாஸ்யம்
6. அச்சம்	பயா நசம்
7. இளிவரல்	பீபத்சம்
8. மருட்கை	அற்புதம்
9. (நடுவு நிலை)	சாந்தம்

மெய்ப்பாட்டிற்கும் இரசம் அல்லது சுவைக்கும் வேற்றுமை இல்லையா? மெய்ப்பாடு என்பது உடல் காட்டும்

வேற்றுமை அல்லது பேதம். இந்த உடல் விகாரத்தை வைத்துக்கொண்டு மூளை அடையும் உணர்ச்சியை மெய்ப்பாடு தெரிவிக்கும். இது நாடகம் அல்லது ஆடலில் காணலாம்.

தமிழ்ச் சொற்களுக்குச் சமமாகக் கூறப்படும் - வடமொழிச் சொற்கள் முழுமையாகப் பொருத்தமாக இல்லை எனலாம். எடுத்துக்காட்டாக, சிருங்காரம் என்ற சொல்லின் பொருளை உவகை என்ற தமிழ்ச் சொல் குறிக்கிறதா? இளிவரல் என்பது பீபத்சம் ஆகுமா? இளிவரல் என்பது எளிமையாதல் என்ற பொருள் படும். அது இழிவரல் என்றிருத்தலே தகுதி. இவை போல் மற்றவைகளையும் ஆராய்க.

பேராசிரியர் மெய்ப்பாடுகள் எட்டை வீரம், அச்சம் வியப்பு, இழிவு, காமம், அவலம், நகை, நடு நிலை என்பன என்றார். உருத்திரத்தைச் சேர்த்து ஒன்ப தென்றார். உருத்திரம் (வெகுளி) இதனை விடுத்து ரெளத்திரம் சேர்த்துச் சாந்தத்தை விடுத்தார்.

மேலும் ஒவ்வொரு ரசத்திற்கும் வெவ்வேறு ‘ஸ்தாயீபாவம் உண்டென்பர்.

இரசம்	ஸ்தாயீ பாவம்
1. சிருங்காரம்	ரதி (காதல்)
2. கருணம்	சோகம்
3. வீரம்	உற்சாகம்
4. ரௌத்திரம்	குரோதம்
5. ஹாஸ்யம்	ஹாசம் (நகை)
6. பயாநகம்	பயம் (அச்சம்)
7. பீபத்சம்	ஜுகுப்சை (அருவருப்பு)
8. அற்புதம்	விஸ்மயம் (ஆச்சரியம்)
9. சாந்தம்	நிர்வேதம் (பற்றின்மை)

நிலை பெற்ற பாவமே ரசம் ஆகும். எடுத்துக் காட்டாக நகை (ஹாசம்) என்னும் பாவத்திற்கு ஹாஸ்யம் என்னும் சுவை தோன்றும். ஆனால், தொல்காப்பியனார் பாவத்திற்குரிய பெயரையே சுவைக்கும் கூறியுள்ளார். அவற்றின் அமைதி அரிது.

சுவைகளுள் கருணம் ஒன்றே பல்வேறு இரசங்களாக மாறும் என்பாரும், அற்புதரசம் ஒன்றே பல்வேறு சுவை யாகிறது என்பாரும், சிருங்கார ரசம் ஒன்றே சிறந்தது என்பாரும் உளர். இந்தக் கருத்தில் உண்மை இல்லாமல் இல்லை. அநுபவத்தால் அறியலாம்.

மெய்ப்பாடுகளின் தோற்றம்

மெய்ப்பாடுகள் வெகு நன்றாகத் தோன்றுவது நாடகம் அல்லது ஆடலிலே. அடுத்தபடியாகத் தோன்றுவது இசையிலே. அதற்கும் அடுத்தபடியாகத் தோன்றுவது பேச்சினிலே. பிறகு தோன்றுவது கவிதையினிலே. நன்றாக நடிக்கிறவன் தன் உணர்ச்சிகளை வெகு தெளிவாகத் தன் ஐம்புலன்களிலும் அவைகளைக் குறிக்கும் சைகைகளினாலும் காட்டுவான். பாடுகிறவனும் பேசுகிறவனும் தன் ஓசையின் பலவிதத் தொனிகளாலும் பலப்படுத்துவான். கவிதை இயற்றுபவன் அக்கவிதையில் பயன்படுத்தும் சொற்களால் எடுத்துக் காட்டுவான். கவிதையால் காட்டுவது மிகக் கடினம். அதனுடைய பயன் உணருகிறவன் விற்பத்தியைப் பொறுத்து நிற்கிறது. ஆகவே, மெய்ப்பாடு என்பது உணர்த்துகிறவன் உணருகிறவன் இருவரிடமும் உண்டாகும்.

3. அவலச் சுவை

குழந்தை பிறந்ததும் அது அழுகிறதா என்று உறவினர்கள் கேட்கிறார்கள். பிறகு தான் சிரிக்கிறதா என்று கேட்பார்கள் ஆகவே, அழுகை முதல் செயல் விமதுதான் சிரிப்பு; பசி எடுத்தால் அது அழும்; வயிறு நிரம்பினால் சிரிக்கும். கேட்பது கொடாவிட்டால் சினக்கும். ஆகவே குழந்தைக்கு அழுதல், சிரித்தல், சினத்தல் இயற்கையான குணங்கள். அழுதல் துன்பத்தினால் உண்டாகும். பசித் துன்பம் உடலுக்கூறு இவை களால் அஃது உண்டாகும். தாய் இல்லாவிட்டால் அழும்; அது பிரிவினையால் ஏற்படும் துயரம். ஆகவே, பொதுவாகக் குழந்தைக்குத் துன்பம் உடற்கு ஒறுத்தல், பிரிவுத் துயரம் இவைகளால் அழுகை ஏற்படும். விரும்பு இறவற்றைக் கொடாவிட்டால் சினம் அடையும். அச் சினத்தை அழுகையால் காட்டும். இந்த வகையில் அழுகை முதலில் தோன்றுகிறது.

நாள் ஆக ஆகக் குழதைக்கு அழுகை குறைந்து கொண்டே போகும். ஒவ்வொர் ஆண்டும் அழுகையின் அளவு குறையும். சில குழந்தைகள் குறைவாக அழும் சில சண்டித்தனத்தோடு வெகு நேரம் அழும். இந்த வேற்றுமைகள் குழந்தைகளுடைய மந்த புத்தியாலும் சுறுசுறுப்பினாலும் ஏற்படும், இதனைத் தாய்மார்கள் வெகு எளிதில் மாற்ற இயலும். குழந்தைகளின் இயல்பு கிளை நன்கு அறிந்த தாய்மார்கள் தந்திரமாக அழுகை களை மாற்றிவிடக் கூடும். இயல்புகளை அறியாத தாய்மார்கள் அழுகையை அதிகப்படுத்தித் தாமும் துன்பப் படுவதோடு குழந்தைகளையும் கெடுப்பார்கள் அறிவுள்ள தாய்மார்கள் குழந்தை வளர்ப்பை வெகு தன்றாக ஏற்றுக் கொண்டு, துன்பமின்றி நடத்துவார்கள். அழுகை இன்றி நடத்துவதே நன்மை தரும்.

குழந்தைக்கு இயற்கையிலேயோ - செயற்கையிலேயோ நோய் உண்டாகி அழுவதுண்டு. நோய் நீங்கினால் அழுகை

நின்று விடும். நோய் வருகையில் சில தாய்மார்கள் அடிப்பதுண்டு அதனால் அழுகை மிகுதியாகுமே ஒழியக் குறையாது. நோய் வராமல் தடுப்பதே நன்று. வந்து விட்டால் மருந்து கொடுத்துப் போக்குவதே நன்று. நோய்க்கு இடங்கொடேல்' என்று ஔவையாரும் குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே' என்று பூதஞ்சேந்தனாரும் உரைத்திருப்பதை அறிக. குழவிக்குப் பிணி வளர்ப்பில் குறைவு தோன்றினதினால் ஏற்படும். அதனைப் பெற்றோர்கள் தடுக்க முடியும். குழந்தையின் உடலுக்கு அடி முதலியவைகளினால் புண் முதலிய ஏற்படும். அதனை முன் எச்சரிக்கையினாலும் தக்க பாதுகாப்பினாலும் தடுக்க முடியும், அதனால் அழுகையைப் போக்க முடியும்.

குழந்தைப் பருவம் ஐந்து வயதோடு முடிவு அடைய, பள்ளிப் பருவம் பத்து வயது வரை தோன்றும். அப்போது பையன் தன் காலத்தைப் பள்ளியிலும் வீட்டிலும் கழிப்பான். பள்ளியில் ஆசானிடம் படிக்கும் போது குறும்புத்தனம் செய்தால் அடி கிடைக்கும். அப்போது சிலர் அழுவார்கள்; சிலர் பொறுத்துக் கொள்வார்கள். அதைப் போலவே, வீட்டில் இருக்கும்போது பெற்றோர்களிடம் பழகிவருவார்கள். குறும்புப் பிள்ளை கள் அடிபட்டு அழக்கூடும். பராமரிப்பு எவ்வாறுண்டோ அதை ஒத்து அழுகையும் மகிழ்ச்சியும் உண்டு. விளையாட்டு நேரங்களில் தெருப்பிள்ளைகளுடன் விளையாடின் பிள்ளைகள் கெட்டு விடுவதுண்டு. நல்லவர்க -ளோடு பழகச் செய்வதே பெற்றோர்கள் கடமை ஆகும்.

பத்து வயதிற்கு மேல் இருபது வயது மட்டும் வாலிபப் பருவம் என்க. வாலிபர்கள் மேல் படிப்பில் ஈடுபடுவார்கள் இந்தக் காலத்தில் ஒரு தொழில் செய்து பிழைக்கவும் கற்றுக் கொள்வார்கள். உயிர் கல்வியிலும் பிழைப்புத், தொழிலிலும் ஈடுபடும் போது வாலிபர்களுக்குக் குழந்தைப் பருவத்து அழுகை வருவதில்லை, வாராது. அக்காலத்தில் நோய்கள் வெகுவாய் வரமாட்டா. வந்தாலும் வாலியர்கள் பொறுத்துக் கொள்வார்களேயின்றி அழமாட்டார்கள் அடிட்டுவதால்

வரும் துன்பத்தையும் தொற்று நோய்கள் வந்து நலிவுறும் போது வரும் துன்பத்தையும் வாலிபர்கள் அந்நோய்களைப் பொறுத்துக் கொண்டு நோய் தீரும் வகையில் முயற்சி எடுத்து கொள்வார்களேயன்றி அழமாட்டார்கள். யாராவது நெருங்கிய நண்பர்களாகவும், உறவினர்களாகவும் இருந்து மறைந்து விட்டால் அந்தப்பிரிவனை மனதில் கொண்டு துயரம் அடைவார்களேயன்றி அழமாட்டார்கள்.

இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் அறுபது ஆண்டுகள் வரை மக்கள் நடுவயதினராகவும் முதிர் வயதினராகவும் ஆகி இல்ல நம் நடத்துவார்கள். அப்போது எப்படிப்பட்ட துன்பமோ இழவோ ஏற்பட்ட போதும் அழுகை வராது அப்போது குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு வந்து விடும். ஆகவே, அழுகைக்கு இடமில்லை. துன்பம் வந்து துயரம் உறுத்துங்காலை அவைகளை நெஞ்சுக்குள்ளேயே பொறுத்துக் கொண்டு வெளிக் -காட்டாமல் இருப்பர். அனுபவத்தால் நெஞ்சுக்கு உறுதியும் வலிமையும் தோன்றும்.

அறுபதுக்கு மேற்பட்ட வயதினருக்கு அழுகை வரக் காரணமே இல்லை. உலக மக்களாகி உறுதியுள்ளவர் களாகி எப்படிப்பட்ட துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு வாழ்க்கையைத் தம் அறிவினால் தமக்கு அடிமையாக்கி உலகிற்கு எடுத்துக் காட்டுகளாகி இருத்தல் வேண்டும். அவர்களுக்கு அழுகை வருவது இயற்கை அன்று.

இதுவரை ஆண் மக்களைப் பற்றியே சொன்னோம். பெண்டிருக்கும் பொதுவாக இந்த நிலையே தோன்றும் ஆனால், வயதளவில் சிறிது வேறுபாடு தோன்றும். பெண்களின் அழுகைக் காலம் சிறிது நீடிக்கலாம். பள்ளிப் பருவம் பன்னிரண்டு ஆண்டு அல்லது பூப்புப் பருவம் வரும் மட்டும் நீடிக்கும். பிறகு மணப் பருவத்தில் பெண்கள் துயரப்படுவதில் மிகுதியாக அழுந்துவார்கள். இல்லறத்திலும் நெஞ்சில் உரம் இல்லாதவர்கள் வெகுவாகப் புலம்புவார்கள்.

குழவிப் பருவத்து அழுகை மணப் பருவத்தில் புலம்பலாகப் பரிணமிக்கிறது. இல்லறப் பருவத்திலும் ஆண்களைக் காட்டிலும் பெண்களில் து பரம் பெருக்கம் அடையும். உறவினர் மறைந்து விட்டால் அழுகையும் ஒப்பாரியும் கல்லாத பெண்களிடம் மிததியும் உண்டு. நாட்டுப் புறத்தார்கள் இன்னமும் இவைகளைக் கைக் கொண்டுள்ளார்கள். கற்றோர்களிடம் இந்தப் பழக்கம் குறைந்து கொண்டு வருகிறது.

இனி அழுகை என்பது என்ன? ஆராய்வோம். அது ஒருவரின் உடலில் தோன்றும் குறிகளின் நிலை, அக் குறிகளாவன : வாய் விம்பி ஒலித்தல், கண்களில் நீர் ததும்பி' விழுதல், மூக்கில் சளி நீர் ஒழுகுதல், கன்னம் வீங்குதல் முதலிய முகத்தின் விகாரங்கள் அவ்விகாரங்களின் தொகுதியே அழுகை ஆம். அவ்விகாரங்களைச் செய்யும் காரணம் நெஞ்சில் தோன்றும் துயரம் ஆகும். அந்தத் துயரத்தின் விளைவாக அந்த விகாரங்கள் தோன்றுகின்றன. இதனைத் தமிழ் இலக்கணத்தில் மெய்ப்பாடு என்பர். இப்படிப்பட்ட மெய்ப்பாடுகள் எட்டு என்று தொல்காப்பியனார் கூறுவர். அவை களாவன அவலம் (அ) அழுகை, நகை, இளிவரல், பீதி, பெருமிதம், விறல், மருட்கை, வெகுளி என்பவை. இவை களைச் சுவைகள் என்று இலக்கியத்தில் கூறுவர். வட மொழி நாடக இயலில் இரசம் என்பர். இரசங்கள் ஒன்ப தென்பர். சாந்தம் சமநிலை (அமைதி)யை எட்டோடு கூட்டி ஒன்பது ஆக்குவர். நாடகத்திற்கு இவை இன்றியமையாதவை. ஆனால், தமிழில் காப்பியங்களில் இவைகளை இணைத்து உயர்த்துவர்.

அழுகையை வடமொழியில் சோகம் என்பர். இச்சோகம் மக்களை மிகக்க வரும் தன்மை உடையது. சோகரசம் அல்லது அவலச் சுவை மிகுந்திருக்கிற இலக்கியங்கள் மக்களால் மிகுதியும் போற்றப்படுகின்றன. இந்திய மொழிகளில் மட்டு மேயன்றி வெள்ளையர் மொழிகளிலும் துன்பச் சுவையே மிகவும் போற்றப்படுகின்றது. ஷேக்ஸ்பியர் என்ற பெரும்

புலவரின் நாடகங்களில் சோகரச நாடங்களே பெருமை உடையன. ஹாம் லட், ஒதெல்லோ. லியர், மாக்பெத் என்ற துன்ட நாடங்களே மிகச் சிறந்தவை.

வடமொழி நாடகங்களில் துன்பப் பகுதிகளே சிறந்தவை. காவியங்களிலும் அப்படியே ஆகும். சகுந்தலை துஷ்யந்தனால் புறக்கணிக்கப் பட்டபோது அடைந்த தயரநிலை, சீதை கவரப்பட்டு அசோக வனத்தில் சிறைப்பட்ட போது அடைந்த துயரம். பாரதத்தில் திரௌபதி துகில் உரியப்பட்ட போது அடைந்த துயாம், சந்திரமதி புதல்வனைப் பாம்பு கடித்த போது மயானத்திற்குக் கொண்டு போன பகுதி, தமயந்தி வனத்தில் கைவிடப்பட்ட போது அடைந்த துயரம் - இவை முதலான பகுதிகள் எத்தனை உருக்க மானவை எனக் கூறவும் வேண்டுமா! தமிழில் கண்ணகி கோவலன் வெட்டுண்டு கிடந்த போது அழுத துன்ப மாலை, மணிமேகலை உதய குமாரனால் துறக்கப்பட்ட போது பளிங்கு மாளிகையில் துயருற்ற காதை சீவகன் சுடுகாட்டில் பிறந்த போது தாய் அரசி பட்ட துயரம் முதலிய பகுதிகள் எக்காலமும் நன்கு போற்றப்படும் அல்லவா?.

தமிழில் நாட்டுப்புற இலக்கியங்களிலும் நாடோடிகள் இலக்கியங்களிலும் சில அருமையான துன்ப மாலைகள் உள்ளன. அவைகளைச் சேகரித்துத்ம் தொகுத்து வெளியிடுவாரில்லை. குழந்தைப் பாடல்களிலும் வாலிபப் பாடல்களிலும், தாலாட்டுப் பாடல்களிலும் சில அரிய கருத்துக்கள் உள்ளன. அழுகிற குழந்தைகளை அழாவிடாமல் செய்து தொட்டிலை ஆட்டித் தூங்க வைக்கும் தாய்மார்களின் எளிய பாடல்களில் சிறந்த பகுதிகள் உள்ளன. ‘‘அத்தை உன் னை அடித்தாளா அது கண்டு அழுகிறாயா’’, ‘‘மாமன் உன்னைக் கள்ளினானா வலி பொறுக்காமல் அழுகிறாயா’’, ‘‘உறவினர்கள் வெவ்வேறு ஊர்களில் இருக்கிறார்களா அவர்களை நினைத்து அழுகிறாயா? - முதலிய கருத்துக்கள் அமைந்த பாடல்கள் மனத்தை உருகச்செய்யும். பெரும் புலவர்களும் இவைகளை ஒட்டிப் பிள்ளைத் தமிழில் பாடியிருத்தல் காணலாம்.

கணவன், மாமனார், அத்தை முதலியோர் இறந்து விட அவர்களை எண்ணிப் புலம்புகிற ஒப்பாரிப் பாடல் கள் எத்தனையோ நாடோடிப் பாடல்களில் உண்டு. இப்பாடல்களை மனப்பாடம் செய்து கொண்டு சில கிராமப் பெண்கள் கூலிக்கு மாரடிக்கிறது முண்டு. சில கிராமியப் பாடல்களில் உயர்ந்த கருத்துக்கள் உண்டு. படகு முழுகிப் போகும் உவமை கொண்ட பாடல்கள் மிக அருமையானவை. இப்பாடல்கள் ஒவ்வொரு வட்டத்திலும் வெவ்வேறாக இருத்தலும் - ஒவ்வொரு இனத்திலும் வெவ்வேறாக இருத்தலும் காண்கிறோம். பெரும் புலவர்களும் காணாத அருமைப்பாடுகள் சில ஒப்பாரிப் பாடல்களில் இருக்கக் காண்கிறோம்.

செந்தமிழ் இலக்கியத்தில் மிகமிக உருக்கமான அவலச்சுவைப் பாடல்கள் இருக்கின்றன. சிலப்பதி காரத்தில் கண்ணகி படுகிற, துயரத்தை எடுத்துக் காட்டும் 'துன்பமாலை' வேறெந்த நூலிலும் காண முடியாது. கண்ணகி பட்ட பெருந் துன்பத்தை வேறெவ் வாறு தமிழ்ச் சொற்களால் தீட்ட முடியும் படிக்கும் போது நேரில் காண்பது போல இளங்கோவடிகள் சித்திரிக்கின்றார். ஊர்சூழ் வரியில்,

'பட்டேன் படாத துயரம் படுகாலை
உற்றேன் உறாத துறவனே யீதொன்று'

என்ற வரிகளிலும்,

வண்டார் இருங் குஞ்சி மாலை தன் வார்குழன் மேல்
கொண்டாள் தழீ இக் காழு நன் பால் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன் றன்னைக் காணாக்கடுந்துயரம்

என்னுறு துயர் கண்டும் இடருறு மிவளென்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர் செய்த மறவினை அறியாதேற்கு
என்னுறு வினை காண! இதுவென உரையாரோ

என்ற பாடலிலும் உள்ள கருத்துக்களை உணர்க.

கலிங்கத்துப் பரணியில் போர்க் களத்தில் பட்ட கணவனின் தலை கண்ட வீரப் பெண்ணின் மனோ நிலையினை அடியிற் கண்ட புலம்பலில் செயங்கொண்டார் வருணிக்கிறார்.

பொரு தடக்கை வாளெங்கே மணிபார் பெங்கே
போர் முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே எங்கே என்று
பயிரவியைக் கேட்டாளைக் காண்மின் காண்மின்

இச்செய்யுள் மறப் பெண்ணின் துயரம் பொங்கி எழும் நிலையை வருணிக்கிறது. ' எங்கே எங்கே' என்று மீண்டும் மீண்டும் எழுப்பும் கேள்வி ஆத்திரத்தைக் காட்டுகிறது. கவியின் சொற்களின் உருக்கம் காணுங்கள். நீண்ட செய்யுட்களில் இந்த உருக்கம் காண முடியாது.

மேலும் பிற காப்பியங்களில் அவலச் சுவை எவ்வாறு, பொருந்தி உள்ளது எனக் காண்போம். இராவணன் வஞ்சனை செய்து சீதையை எடுத்து ஓடுகையில் பொறுக்க முடியாத துயரத்தில் ஆழ்ந்த சீதை மிக உருக்கமாக எதிரில் இருந்த இயற்கைப் பொருள்களைக் கண்டு விளிக்கிறாள். இது தான் இயற்கை.

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரே, நிலை நேடினிர் போய்
உலையா வலியார் உழைநீர் உரையீர்

தான் அடைந்த துயரத்தை இராம இலக்கு, மணர்க்கு உரைக்கச் சொல்லி அழுகிறார்கள்.

''செஞ் சேவகனார் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனதேவதை காண்
அஞசேல் என நல்குதிரேகல் அடியேன்
உஞ்சால் அது தான இழிவோ உரையீர்''

‘‘கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா அணையாய் மனனே தெளிவாய்
ஓதா துணர்வார் உழை ஓடினை போய்
நீதான் வினையேன் நிலை சொல்லலையோ’’

இந்தப் பாக்கள் கடுந்துயர் உற்ற ஒரு பெண் தன் தீவிரக் கருத்துக்களை வெளியிடத் தகுந்தபடி மாச்சீரில் ஈரசைச் சொற்களால் இயற்றப் பெற்றிருத்தல் காண்க, காய்ச்சீர் முதலிய நீண்ட சொற்கள் இந்தப்படி துயரை வெளியிட முடியுமோ, கற்றாராயுங்கள்.

இதற்கு மாறாகச் சூர்ப்பணகை மூக்கு அரிந்த போது கரதுடணாதியரை விளித்தபடியே அமைந்த துயரப் பாட்டு காய்ச்சீரில் உள்ளதை அறியலாம். குற்றம் செய்து நெஞ்சிலிருந்து வரும் சொற்கள் அருகிலுள்ள இயற்கை ’யைப் போற்றாது. நெடுந்தொலைவிலுள்ள தன் காவலரை அழைத்துக் குறை கூறுதற்கு நீண்ட சொற்களே வேண்டும்.

‘‘நிலையெடுத்து நெடு நிலத்து நீயிருக்கத் - தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ தேவரெதிர்
தலையெடுத்து விழியாமை சமைப்பதே! - தழலெடுத்தான்
மலையெடுத்த மாமணியே இவைகாண வாராயோ.’’

என்று இராவணனை அழைக்கின்றாள்.

‘‘புலி தானே புறத்தாகக் குட்டி கோட் படாதென்ன
ஒலியாதி உலகுரைக்கும் உரைபொய்யோ - ஊழியினும்
சலியாத மூவர்க்கும் தானவர்க்கும் வானவர்க்கும்.
வலியானே யான்பட்ட வலி காண வாராயோ’’

என்று ஆத்திரம் பொங்க அழைக்கிறாள். இதில் அவலம் உண்டு; எனினும் சினமும் ஆத்திரமும் பொங்க முறையிடுதல் தான் மிகுதியாக உண்டு.

மரனேயும் நெடுங்கானில் மறைந்துறையும் தாபதர்கள்
உரனேயோ அடலரக்கர் ஓய்வேயோ உற்றெதிர்ந்தார்
அரனேயோ அரியேயோ அயனேயோ எனு மாற்றல்
கரனேயோ யான்பட்ட கையுறவு காணாயோ.

வரம்நெரிந்து விழ என்னை உதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள் பார்க்க நான் கிடந்து - புலம்புவதோ!
கரனிருந்த வனமன்றோ இவை படவும் கடவேனோ
அரனிருந்த மலையெடுத்த அண்ணாவோ - அண்ணாவோ

இப்பாடல்களிலே தீங்கு செய்தவர்களைத் தண்டிக்க 'வேணுமென்ற வஞ்சினமேயன்றி உண்மையான துயரம் இல்லை. இதனைச் செய்யுள் ஓசை நயத்தாலும் சொல் நயத்தாலும் கம்பர் விளக்கிச் செல்கின்றார்.

கிட்கிந்தா காண்டத்தில் வாலி கொல்லப்பட்டு, தாரை புலம்பினதை வேறு வகை உணர்ச்சியில் கம்பர் கூறுகிறார். செய்யுள் சிறிய அசைகள் கொண்ட கலி விருத்தம் சந்தம் இல்லை. கருத்தும் வேறுபடும்.

வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசேரா இடர் வேலை காண்கிலேன்
உரைசேர் ஆருயிரே என் உள்ளமே
அரைசே யான் இது காண அஞ்சினேன்

துயராலே தொலையாத என்னையும்
பயிராயோ பகையாத பண்பினாய்
செயிர் தீரா விதி ஆன தெய்வமே
உயிர் போனால் உடலாரும் உய்வரோ

நையா நின்றனென் நான் இருந்தும் இங்ஙன்
மெய்வானோர் திருநாடு மேவினாய்
ஐயா நீ எனதாவி என்பதும்
பொய்யோ பொய் உரையாத புண்ணியா

குரங்கினங்கள் பண்பும் பிடிப்பும் உள்ளன வாய்க் கம்பர் வகுக்கின்றார். கருத்துகள் எவ்வாறு தாரையின் வாயிலிருந்து வருகின் றன! வேறுபாடும் ஆய்தற்குரியது.

சுந்தர காண்டத்தில் அசோகவனத்தில் சீதை சிறையில் இருக்கையில் அனுமன் சென்று மரத்தின் மேல் இருக்க, இராவணன் வந்து சீதையை வருத்தவும், அவன் உடன்படாது அவனை வைதபோது அவள் ஏகவும் சீதை ஏனையோர் உறங்கத் துயர் பொறாது புலம்பு கிறாள். அப் புலம்பல் இயற்கையாய் ஒரு புனிதவதிக்குத் தோன்றுபவை, சொல்லும் பொருளும் ஆராய்க.

துஞ்சாதாரும் துஞ்சுதல் கண்டு துயர் ஆற்றாள்
நெஞ்சால் ஒன்றும் உய்விழி காணாள் நெகுகின்றாள்
அஞ்சா நின்றாள் பல்நெடு நாளும் அழிவுற்றாள்
எஞ்சா அன்பால் இன்ன பகர்ந்து ஆங்கிடர் உற்றாள்

கருமேகம் நெருங்கடல் காசனையான்
தருமே தமியேன் என தாருயிர்தான்
உரும் ஏறு உமிழ் வெஞ்சிலை நாண் ஒலிதான்
வருமே உரையால் வலியார் வலியே

கல்லா மதியே கதிவான் நிலவே
செல்லா இரவே சிறுகா இருளே
எல்லாம் எனையே முனிவீர் நினையா
வில்லா ளணையா தும்விளித் திலீரோ

பேணும் உணர்வே உயிரே பெருநாள்
நாண்இன்று உழல்வீர் தனி நாயகனைக்
காணும் துணையும் கழிவீர் அலிர் நான்
பூணும் பழியோடு பொருந்து வதோ!

என்று என்று உயிர்விம்மி இருந்தழிவாள்
மின் துன்னும் மருங்குல் விளங்கிழையாள்
ஒன்று என் உயிர் உண்டு எனின் உண்டு இடர்யான்
பொன்றும் பொழுதே புகழ் பூணும் எனா

இந்தப் புலம்பல் சீதையின் சிறு சொல்லால் என் பட்டது. சீதைக்கே இதனைக் கம்பர் கொண்டார் போலும்.

யுத்த காண்டத்தில் உணர்வற்றுக் கிடந்த இராம இலக்குமணரைக் காணச் சீதையை அழைத்துச் செல்லச் சீதை கண்டு அரற்றுகிறாள்.

அடித்தாள் முலைமேல் வயிறு அலைத்தாள்
அழுதாள் தொழுதாள் அனல் வீழ்ந்த
நொடித்தாள் என்ன மெய் சுருண்டாள்
கொதித்தாள் பதைத்தாள் குலை வுற்றாள்

துடித்தாள் மின்போல் உயிர்க ரப்பச்
சோர்ந்தாள் சுழன்றாள் துள்ளினாள்
குடித்தாள் துயரை உயிரோடும்
குழைத்தாள் உழைத்தாள் குயிலன்னாள்

விழுந்தாள் புரண்டாள் உடல் முழுதும்
வியர்த்தாள் அயர்த்தாள் வெதும்பினாள்
எழுந்தாள் இருந்தாள் தளிர்க்கரத்தை
நெரித்தாள் சிரித்தாள் ஏங்கினாள்

கொழுந்தா என்றாள் அயோத்தியர் தம்
கோவே என்றாள் எவ்வுலகும்
தொழும்தாள் அரசே யோவென்றாள்
சோர்ந்தாள் அரற்றத் தொடங்கினாள்

சீதை அரற்றல்

உறமேவிய காதல் உனக்குடையார்
புறமேதும் இலாரொடு பூண்முலையார்
மறமே புரிவார் வசமாயினையோர்
அறமே கொடியாய் இதுவோ அருள்தான்

பூவும் தளிரும் தொழுபொங் கணைமேல்
கோவும் துயிலத் தவிர்வாய் கொடியார்
ஏவின் தலை வந்த இருங்களையால்
மேவும் குளிர்மெல் லணை மேவினையோ

சீதை புலம்பல்கள் எல்லாம் உருக்கம் காட்டும் சிறு சொல் அசைகள் மாச்சீரில் உள்ளமை காண்க, கம்பர் உருக்கத்திற்கு இச்சீரையே கொண்டுள்ளதை அறிவோம்.

இனி, இந்திரசித்துக் கொல்லப்பட்டதை இராவணன் கேட்டுப் புலம்புதலிலும் கலி விருத்தமே காண்கிறோம்.

மைந்த வோஎனும் மாமக னேஎனும்
எந்தை யேஎனும் என் உயி ரேஎனும்
முந்தி னேன் உனை நான்உள னேஎனும்
வெந்த புண் இடை வேல் பட்ட வெம்மையான்

அவன் புலம்பும் போதும் சினம்தான் வருகிறது. அவன் உடலுறுப்புக்களைக் கண்டு இராவணன் புலம் பலைக் கம்பர் பாடும் திறன் காண்க.

கைகண்டான் பின் கருங்கடல் கண்டே
மெய்கண்டான் அதன் மேல் விழுந்தான் அரோ
பெய்கண் தாரை அருவிப் பெருந்திரை
மெய்கண்டார் திரை வேலையை மூடவே

மகன் உடலைக் கண்ட மண்டோதரி மைந்தன் மேல் விழுந்து புலம்பலை நீண்ட செய்யுளால் வருணிக் கிறார். நெஞ்சின் வேகம் அவ்வாறு செய்தது போலும். கதையின் ஓசை நீட்டத்தாலும் அதன் குறுக்கத்தாலும் கவிஞர் தாம் விழையும் சுவையைப் புலப்படுத்த வல்லவராவார். ஓசை நயமும் அந்நயம் ஏறிய சொல் லாட்சியும் பெருங்கவிஞர்க்கு நற்கருவிகள் ஆகும். பாவகை யாதாயினும் அவற்றின் ஓசையமைதியின் மாத்திரை யாதாயினும் உணர்த்த விரும்பும் சுவை தாங்கிகளாகக் கவிஞர்கள் அவற்றை ஆக்குவர்.

இராவணன் இறக்க, வீடணன் புலம்பல்
உண்ணாதே உயிர் உண்ணாது ஒரு நஞ்சு
சனகி எனும் பெரு நஞ்சு உன்னைக்

கண்ணாலே நோக்கவே போக்கியதே
உயிர் நீயும் களப்பட்டாயே
எண்ணாதேன் எண்ணிய சொல் இன்றினித்தாள்:
எண்ணுதியே எண்ணில் ஆற்றல்
அண்ணாவோ அண்ணாவோ அசுரர்கரம்
பிராண்மே அமரர் கூற்றே

போர் மகளைக் கலைமகளைப் புகழ் மகளைத்
தழுவியதை பெறாமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும்
தெரிவரியத் தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர்தொடுத்துப்
பழிகொண்ட பித்தாபின்னைப்
பார்மகளைத் தழுவினையோ திசையானைப்
பணை இறுத்த பணைத்த மார்பால்

மண்டோதரி அழுகையும் நீண்ட ஓசை கொண்டுள்ளது..

அன்னேயோ அன்னேயோ கொடியேற்கு
அடுத்தவாறு அரக்கர் வேந்தன்
பின்னேயோ இறப்பது முன் பிடித்திருந்த
கருத்ததும் பிடித்திலேனோ
முன்னேயோ விழுந்ததும் முடித்தலையோ
படித்தலைய முகங்கள் தானோ
என்னேயோ என்னேயோ இராவணனார்
முடிந்தபரிசு இதுவோ பாவம்.

வெள்ளருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்இருக்கும் இடன் இன்றி உயிர்இருக்கும்
இடம் நாடி இழைத்த வாறோ

கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக்கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி!!

ஆரனார் உலகியற்கை அறிதக்கார்
அவை ஏழும் ஏழும் அஞ்சும்
வீரனார் உடல் துறந்து விண்புக்கார்
கண்புக்க வேழ வில்லால்
நாரநாள் மலர்க்கணையால் நாள் எல்லாம்
மீதாளெல்லாம் நைய எய்யும்
மாரனார் தளி இலக்கை மணித்தனார்
அழித்தனரே வரத்தி னாலே.

இவை கூறி மண்டோதரி இராவணன் மீது விழுந்து உயிர் துறந்தாள்.

மண்டோதரி அழுகை ஒப்பாரி போல் நீண்ட ஓசை கொண்ட கவிகள். சீதை அழுகைக்கும் இவைகட்கும் பேதம் காண்க, உள்ளத்திலிருந்து எழுந்த உணர்ச்சிகளில் சவிக் கூற்றுகள் நுழையும் போலும்?

இனி, உத்தர காண்டத்தில் ஒட்டக் கூத்தர், இராமன் சீதையை வனத்திற்கனுப்பியபோது காட்டில் தன் விதியை நொந்து அழுதபோது சொன்ன புலம்பல் ஒப்பாரிப் புலம்பல் போல் இருக்கக் காண்கிறோம்.

இலங்கையிலேயே நெடுங்காலம் இருஞ்சிறையில் இருந்தது. விதிபோலே விதிபோலே' என்று கொச்சகக் கலிப்பாவில் நீண்ட காய்ச்சீரில் அழுத பாடல்கள் செயற்கையாகத் தோன்றும். இயற்கையாக உள்ளத்தி லிருந்து எழும் உணர்ச்சிகள் அங்கு காணோம். இக்கூற்றுப் போல்வன பிற்காலக் கவிகளில் நிரம்பக் காண்கிறோம்.

செந்தமிழில் கம்பராமாயணத்திற்கு அடுத்த பெருங் காவியம் கந்தபுராணம் ஆகும். கந்த புராணக் கதை கம்ப

இராமாயணத்தைப் போலவே எல்லாக் காவியச் சிறப்புக்களும் கொண்டுள்ளது. அதில் எட்டு மெய்ப் பாடுகளையும் காணலாம். சிறப்பாக அவலச் சுவை ஆங்காங்கே மிளிர்ந்திருக்கிறது. செய்யுள் நடையும் காவியச் சிறப்புக்களுக்கு ஒத்ததாகவே இருக்கிறது .. கம்பர் எவ்வாறு, சுவைகளுக்குத் தக்கபடி செய்யுள் நடையும் அமைத்திருக்கின்றாரோ அவ்வாறே கச்சியப்ப சிவாச்சாரியாரும் நடையை அமைத்திருக் கின்றார். கம்பரில் நடை சிறிது கடினமாக இருக்கும். ஆனால், கச்சியப்பரில் நடை மென்மையாக இருக்கும். சேக்கிழார் நடையை ஒத்தே எளிதாகவும் பொருட் செறிவுள்ளதாகவும் இருக்கும்.

சிவபெருமான் மன்மதனை எரித்து விட இரதிதேவி புலம்புகிற பாக்கள் மிகச் சிறந்தன. சீதையின் புலம்பல் போல் மாச்சீரில் சின்னஞ்சிறிய சந்தச் சொற்களால் அமையாமல் மண்டோதரி புலம்பல் போல் நீளோசை கொண்டு காய்ச்சீரில் அறுசீர்கள் அமைந்த விருத்தங் களாக இருத்தல் காணலாம். ஒப்பாரிப் பாடல் கணக்கில் படிப்பதற்கும் பாடுவதற்கும் வெகு இனிமையாக இருக்கும். கருத்துக்களும் அவ்வாறே அமைந்திருக்கின்றன.

செம்பதுமை திருக்குமரா தடியேனுக்கு ஆருயிரே
-திருமால் மைந்தா
சம்பரனுக் கொருபகை வா கன்னல் வரிச்
சிலை பிடித்த செங்கை வீரா
அம்பவளக் குன்றனைய சிவன் விழியால்
வெந்துடலம் அழிவுற்றாயே
உம்பர்கள் தம் விழியெல்லாம் உறங்கிற்றோ
- அயனாரும் உவப்புற் றாரோ

மற்றொரு சிறந்த சைவ நூல் திருத்தொண்டர் புராணமாகும். இது சிவனடியார் வாழ்க்கை வரலாற்றின் பெருமைகளை எடுத்துக்கூறும் நூல். சமனிலைச் சுவையின் களஞ்சியமாய்ச் சமயச் சார்பில் விளங்கும் நூலாகையால்

மெய்ப்பாடுகளுக்கு அதிகம் இடம் இருக்க முடியாது. ஆனாலும், ஒரு சிறந்த எடுத்துக்காட்டு - சம்பந்தர் புராணத்தில் திருமருகலில் விடம் தீர்த்த பகுதி ஆகும். வணிகப்பெண் திருமணம் செய்து கொள்ளத் தன் மாமன் மகனோடு செல்லுகை யில் திருமருகலில் மடத்தில் இருந்த ஒரு அரவு அவனைத் தீண்ட அவனிறக்க, அப்பெண் துயரம் தாளாது அழுத பகுதி மிக உருக்கமானது. அவள் அழுகையைச் சேக்கிழார் வெகு உணர்ச்சி ததும்பக் கூறுகிறார். திருமணம் ஆகா முன் அவளைத் தொடாது நிற்கும் நிலையில் அழுத அழுகை வெகு வியப்பாகக் கருதப் பட்டது.

அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவாக உடன் போந்தேன் அரவால் வீடி
என்னை உயிர் விட்டகன்றாய் யானென் செய்தேன்
இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாரு மில்லை
மன்னியசீர் வணிகர் குல மணியே யானும்
வாழேனென் றென் றயர்வாள் மதியினாலே
சென்னி இளம் பிறையணிவார் கோயில் வாயில்
திசைநோக்கித் தொழுதழுதாள் செயலொன் றில்லாள்

காய்ச்சீர்களும் அவற்றிடை மாச்சீர்கள் மிடைந்துவர கோய் காய் மா மா காய் காய் மா மா' என்ற அமைப்பி லேயும் அவலச் சுவை காட்டச் சேக்கிழாரால் முடிந்திருக் கிறது. சீரமைதி யாதாயினும் நெட்டோசை கொண்டு அவலம் எழுதல் காண்க. மேலும் இதே இடத்தில் வரும் சேக்கிழார் வாக்கு :

அடியாராம் இமையவர் தம் கூட்டம் உய்ய
அலைகடல்வாய் நஞ்சுண்ட அமுதே செங்கண்
நெடியானும் நான்முகனும் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே பொங்கர் வாசக்
கடியாரும் மலர்ச்சோலை மருங்கு சூழும்
கவின்மருகற் பெருமானே காவாய் என்றும்

திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையெனும் உணர்வோடு திருமருகற் பெருமானையே விளித்து அவலக் குரலெழுப்பும் இச் சுவை ததும்பும் பாடல் அவல இலக்கியக் கலன்களிலே சிறந்தது என்பதில் ஐயமில்லை.

அவள் வாயிலிருந்து வரும் கருத்துக்கள் மிக உயர்வானவை. பாக்களும் இரதி புலம்பல் போல் நீள ஓசை கொண்டவை. மேலும் சமயச் சார்புக்கேற்ற பாடல்கள். இவைகளை ஆராயும் போது 11, 12 நூற்றாண்டுகளில் தமிழ் இலக்கியம் இத்தன்மையவாக இருந்திருக்க வேண்டும் என்று அறியலாகும்.

இடைக்கால இலக்கியத்தில் அவலச் சுவை என்றால் நமது கருத்தில் தோன்றுவது சந்திரமதி புலம்பல் தான். நம் இளவயதிலேயே அரிச்சந்திர புராணம் மயான காண்டம் என்றால், எவனும் அந்த நாடகத்திற்குப் போகாமல் இருக்க மாட்டான். சந்திரமதி தன் மகனைப் பாம்பு கடிக்க, தோள் மேல் போட்டுக் கொண்டு அழத் தொடங்கினால் சபையில் உள்ளோர் யாவரும் கண்ணீரும் கம்பலையும் ஆக இருப்பார்கள். வீரகவி ராயர் நீண்ட அந்தச் செய்யுளால் மிக உருக்கமாகப் பாடியிருக்கின்றார்:

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து பசியால்
அலைந்து உலவா
அனியாய வெங்கள் அரவால் இறந்த அழிபவை
மேல் செல் அறியேன்
தனியே கிடந்து விடநோய் செறிந்து தண்மீதுருண்ட மகனே
இனியாரை நம்பி உயிர் வாழ்வம் என் றன்
இறையோனும் யானும் அவமே

இந்தப் பாடல்கள் சந்தப் பெருமை பெற்றிருக்கின்ற தேயன்றி உள்ளத்தில் எழும் உணர்ச்சி பெறவில்லை என்று தற்காலத் திறனாய்வர் சிலர் இயம்புவார்கள். கலிங்கத்துப் பரணிப் பாடலை ஒத்துப் பார்க்க, தெருக்கூத்தில் ஆடும் அரிச்சந்திரா விலாசத்தில் பாடப்படும் பாடல்கள் புராணப்

பாடல்களை விட உருக்கமாக உள்ளன என்று கூறுவார்கள். தேம்பித் தேம்பி' என்ற கண்ணிகளை ஆராய்க.

இடைக்கால இலக்கியத்தில் மற்றொரு நூல் நளவெண்பா ஆகும். நைடதம் பெருங்காப்பியமாகப் பாடப் பட்டிருந்தாலும் அது காமச் சுவை மிக்க நூல் ஆகும். நளவெண்பாவோ அவலச்சுவை மிகப் பெற்ற நூல் என்க. தமயந்தியின் இளங் குழந்தைகள் நாட்டை விட்டு துரத்தப் பெற்று வெளிப் போந்தபோது கண்ணீர் ததும்ப அழுதல் வெகு இயல்பாகத் தோன்றும்.

சந்தக் கலுற்றா மரையும் சதங்கையணிப்
பெந்தளிரும் நோவப் பதைத் துருகி எந்தாய்
வடந்தோய் களிற்றாய் வழியான தெல்லாம்
கடந்தோமோ என்றார் கலுழ்ந்து.

அப்போது நளனுக்கும் தயமந்திக்கும் நடந்த துயர் பொதிந்த பேச்சுக்கள் மிக மிக எடுப்பாகவும் இயற்கை யாகவும் இருக்கும்.

வனத்தில் நள்ளிருளில் தமயந்தியை விட்டு விட்டுத் தனியே சென்ற நளன் தான் செய்த குற்றத்தை எண்ணி நெஞ்சழிந்து வெறி பிடித்தவன் போலக் கடலையும் நண்டையும் பார்த்துப் புலம் புகின் றான். கடலருகில் வசிக்கும் மக்கள் இந்த இயற்கைக் காட்சிகளை நன்கறிவார்கள்.

காதலியைக் காரிருளில் கானகத்தே கை விட்ட பாதகனைப் பார்க்கப் படாதென்றோ- நாதம் அளிக்கின்ற வாழிவா யாங்கலவ னோடி ஒளிக் கின்ற தென்னோ வுரை இனித் திருவிளையாடற் புராணத்தில் பழியஞ்சின படலத்தில் திருமணம் நடக்கும்போது மணப்பறையோசை கேட்டுப் பயந்த மாடு துள்ளிக் குதித்து மண மகனைக் குத்த. அவன் இறக்க, அப்போது ஏற்பட்ட துயரச் செய்தியைப் பரஞ்சோதி முனிவர் வெகு உணர்ச்சியோடு பாடுகின்றார்:

மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலியோ யழுகையொலி
யாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலாக்கி
கொன்றுமிலை

இந்தப் பாடல் கதைப் பாத்திரத்தின் புலம்பல் பாடலாக இல்லாமற் போன போதிலும் நிகழ்ச்சிகளை உள்ளவாறு இயம்பி நம் உணர்ச்சிகளை எழுப்பும் தன்மை உடையன.

அதுபோலவே திருவாதவூரார் படலத்தில் அடி களைப் பாண்டியன் சிறையில் இட்டு ஒறுத்தின காலத்தில் அவர் வாயிலிருந்து வந்தவைகளாகக்கூறும் பாடல்களின் அருமைக் கருத்துக்களைக் காண்க.

ஐயவோ வென்னுடைய வன்பவோ வன்பர்க்கு மெய்யவோ மெய்யில் வினையேன் றலைவைத்த கையவோ செய்ய கழற்காலவோ காலனைக்காய் செய்யவோ வேதப் பரியேறுஞ் சேவகவோ.

பரஞ்சோதி முனிவர் இந்த இரங்கற் பாடல்களை வாதவூரடிகள் நாக்கில் வைத்ததன காரணம் அடிகள் திருச்சதகத்தில் 94-ஆம் பாடலில்,

‘‘யானேபொய் என் நெஞ்சம்பொய் என்னன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே’’

என்று பாடியதைக் குறித்துச் சொன்னார் எனலாம் போலும்.

மேலும், திருப்புலம்பல் என்றே ஒரு தனிப் பதிகம் ஒன்றைத் திருவாரூரில் அருளிச் செய்திருக்கின்றார். அதில் மூன்றாம் செய்யுளான.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியவையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா உன் குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

என்பதில் அவரது இரங்கல் தன்மை மலிந்த நெஞ்சின் உணர்ச்சிகளை ஆராய்க.

சமண இலக்கியங்கள்

செந்தமிழில் சமண இலக்கியங்கள் மிகச் சிறந்தவை. அவைகளிலும் மெய்ப்பாடுகள் பல இயற்றப்பட்ட போதி லும் அந்நூல்கள் சமண சமயத்தைப் பற்றியே மிகுதியாக நோக்கம் கொண்டிருந்த வகையில் அவலச்சுவை ஆளப் படவில்லை. என்றாலும், தக்க இடங்களில் உரியவாறு கையாளப் பட்டிருக்கின்றது. சமண இலக்கியங்களில் சிறந்த நூல்கள் சிந்தாமணி. சூளாமணி, பெருங்கதை என்பவைகள். சிந்தாமணி சீவகனுடைய சரிதை. அதனை மண நூல் என்று கூறுவர். ஆகவே, அழுகை. வருவதற்கு இடமில்லை என நினையலாம். ஆனாலும், கதைத் தொடக்கத்தில் ஓர் அரிய துயரச் செய்தி வருகின்றது. சச்சந்தன் என்ற அரசனை அமைச்சன் கட்டியங்காரன் அரண்மனையில் சிறைப்படுத்தி முற்றுகையிட்டபோது அரசி வயிறு வாய்த்திருந்த படியால் ஓர் இயந்திரப் பொறியில் வைத்து வானில் அனுப்பி விட்டான். பொறி வெகு தொலைவு சென்று, ஒரு சுடுகாட்டில் இறங்கி விட்டது. அங்கே அரசிக்கு ஒரு மகன் பிறந்தான். அவன் தான் சீவகன். அரச குமாரனாகப் பிறந்தும் யாதொரு உதவியும் இன்றி ஒரு சுடுகாட்டில் பிறந்த போது அரசியின் துயரத்திற்கு அளவில்லை. அந்த நிலையை ஆசிரியர் திருத்தக்க ’தேவர் வெகு உருக்கமாகப் பாடியிருக்கிறார். அது அவலச் சுவைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு :

வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்டுயரரங்கி னிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல் வேந்தே

சூழற் கொடுமையைப் பயன்படுத்திச் சொல்லும் பொருளும் இயைந்துவர அவலப் புலம்பலுக்குச் சிறந்த 'இலக்கியமாய்த் திருத்தக்கதேவர் அற்புதமாகப் பாடியது இச்செய்யுள். உணர்வுகள் ஒன்றி யோக நிலை எய்து தற்குக் கவிதைகள் நல்ல கருவி என விளக்கும் தமிழ்ச் சான்றோர் திரு. வி. க, இக் கவிதையினைச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தம் ''உள்ளொளி'' என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

இதுகாறும் கண்டவற்றால், வாழ்வரங்கின் 'தொடக்கமே அழுகை என்பதையும் பக்குவ நிலை வளர வளர வாய்விட்டழும் நிலை குறைகிறது என்பதையும் கண்டோம்; இலக்கண நெறியிலே அவலச்சுவை விளக்கப் படுதலையும் சுட்டினோம். பின்னர்ப் பாமர இலக்கியம் எனப்படும் நாட்டுப்புற, நாடோடி இலக்கியங்களில் அவலச் சுவையினைக் கண்டோம்; அதன் மேல் செஞ்சொற் புலமை வளம் கொண்ட புலவர் பெரு மக்களின் படைப்புகளிலே அவலச் சுவை இடம் பெற்றிருப்பதை உணர்ந்தோம்; சிற்றிலக்கியம், பேரிலக்கியம் என்ற வேறுபாடு கடந்து, யாப்பின் பல்வேறு கோலங்களையும் புனைந்து, கற்பார் நெஞ்சினை அவலச் சுவையால் கவிஞர்கள் திறைகொள் வதைத்தக்க எடுத்துக்காட்டுகளைக் கொண்டு கண்டோம்.

அழுகையே யாயினும் அனைவரையும் உவகையி லாழ்த்தும் முரண்திறன் அவலச்சுவையின் தனித் திறனாகும்.

4. கவிதை இயல்பு

கவிதையின் இயல்பு இரண்டாக உள்ளது. சொல்லழகு பொருளழகு இரண்டும் கொண்டது கவிதை.

சொல்லழகு கேட்பவன் அல்லது படிப்பவனுடைய நெஞ்சைக் கவருவதாக உள்ள சொற்களைக் கொண்டது. சொற்கள் எழுத்துக்களால் ஆகிய ஒரு கூட்டு ஆகும். எழுத்துக்கள் சில கடினமாகவும் சில மென்மையாகவும் இருக்கும்.இடையில் உள்ள ஓசைகொண்டவையும் உண்டு, இரண்டிற்கும் இவைகள் முறையே வல்லின மெல்லின இடையின எழுத்துக்கள் என்பர். மெல்லெழுத்துக்களும் இடையெழுத்துக்களும் விரவி வருவது காதுக்கு இனிமை யாக இருக்கும். தெலுங்கு முதலிய மொழிகளிலே இனிய ஓசைமிகுதி. தமிழிலே கவிதைக்கு இனிய ஓசை வேண்டும். அணியியலிலே சொல்லணிகள் இந்த முறையை விரித்தெழுதும்.

சொற்களில் இனிமை தருவது எழுத்துக்களின் சேர்க்கை, ஒரேவகை எழுத்துக்கள் அடிக்கடி வருவது ஓர் இனிமை. அவ்வகைக் கூட்டுப் பலவகைப்படும். அவை தமிழில் மோனை எதுகை இயல்பு முதலியனவாம். மோனை என்றால் மொழி முதல் எழுத்து அல்லது சீரின் முதல் எழுத்து ஒன்றேயாகி இருப்பது.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இச்செய்யுளில் க என்ற சீர் முதல் எழுத்து க ஆக நான்கு முறை வருகிறது. இஃது இன்ப ஓசை தருகிறது.

இனி எதுகை என்பது இரண்டாம் எழுத்துக்கள், முதலியன ஒன்றி வருவது. மேற் பாடலில் கற்க நிற்க என்ற சொற்களில் வருவது எதுகையாகும். விருத்தங் களில் எதுகை நிரம்ப வரும். இந்த இரண்டு சொல்லழகும் இல்லாவிடில்

எதுவும் மரபுவழிப்பட்ட தமிழ்க்கவிதை ஆகாது. வெறும் உரை நடைதான் ஆகும்.

இவைகளில் மோனை ஆங்கிலம் முதலிய மேலை நாட்டு மொழிகளில் உண்டு. அதற்கு Alliteration என்று பெயர். ஆனால், எதுகை என்பது அம்மொழிகளில் இல்லை. கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய தென்னாட்டு மொழிகளில் உண்டு.

மேலும், இயைபுத்தொடை என்பது தமிழில் ஒரோ விடங்களில் வரும். இது ஆங்கிலத்தில் உள்ள கீடதூட்ஞு போன்றது. இதுவே ஆங்கிலக் கவிதைக்குப் பெருமை 'தருவது. உருது முதலிய கீழை நாட்டு மொழிகளிலும் காணலாம். தமிழிலோ சிந்து முதலிய பாக்களிலும், இசை நாடகம் என்ற பகுதிகளிலும் வரும். இயைபு இனிமை தரலால் அப்பகுதிகளில் எங்கும் வழங்கப்படும்.

நந்த வனத்தி லோராண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி

இதில் வரும் இயைபு கவிதைக்கு இனிமை தருகிறது.

இனி மேலை நாட்டு மொழிக் கவிதைகளில் Rhythm என்ற ஓசையளவு உண்டு. படிக்கும் போது சிற்றலை போல ஏறியும் இறங்கியும் அளவாகச் செல்லும் தன்மை பொருந்தியது. இது. கவிதைகளில் அசையும் சீரும் அளவாகச் செல்லும். அவைகள் அலை போல அமரும். படிப்பதற்கு இனிமையாக இருக்கும்.

Again'st an el'm a sheef was tie'd
A bu't chis kn'fe in whi'nd was dyed.

இரண்டு அசைகள் கொண்ட நான்கு சீர்கள் இரண்டாம்: அசையில் அழுத்தம் இருக்கு. அவ்வாறு நான்கு சீர்கள் படித்தால் - '.-.-.-.-.-. - என்று ஏறியும் இறங்கியும் அளவு

காட்டும். ஆங்கிலத்திலே எழுத்துக் களுக்கு நிலையற்ற ஓசை இருப்பதினால் இந்த முறை தேவையாகிறது. ஆனால் தமிழிலோ வடமொழியிலோ இந்த நிலை வராது. எழுத்துக்களுக்கு உச்சரிப்பு நிரந்தரமானது, மாறாது. ஆகவே, Rhythm வேண்டிய தில்லை, ஆனால், அந்த இனிமை இல்லையா என்றால் உண்டு. எப்படி? எழுத்துக்கள் குறில், நெடில் என இரு வகைப்படும். இவைகளில் உச்சரிப்பு ஒரே தன்மையது. குறில், நெடில் என்றும் குறில் நெடில், நெடில் குறில் என்றும் சேரின் கீடதூணுடட் என்ற முறை சிரமமின்றித் தானே வரும். ஆகவே, யாப்பியலில் சீர் அசை இவை களின் வாய்ப்பாடும் பிரிவுகளும் தரப்பட்டுள்ளன.

நேர் நேர்: தேமா நிரை நிரை: கருவிளம்
நிரை நேர்: புளிமா நேர் நிரை: கூவிளம்

என்று வாய்பாடுகளைக் காணலாம். இப்படிப்பட்ட வாய்பாடுகளின்படி கவிதைகள் யாத்து வருவதினால் ஒரு தனித்த இன்னிசை தமிழுக்கு ஏற்பட்டிருக்கிறது.

மேலும், சொல்வழி அழகைவிடப் பொருள்வழி நாட்டமே மிகுதியாகக் கொண்ட மேலைநாட்டு மொழி கவில் இந்தக் கட்டுப்பாடுகளை மீறிக் கவிதை ஆக்குவதுண்டு. அதனை Blank Verse என்பார்கள். தென்னாட்டு மொழிகளிலும் இவ்விதம் அதிகமான கட்டுப்பாடுகளை விலக்கிப் பொருளையே விரும்பிக் கவிதை இயற்றுவதுண்டு. பசங்கத்தார் காலத்துச் செய்யுட்களிலும் அதற்குப் பின் தோன்றிய காப்பியங்களிலும் தொடை நயங்கள் இருந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்திலே வரிப்பாடல்கள் நிரம்பத் தொடை நயங்களைக் கொண்டிருக்கின்றன.

கோவலனுக்கும் மாதவிக்கும் ஏற்பட்ட யாழ் இசைப் போட்டியில் வரும் சொற்களும் கருத்துக்களும் படிக்கப் படிக்க இன்பம் தருகின்றன. அது போலவே ஆய்ச்சியர் குரவையிலே வரும் திருமால் துதிப் பாடல்கள் ஆழ்வார்கள் அன்புமயப் பாடல்களோ என்று ஐயுற வேண்டி வரும்.

இனி வாழ்த்துக் காதையில் கந்துக வரியில் வரும் பாடல்கள்.

''தென்னவன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்து நாம், தேவார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே'' என்ற மூன்று செய்யுட்களையும் படித் தால் இந்த நாள் இளைஞர் சாரணப் பாட்டோ என்று மயங்குவோம். இனி சிலப்பதிகாரத்தைப் போலச் சிந்தாமணி, சூளாமணி, முதலியவைகளிலும் காண் போம். கலித்தொகை, முதலிய சங்க நூல்களில் வரும் மெல்லோசைப் பகுதிகள் பிற்காலத்தில் தோன்றினதில்லை.

கவிதை இலக்கிய வரலாறு சங்கத்தார் காலத்தில் அடைந்த மேன்மை பிற்காலத்தில் அடைந்ததா என்பது ஒரு பெருங் கேள்வி. ஐம்பெருங்காப்பியங்களுக்குப் பிறகு தமிழ் மொழியிலே சமயத் துதிப்பாடல்கள் 6லிருந்து 10 வரையிலும் வடநாட்டுப் புராணக் கதைகள் 11-13 நூற்றாண்டுகளிலும், தமிழ் நாட்டு இறையடியார்கள் வரலாறு 18,13 நூற்றாண்டிலும், இல்லறப்பிரபந்தங்கள் 15-17-நூ களிலும் தோன்றின. இவைகளில் செய்யுட் போக்கே மாறுபட்டுச் சென்றன. இயற்கை அழகுகளை ஒழித்துக் கட்டிச் செயற்கை அழகுகள் தோன்றின. தமிழ்க் கவிதை தானிருந்த அரியாசனத்திலிருந்து படிப் படியாகக் கீழே இறங்கித் தரைக்கு வந்துவிட்டது. பொருள் விளங்கும் நடை தளர்ந்து சொல் மயக்கும் யமகம் திரிபுகளிலே உள்ளங்களைச் சோர்வு படுத்தும் நிலையில் வந்து விட்டது.

பொருளழகு

கவிதையின் அழகு சொல்லில் மட்டுமின்றிப் பொருளில் மிகுதியாக இருக்கிறது. ' வரதன் மலையில் நிற்கிறான்' என்றால் வெறும் குறிப்பு மட்டும் காட்டும். அருள் செறிந்த புன்முறுவலோடு தன் அடியார்களுக்கு அருளும் நன்னோக்கத்துடன் அபயம் கூறும் திருக்கையைத் தூக்கி வரம் தரும் கையை நீட்டி இயற்கை. வளம் பொருந்திய தன்

மலையில் எழுந்தருளியுள்ளான்’ என்றால் அது கவிநயம் செறிந்ததாகும். ஆகவே.. பச்சைத் தண்ணீர் குடிப்பது போல் உரைநடை எழுதாமல், அணிவகைகள் பொருத்தி ஆழ்ந்த கருத்துக் களை எடுத்து வரைவதே பொருளழகை எடுத்துக் காட்டுவதாகும்.

அணி என்பது வடமொழியில் அலங்காரம் எனப் படும். ஒரு பெண்ணுக்கு அணிகளைப் பூட்டினால் அழகை மிகுதிப் படுத்துவதாகும். அது போல கருத்துக்கு அணி சேர்த்தினால் அது சிறந்த கவிதை ஆகிறது.

அணிகளில் பலவகை உண்டு. அவைகளில் சிறந்தது உவமை. கவிஞர்கள் இதனையே சிறப்பாக ஆளுவார்கள், இலக்கண நூல்களிலே மற்ற அணிகளை நிரம்பக் காணலாம். கவிஞனின் தேற்றம் பொருத்தக் கவிதையின்! உயரமும் நின்றேகும்.

அணியியலைப் பற்றிப் பல நூல்கள் தமிழிலும் வடமொழியிலும் உள்ளன. ஆனால், சிறப்பாக வழங்கு பவை சிலவே. உவமை உருவகம் பொதுவாகக் காண லாம். தமிழில் தண்டியலங்காரத்தில் 36-ம் மாறனலங் காரத்தில் க-ம் குவலயானந்தத்தில் 100 உள்ளன காண்கிறோம். இவைகள் எல்லாம் பாகுபடுத்தியும் இணைத்தும் பார்த்தால் மிகச்சிலவே மீதம் ஆகும். ஆங்கிலத்திலும் அவ்வாறே பார்க்கலாம். பலவகை உவமைகள் உருவகங்கள் கொண்டு இயன்றவையே யாவும்.

ஆங்கிலேயர்கள் மிகவாக அணிகளைப் பயன் கவதில்லை. ஆங்கிலம் முதலிய மேலை நாட்டு மாமிகளில் உள்ள அழகுகளைக் காட்டிலும் தமிழில் மிக மேன்மையான பொருளழகுகள் இருக்கின்றன. அவைகள் பிற்காலக் காவியங்களைக் காட்டிலும் சங்கத்தார் செய்யுள்களில் வந்திருக்கின்றன.

இரண்டு சிறந்த அணிகள் தமிழ்க் கவிதைகளில் வருகின்றன. ஒன்று. உள்ளுறை உவமம்; இரண்டு, இறைச்சி, உள்ளுறை உவமம் கவியின் மேம்பாட்டை நக அழகாக எடுத்துக் காட்டும். முதலில் படிக்கும் போது தலைமகனுடைய நாட்டையோ ஆற்றலையோ அழகாக வருணிப்பது போல இருக்கும். ஆனால், மளன்றிப் பார்க்கும்போது அவனுக்கும் அவன் காதலிக்கும் உள்ள அன்புநிலையினை எடுத்துக் காட்டும். இனி இறைச்சி என்பது அந்த உள்ளுறை உவமமே சிறிய அளவில் தோன்றுவது. மேலும், வட மொழியில் தொனி என்ற அழகு உத்தி உண்டு. கவிதைச் சவையில் ஈடுபடுவோர்களுக்கு இம்மூன்று குறிப்புப் பொருள்களும் மிக இனிமை தரும். குறிப்புப் பொருள் தொல்காப்பியம் என்ற பண்டை நூலிலேயே ஆளப் பட்டுள்ளது. உதாரணங்கள் அகநானூறு முதலிய அகப்பாடல்களில் இருக்கின்றன. தொல்காப்பியருக்குப் பின்வந்த இலக்கண ஆசிரியர்கள் குறிப்புப் பொருள் களை முன்னேற்றிக் கொண்டு சொல்லவில்லை. எடுத்துக்காட்டுகளும் சங்க நூல்களுக்குப் பிறகு அகப்பாடல்கள் சிலவற்றுள் தான் அமைந்திருக்கின்றன. குறிப்புப் பொருள்களை ஐந்து வகையாகத் தொல்காப்பியனாரும் குறித்துள்ளார்கள்.

உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பெனக்
கெடலறு மரபின் உள்ளுறை ஐந்தே (45)

என்பது நூற்பா. உடனுறை என்பது இறைச்சிப் பொருள் (Suggestion). உவமம் என்பது உள்ளுறை உவமம் (Allegory) இந்த இரண்டும் பெருவழக்காகப் பயின்றன. சுட்டு. நகை, சிறப்பு என்ற மூன்றும் பயின்று வரவில்லை இந்த இரண்டு அழகுகளையும் நூல்களில் காணலாம்.

உள்ளுறை உவமம் :- அகப்பொருள் துறையில் பெரும்பாலும் வரும், காதலர் பேசும் பொழுது தம் கருத்துக் களை உவமையில் அமைத்துப் பேசுவது மரபு. வெளிப்படையாகத் தோன்றும் கருத்துக்கள் உள்ளே அடிப்

படையாக உறையும் கருத்துக்களுக்கு உவமையாக வருமாறு அமையப் பெற்றிருக்கும். வெளிப்படை உவமத்தில் உவமேயம் நன்கு தெரியும்; உள்ளுறை உவமத்கில் புலனாகாது. உவமையில் வரும் பொருளை ஊன்று கோலாகக் கொண்டு அதற்குறுப்பான வேறு பொருளை ஆழ்ந்து சிந்தித்துத்தான் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்

என்பது தொல்காப்பியர் விதி.

அகநானூற்றில் 2 ஆம் பாடலில்

கோழிலை வாழைக் கோள்முதிர் பெருங்குலை
ஊழுறு தீங்கனி உண்ணு நர்த் தடுத்த
சாரற் பலவின் சுளையொடு ஊழ்படுபு
பாறை நெடுந்தளை விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதில் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்தும் நாடா'

எனத் தலைவனுடைய நாட்டின் வளத்தைத் தோழி கூறுகிறாள்.

''நின் நாட்டில் வாழைகள் செழித்திருக்கும். பழங்களை உண்ணச் பசாவோரைப் பலாப்பம் மணம் தடுத்து நிறுத்திவிடும். பலாப்பழங்கள் தேன் சொரியும். இந்தத் தேன் கற்பாறைக் குழிகளில் தேங்கும். குரங்குகள் அறியாமையால் இத்தேனைப் பருகிப் போதை அடையும். மிளகுக் கொடி படர்ந்த தன் மரத்தின் மீது ஏற அந்தக் குரங்குகள் முயலும். தால், போதை காரணமாக மேலே ஏறமுடியாமல், ககீ விழும். தரையில் பரவியுள்ள மலர்ப்பாயிலில் போதை தெளியாமலே குரங்குகள் உறங்கும். இவ்வாறு வின் மலையில் உள்ள

விலங்குகள் கூடத் திட்டம் இடாமலே இன்பம் துய்க்கின்றன. இது குறிஞ்சி நிலத்து வருணனையாகத் தோன்றுகிறது. தலைவன் களவு ஒழுக்கத்தில் நடக்கின்றான். அவனை மண நெறியில் புகுத்தத் தோழி கருதுகின்றாள். இதனை வெளிப்படையாகக் குறிக்காமல் குறிப்பாக உணர்த்துகின்றாள்.

நீரை எதிர்பார்த்து வந்த குரங்கு தேனை உண்டது போல விலங்கு வேட்டைக்கு வந்த தலைவன் தலைவியை அடைந்தான். இன்பப் பெருக்கால குரங்கு தன் தொழிலாகிய மரம் ஏறாது மலர்ப்படுக்கையில் தாங்குவது போலத் தலைவன் களவு ஒழுக்கத்தில் நிற்கிறான். அவன் மயக்கம் ஒழித்து திருமணம் புரிந்து கொளல் நன்று. இந்தக் கருத்தினை ஒரு காட்சி வருணனையிலே பொதிந்து வைத்து உரைக்கிறாள். தோழி.

உள்ளுறை உவமத்தில் தெய்வத்தைத் தவிர மற்றக் கருப் பொருள்களே கொள்ளப் பெறும். (தொல். 50) தலைவி தான் அறிந்த கருப்பொருள்களையும், தோழி (வெளியே செல்பவளாகையால்) வெளிப் பொருள் களையும், நற்றாய், செவிலி, பாங்கன், பாணன் முதலியோர் இடம் வரையறுக்கப்படாது தாம் தாம் அறிந்து சொல்லலும் உவமை கூறி உள்ளுறை அமைப்பர் என்கிறது தொல்காப்பியம்.

சங்க நூல்களில் மிகப் பெரிதும் பயின்று வருகின்ற உள்ளுறை உத்தி, ஒரோவழி இடைக்கால இலக்கியங் களிலும் காணப்படுதலுண்டு. இங்கே தேவாரத்துள் ஓர் இடம் காணலாம்.

தலைவனும் தலைவியும் தக்க வயதினராய்த் தலை யாய அன்பு மிகுந்து சிறந்த முறையில் இல்லறம் நடத்தி வருகிறார்கள். ஒரு நன்னாள் வருகின்றது. மாலைப் பொழுதினில் தலைவன் திருக்கோயிலுக்குள் இறைவனை வணங்கச் செல்லுகின்றான். தலைவி வீட்டிலே அழுது படைத்துக் கொண்டிருக்கிறாள் இருண்டு விட்டது. தலைவன்

வரவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறாள். இறைவன் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு தலைவனுக்கு உணவு பரிமாற எண்ணிக் கொண்டிருக்கிறாள். வெகு நேரமாகியும் தலைவன் வரவில்லை . உணவு அருந்தவில்லை. களைப்புத் தோன்றி உறங்கி விடுகிறாள். காலைப் பொழுது விடிந்தது. செவ்வான ஒளிகண்டு திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள். எதிரிலே தலைவன் தோன்றினான். உருவம் மாறியிருந்தது. உடலெல்லாம் சந்தனச் சாந்தும் குங்குமக் குழம்பும் நறுமண வீச்சும் தோன்றத் திடுக்கிட்டாள். ஏது மணந்தவளை மறந்து இரவெல்லாம் பரத்தையர் மனையில் பொழுது போக்கிக் கண்கள் சிவந்து வந்திருக் கிறாரோ' என்று ஐயுற்று நெஞ்சம் தடுமாறி யாதொரு பேச்சும் பேசாது சமையலறைக்குள் புகுந்து இல்லற வேலையில் ஈடுபடத் தொடங்கினாள். தலைவனோ மனைவி தன் உருவத்தைக் கண்டு ஐயுறுகிறாள் என்று எண்ணிக் குளத்திற்குச் சென்று நீராடிவிட்டுக் கோயிலில் வணங்கி விட்டு வீடு திரும்புகிறான். ஆனால், தலைவி பேசவில்லை. ஊடல் தீரவில்லை போல் இருக்கிறது என்று எண்ணித் தான் கோயிலுக்குள்ளேயே ஆராதனை முடிந்த பிறகு சந்தன முதலியவைகளை அணிந்து கொண்ட பிறகு நிட்டையில் அமர்ந்திருந்த போது, அறியாத அர்ச்சகர் கதவைச் சாத்திக் கொண்டு வெளியேற, தான் வெளியேறும் வகையின்றி இரவு முழுவதும் கோயிலிலேயே கழித்துக் காலையில் அர்ச்சகர் உஷத் பூசைக்காகத் திருக்கதவைத் திறந்தபோது வெளி வந்ததாகவும் கூறினான் அந்தச் செய்தி அர்ச்சகர் நலமாகத் தலைவி கோயிலுக்கு மறுநாள் சென்ற போது அறிவிக்கப்பட்டது. அதனைக் கேட்டதும் தலைவி மிகவிம் பச்சாதாபப்பட்டுத் தலைவனைக் கண்டதும் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். ஊடல் முடிந்தது. உண்மை அன்பு பெருகிற்று.

இவ்வாறு ஒரு புனிதத் தலத்திலே ஒரு சமய வாழ்க்கை பூண்ட இல்லத்திலே நடந்தது. ஆனால் அஃறிணை உயிர்களிலும் அவ்வாறு நடைபெறுமோ! அந்தத் தலத்திலே தாழ்ந்த உயிர்களும், மேன்மைப் பண்பு கொண்டவைகளே.

அவைகளும் அன்பு நெறி, ஊடல், விளையாட்டு, மயக்கத் தெளிவு, மீண்டும் அன்புப் பெருக்கம் இவைகளை அனுபவிக்கின்றனவாம். அதனைத் தெய்வத் தமிழை இயற்றிப் பரப்பின அருட்கவிச் சிங்கம் அருளிச் செய்திருக்கின்றது. அவ்வழகிய அருள் வாக்கை எடுத்துரைப்போமாக.

திருவீழிமிழலை என்னும் புனிதத் தலத்திலே திருக் கோயிலுக்கு அணித்தாக ஓர் அழகிய தடாகம் உண்டு. அத்தடாகத்தில் மிக இனிமை பொருந்திய செங்கழுநீர் என்னும் குவளைக் கொடிகள் முளைத்திருக்கின்றன. அக் குவளைகள் என்ற நீலோற்பலங்கள் கதிரவனைக் காணும் போது அவனையே நோக்கிக் கொண்டு அவனுடைய கதிர்களைப் பருகி இதழ்களை விரித்து மணத்தை வீசும். அவன் மேற்கே சாயும் போது தன் இன்பம் குன்றி இதழ்களைக் குவித்துக் கொள்ளும். அம்மலர்களில் தாதுக்களும் தேனும் பொலிந்திருக்கும். அவற்றைக் கண்டு வண்டுகள் மொய்க்க வரும்: இத்தன்மைய - சிறப்பைக் கொண்ட செங்கழுநீர்த் தடாகத்தில் ஒரு நாள் நிரம்ப மலர்கள் விரிந்திருந்தன. அப்போது இரண்டு வண்டுகள் தம்பதிகளாக அவற்றை நோக்கின. ஆண் வண்டு பெண் வண்டிடம் தான் மதுவுண்டு விட்டு வருவதாகச் சொல்லி விட்டுப் பறந்து ஒரு குவளையிடம் சென்றது, பெண்வண்டோ முன்னமே நிரம்ப மதுக் குடித்திருந்ததனால் தன் இருப்பிடத்தில் தங்கி இருந்தது. ஆண் வண்டு விரைவாக வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் ஆண் வண்டு வரவில்லை. இரவு முழுவதும் விழித்துக் கொண்டு கவலையோடு இருந்தது. தேன் உண்ணச் சென்ற ஆண் வண்டு ஒரு குவளைக்குள் அமர்ந்து தேனைக் குடித்துக் கொண்டு அதன் மயக்கத்தில் அங்கேயே சற்று உறங் கிற்று. அப்போது பொழுது போய்க் கதிரவன் மறைந் தான். குவளையின் இதழ்கள் குவிந்தன. அவ்விதழ் களுக்குள் வண்டு சிறைப்பட்டது. உறக்கம் தெளிந்து வெளியில் பறக்க முயன்றது. இதழ்களின்

பிடிப்பிலிருந்து வெளியே கிளம்ப முடிய வில்லை. இறகுகளை அடித்துக் கொண்ட காரணத்தால் அம்மலருக்குள் இருந்த, மகரந்தம் அதன் உடலில் பட்டு மஞ்சள் நிறமாக மாறி விட்டது. இரவு முழுவதும் தன் மனைவி என்ன நினைப் பாளோ என்று ஏங்கிக் கொண்டிருந்தது. காலையில் கதிரவன் கதிர் ஒளி பருகவேண்டிக் குவளை தன் இதழ் களை விரித்தது. உள்ளே சிறைப்பட்ட வண்டு உடனே விடுதலை பெற்றுத் தன் மனைவியிடம் பறந்து சென்றது, மனைவி தன் தலைவனுடைய உருவத்தின் நிற வேறு பாட்டைக் கண்டதும் போதை மிகுதி என எண்ணி அதனை வெறுத்து ஊடல் செய்தது. பிறகு உண்மை அறிவித்த பிறகு ஊடலைத் தவிர்த்தது. இரண்டும் இன்ப சாகரத்தில் திளைத்தன. இந்தச் செய்தி திருவீழி மிழலையில் நிகழ்ந்ததாகச் சம்பந்தப் பெருந்தகையார் - அடியிற்கண்ட அருமையான அடிகளில் கூறுகின்றார்.

சேறாடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு
சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செல்வழி நற்
பண்பாடும் மிழலை யாமே

இதற்கண் அடங்கியுள்ள உள்ளுறை உவமத்தைக் கண்டு ஆராய்க.

இனி, இதைப் போல வைணவப் பெரியார்களும் அழகு பெறப் பாடியுள்ளார்கள். ஆண்டாள் ‘பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப’’ என்று சுருக்கமாக இக்கருத்தையே பாடியிருக்கின்றார்கள். இந்தப் பாசுரத்தின் ஓரடிக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் மேலே கண்ட கதா ரூபமான வியாக்கி யானம் செய்திருக்கிறார்கள். இங்கே செழிப்பை விவரிக்கிற வருணனை கோயிலில் வழிபடும் ஆத்திகக் குடும்பத்தின் ஊடல் விளையாட்டையும் அதனால் நிகழும் பேரின்ப விளைவையும் காட்டுகின்றது அல்லவா? உள்ளுறை உவமம் சங்கத்து நூல்களில் மட்டுமேயன்றித்

திருமுறைகளிலும் கையாளப்பட்டு வந்து மிளிர்கின்றன என்பதை இதனால் அறியலாம்.

உவமை எல்லா அணிகளிலும் எளிமையானது ஏனைய அணிகட்குத் தாய் போன்றது. தமிழ்க் கவிஞர்கள் உவமைகளை வெகு மேன்மையாகக் கையாண்டி -ருக்கின்றனர். அவைகள் சங்கத் தமிழில் இணையற்ற மணிகள், உள்ளுறை என்பது உவமைகளின் இமயச் சிகரம். இலக்கிய உலகிற்குத் தமிழின் ஒப்பற்ற கொடை.

2. இறைச்சிப் பொருள் இது உள்ளுறை உவமத்தை விட நுட்பமானது. இறைச்சியை உடனுறை என்று தொல்காப்பியர் கூறுவர்.

தலைவன் களவு ஒழுக்கத்தில் ஈடுபட்டுப் பகற்குறி. இரவுக்குறி இரண்டிலும் வருகிறான். அவன் அபாயத் தைக் கண்ட தோழி திருமணத்திற்கு ஏற்பாடு செய் கிறாள் களவொழுக்க மயக்கில் இருக்கும் தலைவனுக்குத் திருமண முயற்சியில் ஈடுபடுமாறு வெளிப்படையாக எப்படிச் சொல்வது? இறைச்சியினால்,

நீர் நிறங் கரப்ப ஊழுறுபு உதிர்ந்து
பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்றுக்
கரா அம் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி
மராஅ யானை மதந்தப ஒற்றி
உராஅ வீர்க்கு முட்குவரு நீத்தங்
கடுங்கட் பன்றியி னருங்காது துறந்து
நாம வருந்துறைப் பேர் தந் தியாமத்து
ஈங்கும் வருபவோ ஓங்கல் வெற்ப
ஒரு நாள் விழுமம் உறினும் வழிநாள்
வாழ்குவ ளல்லளென் தோழி.

நீர்ப்பரப்புத் தெரியாத வண்ணம் மலர் மூடிய கானாறு; அதிலே பாறை நடுவிருக்க விரைந்தோடும் வெள்ளத்திலே ஒரு கழி; யானையின் வலிமை ஒடுங்கு மாறு ஒரு முதலை

அதனைச் சுழிக்குள் ஈர்க்கிறது. முதலை... இத்தகைய அஞ்சு தகு காட்டு வழியிலே நீ இரவிலே வரலாமா? ஏ தேனும் துயரம் நிகழ்ந்து விட்டால் தலைவி வாழ்வாளா?' இவ்வாறு கேட்கிறாள் தோழி. இத்துணை ஆபத்து நிறைந்த வழியில் தலைவியைக் காண்பதற்கு இரவிலே வரலாமா? 'இரவுக்குறி தவிர்ப் பாயாக' என்பதை ஓரளவு குறிப்பாகவும் 'தலைவி வாழாள்' என்பதால் ஓரளவு வெளிப்படையாகவும் குறிப்பிட்டு இரவுக்குறி விலக்கு கிறாள் தோழி. அந்த இரவு வழியில் வருவோர் உயிர்க்கு உறுகாண் தேடித் துன்புறுவது உறுதி என்பதை மேலும் விளக்கிய பின் -

.... எம்படப்பைக்
கொடுந்தேன் இழைத்த கோடுயர் நெடுவரைப்
பழந்தூங்கு நளிப்பிற் காந்தளம் பொதும்பிற்
பகல் நீ வரினும் புணர் குவை அகன் மலை
வாங்கமைக் கண்ணிடை கடுப்பயாய்
ஓம்பினள் எடுத்த தடமென் தோளே

என்று முடிக்கிறாள். மு எம் படப்பைச் சார்பில் பழங்கள் தொங்குகின்ற காந்தளம் பொதும்பிற்குப் பகல் வேளையிலே வந்தாலும் நீ தலைவியைக் கண்டு அளவளாவலாமே' என்பது இப் பகுதியின் திரண்ட கருத்து.

இரவுக்குறி வருதல் இடர்ப்பாடு உடையது; பகற் குறி நாடி வந்தாலும் தலைவியை அடைய முடியுமே' என்று சொல்வதில் இறைச்சிப் பொருள் குறிப்புப் பொருள் என்ன இருக்கிறது என எண்ணத் தோன்றுவது இயற்கை.

இறைச்சி தானே பொருட் புறத்ததுவே என்பது தொல்காப்பியம்.

''பழந்தூங்கு நளிப்பு என்றதனானே பழம் எடுக்க வருவாராலும், காந்தளம் பொதும்பு என் றதனாலே பூப்பறிக்க வருவாராலும் பகற்குறியும் அரிது என்று குறிப்பான் மறுத்தாளாம்'' என்ற பழைய குறிப்புரையால் இவ்வரிகளில் உள்ள இறைச்சிப் பொருளைத் தெளிவாக உணரலாகும்.

முதலில் இரவு வழியின் இடர்ப்பாடு குறித்து இரவுக் குறி மறுத்தாள். அங்கே குறிப்புப் பொருள் ஏதும் இல்லை எனலாம்.

பின்னர், 'பகற்குறி வரலாமே' என்று சொன்ன போது. சொற்களுக்கு அப்பால் - சொற்பொருட்குப் புறத்தே - மறைபொருள் பொதிந்து வைத்துப் பேசினாள் - இங்கே இறைச்சிப் பொருள் சிறக்கின்றது.

இனி தொனி என்ற பகுதி வடமொழியில் மிக உண்டு. அதனைப் பின்பற்றித் தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகளிலும் உள்ளனவாம். தமிழில் அது அப்பெயரில் இல்லை எனலாம். இறைச்சியே தொனி என்பர் ஆராய்ச்சியாளர்.

இதுகாறும் கண்டவற்றால் கவிதை இயல்புகள் பலவற்றைச் சொல்லழகு கொண்டும் பொருளழகு. கொண்டும் தெளிவாக உணர்ந்தோம்.

5. திருக்குறளில் சில அரிய கருத்துக்கள்

திருக்குறள் உலகிலேயே சிறந்த நூல்களில் ஒன்று. அகில் அடங்கிக் கிடைக்கும் அரிய கருத்துக்கள் கணக் கற்றவை. எந்த வகையில் ஆராய்ந்தாலும் புதுப்புதுக் கருத்துக்கள் அதில் தோன்றும். அதிகார வரிசையைப் பாருங்கள் அதிலே ஓர் ஒப்பற்ற அமைதி இருக்கிறது. நர் இடத்தில் ஓர் அதிகாரம் வைக்கப்பட்டிருந்தால் அஃது ஏன் அங்கே வைக்கப்பட்டது என்பதற்கு நிரம்பக் காரணங்கள் காட்டலாம். உரையாசிரியர்கள் இந்த முறையில் பல காரணங்களை அடுக்கடுக்காக கூறுகின்றனர். அதிகாரம் மட்டும் அல்ல ஒரு குறள் ஏன் ஒன்றுக்கு முன்னும் மற்றொன்றுக்குப் பின்னும் வைக்கப்பட்டது என்பதற்கும் காரணங்கள் கூறுவர். இந்த முறையில் உரையாசிரியர்கள் பல திறப்படுவர். ஒருவர் சொன்னதை மற்றொருவர் மறுப்பதும் உண்டு. இத்தனை வேறுபாடுகளுக்கும். காரணக் கற்பனை களுக்கும் திருக்குறள் இடம் கொடுக்கிறது. இதனால் அஃது எத்தனை நுட்பம் கொண்ட நூல் என் பகை அறிய முடிகின்றது.

இந்த வைப்பு முறைகளைக் குறித்துப் பல கதைகளும் கட்டிவிடுகின்றனர். ஒருவர் சொன்னார்: திருவள்ளுவரை ஓர் அறிஞர் கேட்டாராம். உலகில் பெரியவர் யார் என்றது கேள்வி. அதற்கு அவர், நான் சொல்கிறேன் கேட்டுக் கொண்டிருங்கள் என்று தம் நூலைப் பாடத் தொடங்கினாராம். இல்லறம் துறவறம் கூறி. அறத்துப்பால் முடித்தார். அவைகளில் கண்ட மக்கள் பெரியர்கள் அல்லர் என்று ஊகிக்கப்பட்டது. பிறகு பொருட்பாலில் அரசும் அமைச்சும் கூறப்பட்டன. அவர்களும் பெரியவர்கள் அல்லர் எனப்பட்டது. இவ்வாறு 95 அதிகாரங்கள் சென்றன. 96-இல் குடிமை. என்பது விவரிக்கப்பட்டது. உயர் குடியிற் பிறந்தார்களே உயர்ந்தவர்கள் என்று கூறப்பட்டது. ஆகவே, உயர்வின் சின்னம் தொடங்கியது. பிறகு 97-இல் மானம் என்பதைக் கூறினார். மானமுடையவர் உயர் குடிமையில் உதித்தவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று காட்டப்

பட்டது. பிறகு 98-ல் பெருமை கூறப்பட்டது. பெரியாரது தன்மை சொன்னதும் அவர்கள் மானம் உடையவர்களிலும் சிறந்தவர் என்று அறியப்பட்டது. பிறகு 98- இய சான்றாண்மை கூறப்பட்டது. சான்றோர்கள் பெரியவர்களிலும் உயர்ந்தவர்கள் - எனப்பட்டது. பிறகு 10!) -இல் பண்புடைமை கூறப்பட்டது. பண்புடையோர் சான்றோர்களிலும் சிறந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஆகவே, இந்த ஐந்து வகை மக்களிலும் பண்பாடு உடையோரே உலகத்தில் மிக உயர்ந்தோர் என்பது திருக்குறளின் கருத்து எனத் தெளிவு படுத்தப்பட்டது. இந்தக் கருத்தை ஒவ்வொரு குறளாக எடுத்துக் கூறினும் வெகு செவ்வையாகத் தெரியவரும்.

இனி, அதிகார வைப்பு ஒன்று மட்டுமன்றித் தனிக் குறள்களின் வைப்பும் அப்படியே அவற்றின் வரிசை மட்டும் அன்று. வெவ்வேறு குறள்களைப் பொறுக்கி எடுத்து ஆராய்ச்சி முறையில் சேர்த்தினாலும் அங்கே ஒற்றுமையும் சோபான முறையும் காணலாம்.

உலகினர்க்கு உதவி புரியும் செயலில் பலவகைகள் உண்டு. அவைகளில் ஒன்றன் மேல் ஒன்றாகப் பலவற்றை உவமைகளுடன் கூறி எவ்வாறு ஒவ்வொன்றும் படிப்படி, யாகச் சிறந்தது என்று 'ஒப்புரவறிதல்' என்ற அதி காரத்தில் வைத்துக் கூறுகிறார். ஒப்புரவறிதல் என்ற தலைப்பின் பொருள் ' உலக நடை அறிந்து செய்தல்' என்று உரையாசிரியர் கூறுகின்றனர். நீதி நூல்களில் கூறியுள்ளவற்றை ஓதி அவைகளைப் பற்றி நடப்பது மட்டுமன்றி ஏனையவற்றை உலக நடையை அறிந்து பின்பற்றி நடத்தலாகும். உலக நடையை அறிதற்கு உலகில் காணும் உவமைப் பொருள்களே ஆதாரம் ஆகும். அவ்வித உவமைகள் மூன்றை வெகு அருமையாக ஆசிரியர் வள்ளுவர் எடுத்தாளுகின்றார். அவைகளைக் சிறிது விவரிப்போம்.

ஊர் நடுவிலே இருக்கும் குளம் ஊரார் குடிப்பதற் காக உள்ளது. அது வற்றியிருப்பதும் உண்டு; நீர் நிறைந்து இருப்பது உண்டு. நீர் நிறைந்திருக்கையில் ஊராருக்கு மிகுதியும் பயன் உண்டு. அது போலவே உலக நடையைத் தழுவும் ஓர் அறிவுடையவனுடைய செல்வம் உலகத்தார்க்குப் பயன்படும் என்பதை

'ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு''

என்ற குறளால் ஓதுகிறார்.

குளம் ஓர் அஃறிணைப் பொருள். அதில் நீர் நிறைந் தால் பயன் உண்டு; வற்றினால் இல்லை. அதுபோல் ஒரு செல்வனிடத்தில் நிலைக்கும் செல்வம் இருக்கு மட்டும் மக்களுக்குப் பயன் உண்டு; இல்லாவிடில் இல்லை. குளத்திற்கு மக்கள் சென்று நீர் முகக்க வேண்டுமே ஒழியக் குளம் மக்களிடம் சென்று நீர் தராது. வறியவர் செல்வனிடம் சென்று தான் உதவி பெறுவர், செல்வர்கள் வறியவரிடம் சென்று உதவி செய்ய மாட்டார்கள்.

ஆனால், ஊர் நடுவே ஒரு பழமரம் இருந்தால் அம் மரம் பழுத்தால் அப்பழம் எடுக்க எல்லா மக்களும் வருவார்கள். மரமும் பழத்தை நன்று கீழே தொங்க விடும். மரமும் ஓரறிவு உயிர். குளம் போல் அஃறிணை அல்ல. மரத்தின் பயன் குளத்தைவிட ஒருபடி உயர்ந்தது. இதனை வள்ளுவர் அடுத்த குறளில்,

''பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான் கட் படின்''

என்றார்.

அம்மரமும் ஊர் நடுவே பழுத்தால் மிகவும் பயன்படும். ஊரார் 'எல்லோருக்கும் பயன் கிடைக்கும். பலனும் வெகு எளிதில் மரம் தரும் என்று அறிய வேண்டும். குளம் அப்படி எளிதில் தராது என்று வேற்றுமை காட்டினார்.

மரமோ பழுக்கும் காலத்தில் மட்டும் அதனை அண்டும் மக்களுக்கு உதவிபுரியும். ஆனால், மருந்தோ மனிதனுடைய மகிமை மட்டும் அன்று அவனுக்கு வரும் நோயையும் தீர்க்கும். அம்மருந்தும் ஒரு மரத்தின் வேரில் இருக்கும். அதனை எடுக்க மண்ணைத் தோண்டி வேரை வெட்டி எடுக்க வேண்டும். அந்த வேரைச் செதுக்கி எடுக்கையில் அம்பாரம் பட்டுப் போனாலும் போகும். ஆனால், அதுவோ பிணி தீர்க்கத் தப்பாது. தன் உயிர் போனாலும் பிறர் பிணியைத் தீர்ப்பது அந்த மரம், இதனால் அம்மருந்து மரம் உதவி செய்வதில் மிக மேன்மையது அன்றோ? இதனை,

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்

என்று கூறுகிறார். அப்படிப்பட்ட உதவி செய்பவன் பெருந்தகையான் என்று கூறப்பட்டான். அவன் தன் செல்வம் போனாலும் பிறர் வறுமை என்ற நோயைத் தீர்ப்பான் என்கிறார். ஆகவே, அந்த வண்ணம் உதவி செய்தலே மிகச் சிறப்புடையதாகும்.

யாக்கை நிலையாமையைக் குறித்து மற்றொரு அரிய கருத்து ஒரு குறளில் உள்ளது.

''குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு''

என்ற குறளுக்குப் பரிமேலழகர் ஒரு விதமாகவும் மணக் குடவர் வேறுவிதமாகவும் உரை கூறுகின்றனர். உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள நட்பு ஒரு பறவை பருவம் வந்தவுடன் தன்னோடு வந்த முட்டைக் கூட்டை விட்டு விட்டு வெளியே பறந்தாற் போன்றது என்றார் பரிமேலழகர். குடம்பை என்றால் முட்டை என்று பொருள் கொண்டார். ஆனால், மணக்குடவர் குடம்பை என்றால் கூடு என்று பொருள் கொண்டு ஒரு பறவை தான் வாழும் கூட்டை விட்டு வெளியே பறந்தாற் போல என்று உரைத்தார். இந்த உவமையைப் பரிமேலழகர்

மறுத்து, அது சரியன்று என்று காரணங் காட்டுகிறார். கூண்டு புள்ளோடு பிறந்திலது. உயிர்கள் உடலோடு உண்டாயது. புள் கூண்டிற்குத் திரும்பி வரும்; உயிரோ திரும்பி வராது. ஆகவே, இந்த உரை சரியன்று என் கிறார், ஆனால் இக்குறள் உரை போல் அடிக்கடி காரணம் காட்டி வரும் நாலடியார் குடம்பையைக் கூண்டு என்றே உரைக்கின்றார். அதற்குச் செய்யுள் :

கேளாதே வந்து கிளைகளால் சிற்றோன்றி
வாளாதே போவார்கள் மாந்தர்கள் - வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து''

மனிதர்கள் 'வரலாமோ' என்று கேட்காமலே வந்து உறவினனாய் குடும்பத்தில் தோன்றிச் சிறிது காலம் இருந்து - தம் கூடுகள் மரங்களில் தங்கும்படி அவற்றை விட்டு, சும்மா சொல்லாமலே நெடுந்தூரம் ஆகாயத்தில் நீங்கிப் பறந்து போகிற பறவைகள் போல உடம்பை உறவினர்க்குத் தம்மினின்று கிடக்கும்படி வைத்து விட்டுச் சொல்லாமலே இறந்து போய்விடுவார் கள் என்பது பொருள். பறவைகள் தம் விருப்பத்தின்படி மரங்களில் வந்து சேர்வதும், விட்டுச் செல்வதும் போல, மனிதர் முற்பிறப்பில் செய்த ஊழ்வினை வசத்தால் ஒரு குடியில் பிறத்தலும், இறத்தலும் அடைவர் என்பது பொருள்.

ஊன்றிப் பார்த்தால் இரு உரையாளரும் வெவ்வேறு நிலைகளில் இருந்து பொருள் கூறுகிறார்கள் என்று அறிய வேண்டும். இரண்டிலும் உண்மை இருத்தலும் காண்க. இவ்வாறு பல பொருள் உள்ள குறள்கள் பலவும் இருக்கின்றன.

6. திருவாசகத்தில் கண்ட உயிர் வகைகள்

மணிவாசகப் பெருமான் மிகுந்த உலக அனுபவம் வாய்ந்தவர் என்பது அவருடைய அருமை வாக்கு களாலேயே தெரிய வரும். தாம் எடுத்துரைக்கும் கருத்துக்களை அழுத்திச் சொல்வதற்கு அங்கங்கே பல உவமைகள் எடுத்தாண்டுள்ளார். அவ்வுவமைகளில் பொதுவாக மக்கள் காணும் பொருள்களை எடுத்துக் கொண்டு அவற்றின் பண்புகளால் உவமைகளை உறுதிப் படுத்துவார். அப்பொருள்கள் நாள் தோறும் நாம் காணும் பொருள்களேயன்றிக் காணாததும் மனத்திற்கு அப்பாற்பட்டதுமான அதிசயப் பொருள் அல்ல. அவ் விதப்பொருள்களில் உலகில் நடமாடும் உயிர் வகைகளை எடுத்தாளும் தன்மை நன்கு ஆராயத்தக்கது. உயிர் வகைகளையும் உயிர் வகைகளின் குணங்களையும் நன்கு அறிந்த அவர், அவைகளைப்பற்றி வெகு தெளி வாகத் தம் கருத்துக்களுக்கு இணங்க அமைத்திருக்கும் இணைப்புகளே மிகப் போற்றத்தக்கவை. அவ்வாறு உயிர்களின் இணைப்பை ஏற்றுக்கொண்டு தம் கருத்துக் களை அமைப்பதிலே அச்செயல் இயற்கையாக வந்ததோ அல்லது வற்புறுத்தி அமைந்தனவோ எனக் கேட்டால், இயற்கையாக வந்தன எனத்தான் கூற வேண்டும். சொற்களின் அமைதியும் கருத்துக்களின் அமைதியும் அனுபவத்தின் விளைவாக இயற்கையாக வந்தவை எனவே கூற வேண்டும்.

திருவாசகத்தில் எடுத்தாண்டிருக்கும் உயிர் வகை களின் பெயர்களைக் கணக்கிட்டால் ஐம்பத்திரண்டு பெயர்களைக் காணலாம். அவைகளில் ஒரு பொருள் பல பெயர்களை நீக்கி உயிர்வகைகளைக் கணக்கிட்டால், இருபத்தேழு உயிர்களின் பெயாகள் காணலாம். அவை களில் விலங்குகள் ஒன்பது, பறவைகள் ஆறு, பூச்சி புழுக்கள் ஆறு. நீர்வாழ்வன ஐந்து. ஊர்வன ஒன்று. ஆகும். விலங்குகளிலே, பசு, எருது, யானை, புலி, குதிரை, பன்றி, நாய், மான் முயல் என்றவைகளும்-. பறவைகளில் குருகு, கிளி, கோழி, குயில், மயில், குஞ்சு முதலியவைகளும் - பூச்சி புழுக்களில் ஈ, தும்பி, தேனீ.

நாக்குப்புழு, விட்டில் புழு என்பவைகளும் - நீர் வாழ். வனவற்றுள் மீன், கயல், கெளிறு. முதலை, சுறா, என்பவைகளும் - ஊர்வனவற்றில் பாம்பும் கூறப் பட்டுள்ளன. இப்பெயர்களை எடுத்தாண்டிருப்பதில் சில பொதுவாகவும், சில சிறப்பாகவும் ஆளப்பட்டுள்ளன. அவ்விதம் ஆளப்பட்டுள்ள சிறப்புக்களுட் சில இங்கே.. எடுத்துரைப்போம்.

விலங்குகளிலே மிகுதியாக எடுத்து ஆளப்பட்ட உயிர் நாய். நாயேன் என்றும் நாயினேன் என்றும் தாயிற் கடையினேன் என்றும் தம்மைத் தாழ்த்திக். கூறியிருக்கும் இடங்கள் பல. பன்னிரண்டு இடங்களில் நாயின் பெயர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. நாயைத். தாழ்ந்த உயிர் என்று உலகம் முழுவதும் கொள்ளுகிறது. அதனுடைய நன்றியினைப் பின்பற்றி மேலை நாட்டோர்கள் அதனை அருகில் சேர்த்திக்கொண்டாலும் பிறரைத் திட்டும் போது நாயே என்று வைவதைப் பார்க்கிறோம்.. நம் நாட்டிலோ நாயை மிகவும் தாழ்த்தி அது தீண்டடத்த காத உயிராகக் கொள்ளப்படுகிறது. அதனைக் கருதித் தான் மணிவாசகனாரும் தம்மை நாயாகத் தாழ்த்திக் கொண்டு பேசுசிறார். நாயின் சில கெட்ட குணங்களை நேரில் அறிவோம். அதனுக்குத் தவிசிட்டு வைப்பினும் குப்பைக்கே போகும் என்றதை ஆசிரியரும் கொண் டுணர்த்திட்டிருக்கிறார். நாயை அடித்தாலும் நன்றி காட்டக் கூடிய நற்குணம் வாய்ந்தது. ஆகவே தம்மையே வெறுக்கினும் தாம் தலைவனுக்கு நன்றி, காட்டும் கருத்து ஆசிரியர்க்கு இருக்கும் என்ற குறிப்பு அங்கே தோன்றுகிறது.

பசுவைக் சொல்லுகையில் கற்றாவின் மனமும், வளர் ஆவுடன் குருட்டு ஆ போதலையும் எடுத்துரைக்கிறார். கன்றின் மேல் ஆ கொண்டிருக்கும் அன்பு பெயர் பெற்றதன்றோ! தொல்பசு குழாங்கள் என்ற இடத்தில் பசு மந்தையைக் குறித்து ஒன்றோடு ஒன்று இனைந்திருத்தலைச் சுற்றத்தாருக்கு உவமிக்கிறார்.

எருதைச் சே என்றும், ஏறு என்றும் கூறுமிடத்து எருத்துக் கொடியும் எருத்து ஊர்தியும் பெருமானுக்கு உள்ளதைச் சே என்ற சொல்லாலும் ஆண் தன்மை காட்ட ஏறு என்றும் கூறுகிறார். யானை, கரி, வேழம் முதலிய சொற்களால் கரி உரி போர்த்த ஐதீகத்தைக் குறிக்கிறார். புலி என்ற பொருளுடைய உழுவை, கானப்புலி, புலி வேங்கை என்ற சொற்கள் புலித்தோல் அணிந்த வரலாற்றையும் புலிக்கும் அஞ்சார் என்ற அதன் கொடி குழாத்திற்கும் எடுத்தாள் கிறார். குதிரையைப் பரி வான்புலி என்ற சொற்களால் கூறிப் பாண்டியனுக்காகக் குதிரை வாங்கப் போன ஐதீகத்தைக் கூறுமிடத்துக் கூறுகிறார் 'குதிரையைக் கொண்டு குடநாடதன் மிசைச் சதுர்படச்சாத்தாய்த் தானெழுந்தருளியும் 'நரியைக் குதிரையாக்கிய நன்மையும்' கொற்றக் குதிரையின் மேல் வந்தருளியும்' 'கழுக் கடை கடைபிடித்துக் குதிரையின் மேல் வந்தருளி, நரி களெல்லாம் பெருங்குதிரை ஆக்கியவனும் 'நரியைக் குதிரைப் பரியாக்கி' முதலான தொடர்களால் தாம் கண்ட வரலாற்றைக் கூறுகிறார்.

கேழல், பன்றி. வராகம் என்ற சொற்கள் திருமால் பன்றியாக ஈசன் அடி காணச் சென்ற ஐதீகம் சொல்லப் பயன்பட்டன. மானும் ஈசன் அணிந்த வரலாறு கூறுவது. முயற்கூடு என்று திங்களில் உள்ள கறுப்பைப் பற்றிக் கூறுகிறார்.

இனி, பறவைகளைக் கூறுங்கால் குருகு தடாகத்தில் உள்ளதாகக் கூறுவார். கிளி, பைங்கிளி, பசுங்கிளி, அஞ்சுகம் முதலிய சொற்கள் ஈசனுடைய தசாங்கத்தைக் கூறுமுகத்தான் கிளியை விளித்துக் கூறுகிறார். இளங்கிளி, இன்சொல் மரகதம், பூஞ்சோலைத் தத்தை, செய்யவாய்ப்பைங்கிளி, சிறகிற் செல்வி, கிஞ்சுகவாய் அஞ்சுகம், தேன்மொழிக்கிள்ளை, இன்பான் மொழிக் கிள்ளை, ஆயபொழில் கிள்ளை. சோலைப் பசுங்கிளி' என்று அதற்கு ஏற்ற அடைமொழிகளைக் கூறுகிறார். கோழி கூவிக்காலையில் மக்களை எழுப்புவதை திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சியில் குறிக்கிறார்.

குயிலுக்குத் தனிப்பத்துப் பாடல்கள் தருகிறார். கீதம் இனிய குயில் முதலிய பத்து அடைமொழித்தொடர்கள் அதற்கிடுகிறார். பெண்கள் நடையை மயில் நடைக்கு ஒப்பிடுகிறார். இனி பார்ப்பு என்ற பொதுப் பறவைக் குஞ்சைக் கூறுகிற போது முட்டையினின்று குஞ்சு வெளிப்படும் என்கிறார்.

மேலும் புழுக்கள் பூச்சிகளையும் உவமைப்படுத்துகிறார். கோத்தும்பிக்குத் தனியாகவே பாடல்கள் கொண்ட பதிகம் இருக்கிறது. அரசுத்தும்பி மிகப் பெரிதாக இருக்கும். அது வெகு இனிமையாக ஊதுகிறது. அதைப் பார்த்து ஈசனுடைய பெருமைகளைச் சொல்லி' ஊதும்படி தூண்டுகிறார். இப்பதிகத்தில் மிகச்சிறந்த உண்மைகள் மிளிர்கின்றன. தேனீ, விட்டில், அறுகால் ஈ, கிருமி அல்லது புழு இவைகள் பொதுவான இயல்புடைய வைகள். அவற்றை எடுத்தாண்ட முறையும் அவ்விதமே. ஆனால், நாங்கூழ், நாவற்றி என்ற இரண்டு பெயர்கள் நாக்குப் பூச்சிக்குரியன. அவற்றை வெகு நுட்பமாக எடுத்தாளுகிறார். பல பேர் அச்சொற்களின் பொருள் அறியாது மயங்கிப் பொருள் கூறுகின்றனர். பல பேர் அப்பெயர்கள் புழுக்களைக் குறிக்கின்றன என்பதை அறியாமலே அச்சொற்களை விட்டு விட்டனர். நீத்தல் விண்ணப்பத்திலே இருபத்தைந்தாவது பாடலில் எறும் பிடை நாங்கூழ் எனப்புலனால் அரிப்புடைந்தே பெறுந்த மனே' என்று தம்மைக் கூறுகின்றார். எறும்புகளுக்கிடையே நாக்குப்புழு அகப்பட்டுக் கொண்டால் அதனால் அது துன்பப்பட்டுக் கடிக்கப்பட்டு உள்ளது போல் புலன் களால் நான் அரிப்புண்டேன் என்றார். எறும்புகளால் புழு துன்பப்படுவதை நாம் கண்டிருக்கிறோம். அது துள்ளி விழுவதையும் கண்டிருக்கிறோம் இவ்வுவமை வெகு தெளிவானதும் உருக்கமானதுமா கும் மேலும், அதே நீத்தல் விண்ணப்பத்தில் பதினான்காம் பாடலில் 'வெள்ளத்துள் நாவற்றி யாங்கு' என்ற இடத்தில் 'நாவற்றி' என்ற சொல் நாக்குட் பூச்சி என்று அறியா' தோர் ' வெள்ளத்தில் வீழ்ந்தும் நாவறட்சி கொண்ட 'எனக்கு' என்று பொருள்

கொள்ளுகிறார்கள். வெள்ளத்தில் வீழ்ந்தால் நாவறட்சி எப்படி உண்டாகும்? வாயில் நீர் புகுந்து உயிர் தான் போகும். வெள்ளத்தில் விழுந்த நாக்குப் பூச்சி போல், துன்புற்றேன் இந்த பிறவி வெள்ளத்தில்' என்று பொருள் கொள்வது சரியாக இருக்கும் என்க.

மேலும், நீர் வாழும் உயிர்களில் மீன், கல்ய கெளிறு, சுறா என்ற மீன் வகைகளைக் குறிக்கிறார்.

கடலின் அருகே துறைமுகங்களிடை சென்றிருந்த தினால் மீனைப் பற்றிக் கூறும் நிலைமை வந்திருக்கிறது. திருப்படையாட்சியிலே ஈசனை மீன் வலை வீசிய காளவன் என்கிறார். உயிராகிய மீன்களை அருளாகிய வலையால் பிடிப்பவன் அவன். ஏனைய சமயத்தாரும் இதனைக் கூறுவர். மேலும் சேவேடராகிக் கெளிறு' என்றதில் ஒரு ஐதிகத்தை குறிக்கிறார். மீன் பிடிக்கும் வேடனாகிக் கெளிறு என்ற மீனைப் பிடித்து ஆசம்பத்தை வாங்கினார் என்ற திருவிளையாடல் இங்கே குறிக்கப்பட்டது. முதலையை மாதர்க்கு உவமைப்படுத்தி அவர்களை முதலையைப் போல் என்னைக் கடித்துத் துன்புறுத்து கின் றனர் என்கிறார்.

இனி, இறுதியாக ஊர்வனவற்றுள் பாம்பை மட்டும் கூறு அதனை அரவு, அரவம், டையரவு, பொங்கரவம், நாகம், மாசுணம் என்ற பல பெயர்களால் குறிக்கிறார். உயிர் வகைகள் கூறும்போது பாம்பும் ஒருவகை என்கிறார்: ஈசன் அணிவகைகளைக் கூறுமிடத்து பொங்கரவு, பையரவு, நாகம், மாசுணம் என்ற பல பெயர்கள் வருகின்றன. பாம்பு கச்சு ஆகவும் இருக்கிற தென்று மாசுணக் கச்சுபாடி என்கிறார். ஆகவே இவ்வாறாகப் பாம்பின் அணிச் சிறப்பினைக் கூறுகிறார்.

மேலே கூறிய வகையில் உயிர் வகைகளில் விலங்குகள் பறவைகள் பூச்சி புழுக்கள், நீர் வாழ்வன, ஊர்வன ஆகிய இருபத்தேழு வகை உயிர்களை இந்நூலில் ஆசிரியர் எடுத்தாளுகிறார். இவைகள் எல்லாம் ஒருவர் நேரில் காணும்

உயிர்களே ஆகும். அலைகளின் பண்புகளையும் எவரும் அறிவோம். ஆனால், அவற்றை எடுத்தாளும் முறைதான் மிகச்சிறப்பானவை, வெகு எளிதில் பொருள் தெரிவிப்பதற்கு எளிதாகக் கிடக்கும் உயிர்களை உவமைகளாக எடுத்தாளுவதே பெரியார்களின் சிறந்த முறை என்று இங்கே அறியலாம். இதனை மணிவாசகனார் மிகச் சிறப்பாகத் தம் திருவாசகத்தில் காட்டியுள்ளார் என அறியலாம்.

7. பாவைப் பாடல்களின் காலம்

பொதுவாகப் பாவைப் பாடல்கள் என்று சொன்ன வவில் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த கவெம்பாவையும் ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த கப்பாவையுமே நினைவிற்கு வரும். தவிர, சென்ற சில ஆண்டுகளாகத் தமிழ்நாடு எங்கும் திருவெம்பாவை, வருப்பாவை மகா நாடுகள் நடைபெற்று வருகிறதினாலே தல விரண்டு பிரபந்தங்களையும் தமிழ் மக்கள் நன்றாக அறிவார்கள். இவைகளின் கருத்துக்களும் பொது மக்களுக்கு நன்கு தெரிந்து விட்டன. மேலும், சிறுவர்களிலும் சிறுமிகளிலும் பலபேர் இப்பாடல்களை மனப்பாடமும் செய்திருக்கின்றார்கன், மார்கழித் திங்களில் சைவ, வைணவ ஆலயங்களிலும் விடியற்கானலயில் தெருக்களில் பாடிச் செல்லும் திருக்கூட்டங்களிலும் இத்திருப்பாடல்கள் இன்னிசையோடு பாடப்படு இன்றன. இவைகளைக் கேட்டும் பொது மக்கள் பாவைப் பாடல்களை அறிவார்கள்.

இனி பாவைப் பாடல்கள் இவ்விரண்டோடு நிற்கவில்லை, சமணர்களிலும், பௌத்தர்களிலும் பாவைப் பாடல்கள் உண்டு. மேலும், பிற்காலங்களில் பாடுதுறை பாடிய தத்துவராய சுவாமிகளு / பாவைப் பாட்டை தம்முடைய ஆசிரியன் மீது பாடிப் புகழ்ந்திருக்கின்றார். பாவைப் பாட்டை யொட்டி அதே கருத்தோடு விளங்கி வரும் திருப்பள்ளி யெழுச்சியையும் மாணிக்க வாசகரும், தொண்டரடிப் பொடியாழ்வாரும் சைவத்திலும் வைண வத்திலும் முறையே

பாடியிருக்கின்பார்கள். இத்திருப் பள்ளியெழுச்சியைப் போலப் பல பிரபந்தங்களைப் பின்னால் வந்த புலவர்கள் பாடியிருக்கிறார்கள். சிதம்பர முனிவர், இராமலிங்க அடிகள். பாரதியார் முதலியோர் அண்மைக் காலம் மட்டும் தொடர்ந்து பாடியிருக்கின்றார்கள். பின்வந்தவர்கள் எல்லாரும் மாணிக்கவாசகரையும் ஆண்டாளையும் பின்பற்றியே எழுதியிருக்கின்றார்கள்.

மாணிக்கவாசகர், ஆண்டாள் என்ற அடியார்கள் தீட்டி வைத்த கருத்தோவியங்களைப் பின் வந்த புலவர் கள் அதே மகுடத்தில் எழுதி வைத்தது மட்டுமன்றி வேறு புலவர்கள் வேறு பெயர்களையும், இடங்களிலும் எடுத்து ஆண்டிருக்கின்றார்கள். திருவெம்பாவையிலும் திருப்பா வையிலும் ஆண்ட கருத்துக்களையும், சொற்றொடர் களையும் பின்னால் வந்த கம்பர் முதலிய பெருங்கவிகள் எடுத்தாண்டிருக்கிறார்கள். ஆகவே, அக்கவிகளுக்கு முந்தியே இந்த இரண்டு பாவைப் பிரபந்தங்களும் தோன்றியிருக்க வேண்டுமல்லவா? பொழுது புலர்ந்த போது காணும் இயற்கைக் காட்சிகளும், மக்கள் பழக்கவழக்கச் செயல்களும் வெகு நன்றாக மனதில் படும். அவைகளைப் பெரும்புலவர்கள் வெகு நன்றாக விவரித் திருக்க, பின் வந்த கம்பர் முதலியோர்கள் அவைகளில் உள்ளபடியே பாராட்டியிருக்கின்றார்கள். ஆகவே, காலத்தினால் முற்பட்டது பாவைப்பாடல்களாகும்.

இனி, இந்த இரண்டு பழமையான பாவைப்பாடல், களும் எந்தக் காலத்தில் எழுதப்பட்டன என்று தெளிவாகக் கூறுவது மிகவும் கடினம். திருவெம்பாவை என்பது திருவாசகத்தில் உள்ள 51 பதிகங்களில் ஒன்று. திருப்பாவை என்பது நாச்சியார் அருளிச் செய்த, பிரபந்தங்களில் ஒன்றாகும். இவைகள் இரண்டும் பொது வாகச் சைவ, வைணவ மறுமலர்ச்சிக் காலங்களில் தோன்றியவை. தென்னி நதியாவில் பௌத்தமும், சமணமும் சீரழிந்த காலத்தில் சைவமும் வைணவமும் மலர்ந்து மேலோங்கின. அதனைப் பல்லவர்கள் காஞ்சியில் ஆதிக்கியம்

செலுத்திய காலம் என்பார்கள். அதாவது 6-ஆவது நூற்றாண்டு முதல் 9-ஆவது நூற்றாண்டு வரை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். திருவெம்பாவை பாடிய மாணிக்கவாசக சுவாமிகளை முதல் நூற்றாண்டு முதல் 9 ஆவது நூற்றாண்டு வரை வாழ்ந்தவராகக் கூறுவார்கள். மாணிக்கவாசகர் பெயரைச் சேக்கிழார் குறித்திரா திருந்தும் அவருடைய கருத்துக்களை எடுத்தாண்டிருக் கின்றார் என்பது திண்ணம். ஆகவே, பல காரணங் களையும் ஆராய்ந்து கூறுமிடத்துத் திருவெம்பாவை 8ஆவது நூற்றாண்டிற்கு முந்தியே தோன்றியிருக்க வேண்டுமென்பது திண்ணம்.

மேலும், திருவெம்பாவையை ஓதுவது தமிழ் நாடு மட்டுமேயன்றிக்கிழக்கே இந்து, சைனா தேசத்திலுள்ள கம்போடிய நாட்டிலும், அரசனுடைய முடிசூட்டு விழாவில் பாடப்பட்டு வந்தது. இன்றைக்கும் பாடப் பெற்று வருகின்றதாம். இந்தியாவுக்கும் கம்போடியா வுக்கும் ஏற்பட்ட தொடர்பு 16-ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்தியே தொடங்கியது ஆகவே, திருவெம்பாவையின் பழமை இந்தச் செய்தியும் வற்புறுத்துகின்றது.

இனி திருப்பாவையைப் பற்றிக் கூறும்போது வைணவ நூலாசிரியர்கள் அந்நூல் கலியுகத் தொடக்கத் திலேயே எழுதப்பட்டது என்று சொன்னாலும், திரு கோபிநாதராவ் அவர்கள் அதனை 9-ஆவது நூற்றாண் டின் நடுப்பகுதியென்று பல சான்றுகளோடு கூறியிருக் கின்றார்கள். (அவர் எழுதிய வைணவ வரலாறு என்ற நூலைப் பார்க்க) ஆகவே. இதுவரை சொன்ன காரணங் களைக் கொண்டு பாவைப் பாடல்கள் 6-ஆவது நூற்றாண்டு முதல் 9- ஆவது நூற்றாண்டுகளில் அருளப்பட்டன என்றறிய வேண்டும்.

இனி அவ்விரு நூல்களிலும் உட்சான்றுகள் இருக்கின்றன வா வென்று ஆராயும்போது அவ்வளவாக. இல்லையென்றே கூற வேண்டும். இவ்விரண்டு இலக்கிய மேம்பாட்டில் மிக உயர்ந்தன என்பதில் குறைவேயில்லை இவற்றைப் போல

வேறு நூல்கள் எந்த மொழியிலாவது உண்டோ என்று உறுதியாகக் கேட்கலாம். விடியற் காலத்துக் கண்கொள்ளாக் காட்சி, வரம்பு மீறிய இயற்கையழகுகள், மக்களும் பறவைகளும், கால் நடைகளும் செய்யக் கூடிய அரிய எளிய செயல்கள் முதலியவைகளெல்லாம் உணர்ச்சி பொங்கும் வகையில் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் சரிதச் சான்றுகள் தான் இல்லை. அவைகள் அமைக்க வேண்டிய சமயமும் இல்லை. நூல்களின் அமைப்பும் அவைகளுக்கு இடங் கொடுக்கவில்லை. திருவெம்பாவையில் ஒரு சிறிதும் கிடையாது. மாணிக்கவாசகப் பெருமான் காலத்தில் கையாளப்பட்டு வந்த இளமங்கையரின் ஒரு வழக்கத்தைப் பின்பற்றி மாணிக்க வாசகப் பெருமான் அதற்கு ஓர் அன்புப் பூச்சும் இறை வணக்க வண்ணமும் கொடுத்துப் பின் வரும் மக்களுக்கு ஓர் அருட் புதைய லாகத் தந்திருக்கிறார். இச்செய்தி பழமையை உணர்த்துகிறதேயன்றிக் கால வரையறை காட்டுகிறதில்லை.

அது போலவே ஆண்டாளும் அக்காலத்தில் வழங்கி வந்த பாவை நோன்பை அடிப்படையாக வைத்து ஓர் அரிய கருத்தோவியம் உண்டாகியிருக்கின்றார். அதிலும் சிறந்த கருத்துக்களன்றி காலவரையறைச் சான்று இல்லை.

ஆனால், அத்திருப்பாவையில் ஒரு சிறு துணுக்கு மட்டும் கிடைக்கின்றது. அஃது என்ன வெனில், ஆண்டாள் வானத்தைப் பார்த்த பொழுது விடியல் பேரத்தில் வெள்ளி யெழுந்து வியாழன் உறங்கிற்று. என்ற செய்தியே யாகும். அதாவது விடிவதன் போது வெள்ளி உதயமாயிற்று வியாழன் மறைந்தது என்பதாகும். வெள்ளி யென்ற கோள் ஞாயிற்றின் தோற்றத்திற்கும் முந்திக் கிழக்கே தோன்றிற்று: குரு என்ற கோள் = மேற்கே மறையத் தொடங்கிற்று என்பதாம் இந்த வாம் நிலை எப்பொழுது ஏற்படும் என்பதைச் சற்று ஆராய்வோம்.

நிகழ்ந்த மார்கழித் திங்களில் கோள்களின் நிலையைப் பார்த்தவர்கள் ஆண்டாள் கூறிய முறையில் அவைகள் இருக்கவில்லை என்று அறிவார்கள். பஞ்சாங் கமும் அதையே

கூறும், வெள்ளி என்ற கிரகம் மகர ராசியிலும் வியாழன் என்ற கிரகம் மேஷ ராசியிலும் இருந்தன. இவ்விரண்டு கிரகங்களுக்கு இடையில் கும்பம் மீனம் என்ற இரண்டு ராசிகள் தான் இருந்தன. இவ்விரண் டுக்கும் இடையில் 6 ராசிகள் இருந்தால் அன்றி ஒன்று உதிக்கமற் யொன்று மறைய முடியாது. மேலும் வெள்ளி 8. 9 மணி அளவில் மேற்கே தோன்றிற்று. வியாழனோ தலைக்கு நேராக உச்சியில் இருந்தது. இவ்விரு கிரகங்களும் மார்கழி முழுவதும் விடியற்காலையில் தோன்றவில்லை. ஆகவே, ஆண்டாள் கூறிய கிரக நிலை இந்த ஆண்டிற்கு ஒப்புதம் ஆகாது. சில ஆண்டுகளின் பின்னரே இவைகள் ஒப்புதல் ஆகக்கூடும். அதற்குக் காரணம் கூறுவோம்.

கிரகங்களின் அசைவைக் குறித்துச் சோதிட நூல் அடியிற் கண்ட விதியைக் கூறுகின்றது.

''குறித்த கதிரோன் புகர்யுந்தி
குலவி நிற்கு மொருமாதம்
செறுத்த மதிநா ளிரண்டே கால்
செவ்வாய் மாத மொன்றரையாம்
கறுத்த சனி யாண் டிரண்டரையால்
கனகனோராண் டாலிரண்டும்
நிறுத்த வாண் டொன்றரையாக
விராசியொன்றில் நின்றிடுமே''

இந்தச் செய்யுளின் படி சுக்கிரன் அல்லது வெள்ளி ஒரு ராசியில் நிற்கும் காலம் ஒரு மாதம் ஆகும். சூரியனும் அப்படியே, குரு அல்லது வியாழனோ ஒரு ராசியில் ஒரு - வருடம் நிற்கும். ஆகவே, சூரியனும் வெள்ளியும் ஆகாய வெளியை ஒரு சுற்றுச் சுற்றுவதற்கு - 12 ராசிகள் செல்லுவதற்கு- 12 மாதங்கள் அல்லது ஒரு வருடம் ஆகும்.

வியாழனோ 12 ராசிகள் செல்லுவதற்கு 12 வருடங்கள் செல்லும். ஆகவே இவர்களில் ஒன்று உதிக்க மற்றொன்று

மறைய ஏற்படும் நிலை 12 வருடங்களுக்கொரு முறை ஏற்படும். ஒவ்வொரு வருடமும் ஏற்படாது.

இனி, சுக்கிரன் காலை நேரத்தில் உதயமாவதற்கும் வெவ்வேறு கெடுக்கள் உண்டு. சில மாதங்களில் வெள்ளி காலையில் தோன்றுவான். சில மாதங்களில் மாலையில் தோன்றுவான். அப்போது அவன் ஒருவனே காலை மீனாகவும், மாலை மீனாகவும் முறையே கூறப்படுவான். ஆண்டாள் பார்த்த காலத்தில் அவன் காலை மீனாகத் தோன்றினான், வெள்ளி காலை மீனாகத் தோன்றும் போது அவன் சூரியனை விட ஒரு இராசி முந்தியே உதயமாகியிருக்க வேண்டும். அதாவது சூரியன் தனுர் ராசியில் இருந்த போது (மார்கழி மாதம்) வெள்ளி விருச்சிக இராசியில் இருக்க வேண்டும். அப்போது தான் வெள்ளி - காலை மீனாக இருக்க முடியும்.

இனி, வெள்ளி விருச்சிக இராசியில் இருந்தால் வியாழன் அதற்கு 6-ஆவது இராசியாகிய சிங்க இராசியில் இருக்க வேண்டும். அது எந்த ஆண்டில் நடைபெற்றிருக்கின்றதோ அந்த ஆண்டில் தான் ஆண்டாள் திருப்பாவை பாடியிருக்க வேண்டும். இந்தச் செய்திகள் புலவர்களும் - அறிவது அருமை ஆகவே, பொது மக்கள் அறிவது அதனினும் அரிது, அதை விவரிக்கத்தான் இந்தச் செய்தி எழுதப்பட்டுள்ளது.

இனி மார்கழித் திங்களில் திருவெம்பாவையும், திருப்பாவையும் பாடுவது வழக்கம் என்று எல்லோரும் பொதுவாக அறிவார்கள். சாதாரணமாகச் சைவர்கள் வீட்டில் மார்கழி மாதம் 30 நாட்களும் திருவெம்பாவை யையும், வைணவர்கள் வீட்டில் திருப்பாவை முழுவதும் அந்த 30 நாட்களிலும் பாடுவார்கள். திருப்பாவையில் நாளொன்றுக்கு ஒவ்வொரு பாடலாக முப்பது நாட்கள் பாடுவதுண்டு. தெருவில் போகும் பஜனைகளி லும் இல்விதமே பாடுவார்கள். ஆனால் ஆலயங்களில் மார்கழி திருவாதிரை பத்து தினங்கள் மட்டும் திருவெம்பாவை ஓதுவார்கள். தொடக்கத்தில

நாள்தோறும் நடப்பது போல் பன்னிரு திருமுறைகளை முறையே ஓதுவித்துத் திருக்கடைக் காப்பிட்டு தீபாராதனை புரிந்து பிறகு திருவெம்பாவை ஓதி அது முதல் திருவாதிரை வரை திருவெம்பாவை ஒன்றையே ஓதித் திருவாதிரை நாளில் திருவெம்பாவை ஓதுகையில் ஒவ்வொரு பாடலுக்கும் தீபாராதனை புரிந்து பின்னர்ப் பன்னிரு திருமுறைகளையும் முறையே ஓதுவதும் தொன்று தொட்டு வந்த முறையாகும். மேலும் திருவாதிரை அல்லாத மற்றைக் காலங்களில் திருவாசகத்தை ஓதினும் திருவெம்பாவை ஓதுவது குறித்து ஆறுமுக நாவலரவர்கள் சைனவ வினாவிடையில் இந்த முறை ஆன்மாத்தத்திற்கும், பரார்த்தத்திற்கும் இரண்டிற்கும் உண்டு என்று கூறியிருக்கிறார்.

வைணவத்தில் ஆலயங்களில் திருப்பாவையை ஏகாதசிக்கு முந்திய பத்து நாளும் இறைவன் முன்னிலை யில் ஓதுவார்கள். அதற்கு இராப்பத்து, பகற்பத்து என்று கூறுவார்கள். அப்போது திருமால் திருவோலக்க மண்டபத்தில் ஆழ்வார்களுடன் எழுந்தருளியிருப்பார். பொதுமக்கள் சேவை செய்வார்கள். ஸ்ரீ வில்லிபுத்தூர், திருவரங்கம் முதலிய கோவில்களில் இவ்விழா வெகு சிறப்பாக நடைபெறும்.

இனி திரு பாவையில் முதற்பாசுரம் 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்' என்று தொடங்குகிறது. அதாவது அந்தப் பாசுரம் பாடும் போது முழு மதி நாளாக இருக்க வேண்டும். மார்கழித் திங்களில் முழுமதி நள ஏகாதசிக்குப் பின் நான்காவது நாள் ஆகும். ஆகவே, ஏகாதசிக்கு முன் பத்து நாள் அளவில் முதற்பாசுரம் பாடியிருக்கும் பட்சத்தில் அது மம மதி நாள் எவ்வாறு ஆகும்!.

ஒவ்வொரு நாள் ஒவ்வொரு பாசுரமாகப் பாடியிருப்பார்களானால், முழுமதி நாள் பின்னே வந்திருக்க வேண்டுமே தவிர முன்னே வந்திருக்க முடியாது. இந்த முறையில் ஆராயும்போது நாட்டு வழக்கத்திற்கு எதிரிடையாக முடிகிறது. இந்தச் செய்தியைப் பொருந்தி வைக்க முடியவில்லை .

திருவெம்பாவையிலும், திருப்பாவையிலும், மழையின் சிறப்பு மிகுதியாகக் கூறப்பட்டுள்ளது. மழை பெய்யும் படியாகவும் கன்னியர்கள் இறைவனை வேண்டிக் கொள்ளுகிறார்கள். மழையைப் பற்றிக் கூறும் போது திருவெம்பாவையில் அம்மையின் திருவுரு வத்திற்கு உவமை கூறியும், திருப்பாவையில் திருமாலின் உருவத்திற்கு உவமை கூறியும் அதனை மன்றாடி, அழைக்கின்றார்கள். பொய்கைகளிலும். மழை நீர் சிறப்பாக நிரம்பியிருக்கின்றது. பெண்களும் நீராடி மகிழ்கிறார்கள். ஆகவே மாணிக்கவாசகர் காலத்திலும், ஆண்டாள் காலத்திலும் மழை மிகுதியாகப் பெய்து வந்தது என்று அறிய வேண்டும். தற்போதோ மார்கழி மாதத்தில் மழை பெய்வதே கிடையாது. கார்த்திகை யோடு மழை நின்று விடுகிறது. இவ்விரண்டு பாவை நூல்களையும் நாம் படிக்கும் போது இந்த வேற்றுமை நன்றாக மனத்தில் புலப்படுகின்றது. இந்த வேற்றுமை வருமாறி கால நிகழ்ச்சிகளும் மாறிவிட்டனவா! இதனை ஆராய்ந்து பாருங்கள்.

8. கம்பர் ஓர் ஏழை

பொதுவாகவே புலவர்கள் ஏழைகள் என்பது மக்களுடைய எண்ணம். இவ்வெண்ணம் பல வாழ்க்கை களிலே நேரில் கண்டறிந்ததன் பேரில் ஏற்பட்டதாகும். தமிழிலே ஒரு புலவர் ‘ ஆவீன மழை பொழிய என்ற செய்யுளையும், ’கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா’ என்ற செய்யுளையும் மனம் நொந்து எழுதினார் என்றால், அவரது வறுமையைப் பற்றி வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? புலவர் வறுமை என்ற ஒரு சிறு நூலும் தமிழில் எழுதப்பட்டது என்றால் வேறு எதையும் மிகுதியாகக் கூற வேண்டியதில்லை அல்லவா?

தமிழில் மட்டுமல்ல வேறு எல்லா மொழிகளிலும் இந்தச் சீர்கேடான நிலையே இருந்தது. ஆங்கில நாட்டில் தாம்சன் என்ற ஒரு இளைய புலவன் தன் பாடல்களுக்கு எவரும் மதிப்புக் கொடாமலிருக்க, பொறுக்க வொண்ணா வறுமையினாலே தற்கொலை புரிந்து கொண்டான். வேறு மொழிகளிலும் புலவர்கள் இதே சிறுமை அடைந்திருக் -கிறார்கள். இது என்ன வாழ்க்கை !

புலமை ஒன்றை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்களே இந்தக் கொடிய வாழ்க்கையில் வருந்தினார்கள் என்று கூற வேண்டும். வேறு தொழிலை வைத்துக்கொண்டு புலமையை உல்லாசத் தொழிலாகக் கொண்டவர்கள் இந்தச் சீர்கேடு அடைய மாட்டார்கள். செல்வம் பெற வேண்டும் என்ற கொள்கையின்றி எப்பொழுதும் கவியழகுகளையே சிந்தித்துக் கொண்டு இருப்பதினால் வயிற்றுப்பாட்டை நினைக்கவும் அதற்குச் செய்ய வேண்டிய செயல்களையும் செய்யவும் நேரம் அற்றவர்கள் ஆகிவிடுகிறார்கள். ஆகவே வறுமை என்ற பேயால் பீடிக்கப்பட்டவர்களாய் வருந்துகிறார்கள் - நெருக்கடி வந்த காலத்தில் தாம் எழுதிய அரிய நூல் களை

வணிகர்களுக்குக் 'கூழுக்கு விற்றுவிடுகிறார்கள். ஆங்கில நாட்டிலே கோல்ட்ஸ்மித்து, ஸ்காட் முதலிய பெரும் புலவர்கள் சிறு தொகைகளுக்குத் தம் அருமை யான கவிதைகளையும் கதைகளையும் விற்று வருந்தவில்லையா? அப்படியானால் தமிழ் நாட்டிலே ஒளவையாரும் கம்பரும் கூழுக்குப் பாடினார்கள் என்றால், அது வெறுங்கட்டுக் கதையாகுமா?

செல்வர்களும் புலமை மேற்கொண்டு கவியின் பத்தையே சிந்தித்துப் பொழுது போக்கினதும் உண்டு. அன்னார்களும் வறுமை உற்றார்கள் என்பது மிகை யன்று. நேரில் ஒரு குறுநில மன்னரிடம் அவரது குடும்பம் தற்போது இழிந்த நிலை அடைந்ததன் காரணம் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவருடைய பாட்டனார் மிகப்படித்த பண்டிதர். வாழ்க்கை தொடங்கும்போது அவருக்குப் பெருத்த செல்வமிருந்தது; கடன் இருக்கவில்லை. செய்யுட்களை இயற்றி இன்புற்றும் பண்டைய நூல்களைப் பதிப்பித்து மக்களுக்கு வழங்கி அவர்களுடைய அறிவை மிகுதிப்படுத்துவது தம் கடமை என்று எண்ணியும் அதிலே ஈடுபட்டார். தம் பண்ண யத்தை அவர் கவனிக்கவில்லை. பல நூல்களை எழுதினார். பலவற்றை அச்சடித்தார். சில ஆண்டுகளில் கடன் ஏற்பட்டுப் பொருள் தொலையத் தொடங்கிற்று. ஆனால், அதனைப் பற்றி, அவர் கவலைப் படவே இல்லை. அவர் இறக்கும் தறுவாயில் சொத்துக்கு மேல் கடன் மிகுதியாகி விட்டதாம். அந்த வாழ்க்கையின் முடிவாக இப்போது உள்ள அவரது பேரன் பண்ணயம் இழந்து வறுமையில் வளைந்து வெறும் பட்டம் வைத்துக் கொண்டு உயிர்ப்பிணமாக இருக்கிறானாம். குறு நில உன்னனின் நிலைமையே இப்படியானால் வறுமையிலேயே பிறந்த புலவர்கள் நிலைமையைக் கூறவும் வேண்டுமா?.

தமிழ் நாட்டிலே புலவர்களின் வறுமை என்பது ஒரு பழ மொழியே ஆகிவிட்டது. என்றாலும், கம்பர் போன்ற கவிச்சக்கரவர்த்திகள் இதே நிலையில் வருந் தினார்களா என்று கேட்கலாம். சங்கத்தார் காலம் முதல் புலவர்கள் ஒரு செல்வன்

அல்லது தலைவன் முதலியவர்களை அண்டியே பிழைத்தார்கள் என்பது வரலாறு. கம்பரைப் பற்றியும் பல கதைகள் தோன்றியிருக்கின்றன. விநோதரச மஞ்சரி முதலிய நூல்கள் அக் கதைகளை வெகு விமரிசையாக உரைக்கின்றன. அவைகள் படிப்பவர்களை உற்சாகப் படுத்துவதற்காகக் கற்பிக்கப்பட்டிருக்கலாம். கூழுக்குப் பாடிய கதைகளும் காசுக்கு இயற்றிய கதைகளும் உண்மையாக இருந் தாலும் இருக்கலாம். வெறுங் கற்பனையாக இயற்றப்பட்டிருந்தாலும் இருக்கலாம். ஆனால், கம்பரோ சில சொற்களை மெய்ம்மறந்து கூறியிருந் தால் அவைகளை நாம் நம்ப வேண்டாவா? அவைகளை எடுத்துக்கொண்டு அவைகளில் நாம் காணக் கூடிய சில எண்ணங்களை இங்கே எடுத்து எழுதுவோம்.

கம்பர் இராமனுடைய வரலாற்றைச் சொல்லத் தொடங்கும் போது அவனுடைய நாடு நகரங்களைப் பற்றிக் கூறுகிறார். அந்த நாடு உலகிலேயே எல்லாப் பண்புகளிலும் சிறந்த நாடாக இருந்திருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. அப்படிப்பட்ட ஒரு சிறந்த நாட்டிலே கேடுகள் இருக்கக் கூடாது அல்லவா? அவர் கருத்தில் தோன்றிய மிகக்கொடிய கேடுகள் வறுமையும் முதலாளித்துவமும் என ஜனகிக்கலாம். ஏனெனில், அவை இரண்டினாலும் அவர் மிக வருந்தினார் போலும். ஆகவே, அப்படிப்பட்ட கொடுமை கொண்ட மக்கள் இரண்டு வகையினரும் தம் அன்பில் மிகுந்த தலைவன் நாட்டில் இல்லை என்று உறுதிபடக் கூறுகிறார்.

‘‘எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை’’

என்று கூறுகிறார். அந்நாட்டிலிருந்த எல்லா மக்களும் அவரவர்க்கு வேண்டிய பொருள்களைப் பெற்றிருந்தார்கள். அதனைக் கேட்க நாமோ‘ஆ! நமக்கு அப்படிப் பட்ட சம்பத்து இல்லையே என்று பொறாமைப் படுவோம். அப்படிக் கோசல நாட்டில்; மக்கள் வேண்டிய வற்றைப் பெற்றிருந்த வகையில் அங்கே ’ஏழைகள் இல்லை முதலாளிகளும் இல்லை’

என்கிறார். ஏழைகள் வறுமைப் பிணியால் வருந்தும் மக்கள். முதலாளிகள் வறியவர்கள் அருகில் இருக்க அவர்களுக்குக் கொடாமல் அவர்களுடைய உழைப்பினால் தாமே செல்வர்களாகி தன்னலத்தோடு வாழுபவர்கள், இவ்விருவர்களின் நிலைமைகளும் அமைதியுள்ள நாட்டிற்கு வேண்டிய தில்லை. இந்த இரண்டும் நமது நாட்டில் இப்போது தாண்டவம் ஆடுகின்றன. கம்பருடைய கனவில் அவைகள் இல்லவே இல்லாத நாடு கோசல நாடு ஆகும். நகரம் அயோத்தி ஆகும். ஆகவே, கம்பர் இந்த இரண்டு கொடுமைகளையும் கண்டிருந்து அவைகளைக் கண்டிக்கவே மேலே சொன்னபடி பாடுகிறார். கம்பர் வறியவர்களிடம் வறுமையின் கொடுமை அறிந்து அங்கே முதலாளிகள் செய்யும் கொடுமைகளைப் பார்த்துப் பொறுக்க முடியாமல் இருந்திருக்க வேண்டும். தம் அனுபவ நிலையை இங்கே ஊட்டியிருக்கிறார், தாமே வறியவராக இருந்து அந்த வறுமையின் கொடுமைகளை அனுபவித்தார் என்று கூறலாமோ!

இனி, மற்றோர் இடத்திலும் இந்த நிலைமையையே வற்புறுத்துகிறார். ஏழைகளின் கூக்குரல் அவர் காதில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கிறது போலும், கடல் மிகப் பெரியது அதன் மீது ஏறிச் செல்லும் போது அதன் பரப்பின் பெருமை நன்கு தெரியும். அகலமும் நீளமும் கண்ணால் அளக்க முடியாது. மனத்தால் நினைக்க முடியாது. வறுமையும் அப்படிப்பட்ட கொடிய பெருக்கத்தைக் கொண்டதே. வறுமையின் கொடுமையை யாரே அளக்க முடியும்! மேலும் கடலின் மீது செல்லும் போது அதன் கொந்தளிப்பையும் பார்க்க வேண்டும். பெரிய பெரிய கப்பல்களையும் ஆட்டி வைக்கின்றன அல்லவா? வறுமை செய்யும் கொந்தளிப்பும் அது போல் வதே. வறியவனுக்கு ஒரு நாளேனும் மன அமைதி உண்டா ? மேலும் கடலில் சுறாமீன்களும், திமிங்கலங்களும், பாம்புகளும், விடப் பிராணிகளும் நிறைய உண்டு. வறுமையில் சஞ்சரிக்கும் கொடிய நோய்கள், சச்சரவுகள், கூக்குரல்கள் முதலியவைகளுக்கு அளவில்லை. ஆகவே

வறுமை ஒரு கடல் அல்லவா? இவ்வறுமையாகிய கடலைக் கடப்பது எப்படி என்று கேட்கிறார் கம்பர். தம்முடைய இலட்சிய நகரமாகிய அயோத்தியில் ஈகையே இக்கடலைக் கடந்தது என்று ஆறுதல் கூறுகிறார். ஈகை என்பது ஒரு கப்பல். அதனை யும் கலக்கி விடும் வறுமையின் கொந்தளிப்பு. இருந் தாலும் அந்த 'ஈகை என்னும் கப்பல் அக்கடலைத் தாண்டி வறுமையும் அதனால் ஏற்படும் இரவும் (யாசகம்) இல்லாத ஒரு கரையை அடைந்ததாம் அந்த நகரம் என்னும் பொருள் பட.

''ஈந்தே கடந்தான்
இரப்போர் கடல்''

என்று வெகு அருமையாக அந்நகரின் பெருமையைக் கம்பர் விளக்குகிறார். இதனால் கம்பர் வறுமையின் கொடுமைகளையும் வறியவரின் துன்பங்களையும் ஈகையின் பெரும் ஆற்றலையும், ஈவோரின் பெருந் தன்மையையும் கூறுகிறார். கம்பர் வறுமையை நேரில் அறியாமலா இவ்வாறு கூறுகிறார்?

இத்தகைய சிறந்த நாட்டையும் நகரத்தையும் எவ்வண்ணம் மன்னர் மன்னனாகிய (சக்கரவர்த்தி) தயரதன் ஆளுகின்றான்? அவனோ ஆற்றலில் சிறந்தவன். அது கண்டு பகைவர் ஒருவரும் எழவில்லை. மன்னனுக்கோ போர் புரியும் வேலை இல்லை. ஆகவே நாட்டில் குடிகள் நன்றாக வாழ வேண்டும் என்ற கொள்கையே நிரம்பிய வனாக இருந்தான். அந்த ஆட்சியை எவ்வகையில் நடத்தினான் என்று கம்பர் வர்ணிக்கிறார். உலசில் வேறு எந்தப் புலவனும், கருதவொண்ணாத பெருமையில் அன்றோ வருணிக்கிறார். அவர் ஆண்டிருக்கும் ஓர் உவமை போதும் அவருடைய அரிய பெரிய புலமை மதியை விளக்குதற்கு என்க. அந்த அரிய நுட்ப அறிவை எடுத்துக் காட்டுவோம்:

ஓர் ஏழை மகனுக்கு ஒரே ஒரு சிறு வயல் (செய்) இருக்கின்றது. அதைக் கொண்டே அவனும் அவன்

குடும்பமும் பிழைக்க வேண்டும். ஆகவே, அவன் அச்சிறுவயலை வெகு அக்கறையோடு பாதுகாத்துச் செம்மைப்படுத்தி மிகுதியும் உழைத்து அதனால் பெறும் பலனை எடுத்துப் பிழைப்பான் அன்றோ? அவன் சற்றுச்சோர்வு அடைந்தாலும் பருவம் தவறினாலும் அசாக்கிரதையாக இருந்தாலும் அவன் வாழ்க்கையே அம்பலமாகப் போகும். அவனும் அவன் குடும்பமும் தீராத இடும்பை படவேண்டி வரும். ஆகவே, அவன் மிகவும் அக்கறையோடு உழைப்பான்.

அந்த ஏழையின் அக்கறையிலே தயரதன் தன் பேரரசைக் காத்து வந்தானாம் என்று கம்பர் கூறுகிறார். இதனால் பல உட்கருத்துக்கள் தோன்றும். ஏழை எத்தனை அக்கறையோடு பாடுபடுவானோ அத்தனை அக்கறையோடு அத்தனை பெரிய அரசையும் தயரதன் காத்து வந்தான் என்பது ஒன்று. ஏழை எவ்வாறு ஒரு சிறு வயலைக் காத்தானோ அப்படித் தன் பேரரசின் ஒவ்வொரு பகுதியையும் அவன் காத்தான் என்பது மற்றொன்று. ஒருவனுக்கு அளவுக்கு விஞ்சிய சொத்து இருந்த போதிலும், அதில் ஒரு பகுதி தனக்குப் போதும் என்று இருந்த போதிலும் அப்பகுதியை மட்டும் பாதுகாத்து அதன் பலனோடு திருப்தி அடைபவன் போல் அல்லாது எல்லாப் பகுதிகளையும் சரிவரப் பார்த்து அவைகளின் பலன்கள் முழுவதும் பெற முயன்றான் என்பது இன்னுமொரு பொருள். அதாவது.. உலகில் செல்வவானும் ஏழையும் ஒரே விதமாகப் பாடுபட வேண்டும். செல்வம் இருக்கிறது என்ற காரணத்தைக் கொண்டு சோம்பேறியாக இருக்கக் கூடாது. உலகில் பிறந்தவன் ஒவ்வொருவனும் பாடுபட்டே தீர வேண்டும் என்ற பொருளாதாரக் கலையின் உணர்ச்சி இதிலே இருக்கிறது அன்றோ! ஆகவே தயரதனுடைய ஆட்சியின் மேன்மையைக் குறிக்கும் போது பொருளாதாரச் சிறப்பைக் கம்பர் கனவு காண் கிறார் என்க.

இந்தக் கனவிற்கு எடுத்துக் கொண்ட. உதாரண உவமை மிகச் சிறப்புடையது. அது ஏழையின் செய் எவ்வாறு

காக்கப்படுகிறது என்பதே ஆகும். இந்த உண்மை ஓர் ஏழைக்குத் தான் விளங்கும். கம்பர் ஓர் ஏழையாக இருந்து ஒரு சிறு வயலை உழுது பயிரிட்டுப் பலனை எடுத்துத் தன் குடும்பத்தைக் காக்காமல் இருந்தால் இந்த உவமை அவர் மனத்தில் தோன்றி இருக்குமா? மற்ற எந்தப் புலவர்கள் இந்தச் சிறந்த , உவமையை எடுத்து ஆண்டார்கள்? ஆகவே கம்பர் சிறிய செய் படைத்திருந்த ஓர் ஏழையாக இருந்திருத்தலாகாதா? அச்செய்யுள்.

'வையம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய்யெனக் காத்து இனிது அரசு செய்கின்றான்.'

என்பதே. இதனை ஊன்றி ஆராய்க.

மேலும், ஏழையாக இருந்த கம்பர் கடனும் பட்டு அதனால் வருந்தினாரோ என்று ஒரு கேள்வி எழலாமே? எத்தனை எச்சரிக்கையாக இருப்பவனுக்கும் வினைவயத் தால் கடன் ஏற்படுவதுண்டு. அவ்வாறு கம்பர் கடன் பட்டிருக்க வேண்டும், அதன் கொடுமைமுற்றும் அனுபவித்திருக்க வேண்டும். அதனாலே கலக்கம் உற்று தொந்திருக்க வேண்டும். அந்த அனுபவத்தைப் பிறர் நினைக்க ஒண்ணாத இடத்தில் உவமையாகக் கொண்டு அமைத்திருக்கிறார்,

இராம இராவணப் போரின் இறுதியில் இராவணன் தோற்றுப்போய்த் 'தன் இனம், படை முதலியவை எல்லாம் இழந்து தன்னந்தனியே நிற்கிறான். அப்போது அவன் உள்ளம் எவ்வாறு இருக்கும்? கடன் பட்டார் போலக் கலங்கினான் 'இலங்கை வேந்தன்' என்றார் கம்பர். சில செல்வவான்களான . அறிஞர்கள் இது என்ன கேவலமான உவமை? கல்வியில் பெரிய கம்பர் இந்த அசம்பாவிதமான உவமையையா எடுத்தாளுவார்? என்று ஏளனம் செய்கிறார்கள். இவ்விதமாகச் சொல்லி, அச்செய்யுள் கம்பருடைய வாக்கே அன்று, அது இடைச் செருகல் என்று தள்ளிவிடுகிறார்கள். அந்தத் தார்க்கீகர்கள் ஏழைபடும் கடன் வாழ்க்கையை அறியாதார் என்க. கடன் ஒருவனை

ஆழ்த்திவிடும் சங்கடங்கள் சிறிதேனும் அறிந்திருந்தால் இவ்வாறு கூறவே மாட்டார் கள். கடன் தொல்லை கம்பருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அதனை அறிந்தே அதனை இலங்கை: வேந்தன் மீது ஏற்றினார். ஒரு ஏழை கடன்பட்டால் சுற்றம் ஓடிப்போகும். வறுமைப் பேய் குடுமியை ஆட்டும். தாங்கவொண்ணாத கவலை ஏற்படும். இலங்கை வேந்தனைச் சுற்றத்தார் விட்டு அகன்றனர். மானம் போகும் நிலை வந்து விட்டது. அசுரர் தலைவனுக்கு ஒரு மானுடனால் இந்தக் கதி நேரிட்டால் அது கடன் பட்டார் கதி போல இல்லையா? இது சொன்ன கம்பர் ஓர் ஏழை அல்லரோ?.

இந்த எடுத்துக்காட்டுக்களைப் போல பல அவர் நூலில் இருக்கின்றன. எல்லாம் கம்பர், ஏழ்மை இன்னது என்று அறிந்தவர் என்பதைக் காட்டக் கூடியவையே. நண்பர்கள் இந்த நிலையை நன்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவார்களாக.

9. கம்பரும் உழவியலும்

கம்பருடைய பெருநூலை ஆராய்ந்து படித்துப்! பார்த்தால், அவருடைய தொழில் உழவாக இருக்குமோ என்று தான் கருத வேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் உழவுக்கு ஒரு தனி நூலாக 'ஏர் எழுபது' என்ற நூலை எழுதினர் என்று கூறுவர். அந்நூலின் நடையைக் கண்டு ஒரு சிறிது ஐயப்படுவாரும் உண்டு. ஆனால், அவர் எழுதி யிருக்கும் இராமாவதாரத்திலே தமக்குத் தோன்றிய இடத்தில் எல்லாம் உழவின் மேன்மையை வெகு விசித்திரமாக நுழைத்திருக்கிறார். எதிர்பாராத இடங் களில் கூட அந்தக் கருத்துக்களைக் காணலாம். அவ்விதக் கருத்து ஒன்றினை மிதிலைக் காட்சியில் காண்கிறோம். சீதையைப் பற்றி விசுவாமித்திரர் கூறும்போது இந்தக் 'கருத்தை எடுத்து ஆண்டிருக்குறார். அவ்வாறு கூற வேண்டிய தேவை அங்கு இல்லை. என்றாலும் உழவின் பேரில் அவருக்கு இருந்த பேரன் பினாலும் மற்றத் தொழிலின் மேல் இருந்த தாழ்ந்த கொள்கையினாலும் அவ்வாறு கூறினார் என்றே சொல்ல வேண்டும்.

மனிதனுக்கு உவகை தருவன இரண்டு பொருள்கள். ஒன்று செல்வம்; மற்றொன்று உழவு, இவைகளைப் பற்றி விவரிக்கும் இயல்கள் பொருளியல். உழவியல், எனப்படும். இவை இக்காலத்தில் இருப்பது போல் கம்பர் காலத்திலும் இருந்திருக்க வேண்டும். பொருளியலில் நாணயம், தொழில் வருவாய் நிதி நகை முதலியன அடங்கும். உழவியலில் நிலத்தை உழுது பயிர் செய்து உணவுப் பொருள்களைச் சேகரித்தல் அடங்கும். இரண்டினாலும் மனிதன் இன்பம் அடைவதே குறிக்கோள் ஆகும். ஊன்றிப் பார்த்தால் பொருள் சில சமயங்களில் உவகை தரும், சில சமயங்களில் தீங்கு தரும். பொருளின் நிலையாமையினால் ஏற்படும் கவலைக்கு அளவில்லை. நாணயமோ தகையோ உள்ளது உள்ளபடி உண்டே ஒழிய பெருகா. ஒரு நிதியில் பொன்னோ நகையோ வைத்தால் அவ்வாறு வைத்த நிலையில் இருக்குமே ஒழிய ஒரு

உருப்படியும் அதிக மாகாது. திருட்டு களவு இவைகளால் குறைவு படலாம். ஆனால், உழவியலிலே ஒரு மணி நிலத்தில் விதைத்தால் நூற்றுக் கணக்கில் பெருகி விளையும். ஆகவே, பொருளிலும் உழவே சிறந்தது எனலாம்.

பொருளுக்கு அதிதேவதை நிலமகள். இவ்விருவரும் ஆட்சிக் கடவுளுக்கு மனைவியரே ஆவர் ஆனாலும், திருமகள் சிறப்பு குறைவு நிலமகள் சிறப்பு மிகுதி என்று காட்டுகிறார் கம்பர்.

சீதை நிலத்தில் உழும் கொழுவின் நுனியில் செழித்து வளர்ந்து அச்செழிப்பே உருவமாக விளங்குகிறாள். அழுத்தத்தோடு உதித்த திருமகள் போல அழியும் தன்மையள் அல்லள். ஆகவே, உழவியல் தேவிக்குத் திருமகள் அடங்கி வணங்குகிறாள் என்ற கருத்தைக் கூறி, உழவின் மேன்மை செல்வப் பொருளினும் சிறந்தது என்று கூறுகிறார். சீதையின் வருணனையில் இத்தனையும் கூறுவதை அடியிற் காணும் செய்யுளில் அறிக:

உழுகின்ற கொழுமுகத்தின்
உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவிமடந்தை
திருவெளிப் பட் டெனப்புணரி
எழுகின்ற தெள்ளமுதோடு
எழுந்தவளும் இழிந்தொதுங்கித்
தொழுகின்ற நன்னலத்துப்
பெண்ணரசி தோன்றினாள்.

நிலத்தை உழுகிறபோது உழும் ஏர் முனையில் திடீரென்று கதிரவன் தோன்றினாற் போல ஓர் ஒளி தோன்றுகிறது. உதிக்கின்ற கதிரவன் ஒளி போலப் பொழிகிறது, உதிக்கின்ற கன்னியின் திருமேனி நிலத்தின் வயிற்றிலுள்ள செல்வமெல்லாம் அதாவது புவிமடந்தை யின் கருவாக உள்ள வளமும் வனப்பும் எல்லாம் ஓர் உருவமாய்ச் சமைந்து வெளிப்பட்டாற் போல அவவுரு வெளிப்படு கிறது.

அவ்வுருவமே சீதைப் பிராட்டி, அவள் தோன்றிய பின் ஒரு மாறுதல் அல்லது ஒரு புரட்சி ஏற்பட்டது என்று கம்பர் கற்பிக்கிறார்.

அலை கடலில் அமிழ்தத்தோடு பிறந்த திருமகளே பெண்ணரசியாகத் தனி முடி சூடி அன்று முதல் இன்றளவும் தனியரசு புரிந்து வந்தாள். ஆனால், இன்றோ கலம் தந்த திரு (சீதை) நீர் தந்த திருவை (திருமகளை) எளிதில் வென்று விட்டது. அழகிய அரியாசனத்தில் பெருமிதத்தோடு வீற்றிருந்த திருமகள் இந்தச் சீதையாகிய நிலமகளைக் கண்டதும் அவளுடைய அழகுக்குத் தோற்றுத் தானிருந்த அரியாசனத்தி விருந்து இறங்கி விடுகிறாளாம். அவ்வாசனத்தின் படியில் அடிவைத்துச் சீதை ஏறத் தொடங்கியதும் இறங்கி வந்து கொண்டிருந்த திருமகள் அரசி ஒதுங்கி வழிவிடு கிறாளாம். வழி விட்டதுமன்றி அவளுக்கு வழிபட்டு வணங்கி நிற்கிறாளாம். அப்போது நிலமகளான சீதை அரியாசனம் அமர்ந்து பொலிவுடன் வீற்றிருக்கத் தொடங்கினாளாம்.

இது சீதை பிறப்பைப் பற்றிக் கவிஞர் கற்பித்த சித்திரம்.

இந்தக் கற்பனையில் அடிப்படையாக இருப்பது திருமகளிலும் நிலமகள் சிறந்தவள், நிலமகளைத் திருமகள் வழிபட்டு வணங்கி நிற்கிறாள் என்பதாம். அதாவது பொருளியவைக் காட்டிலும் உழவியல் சிறந்தது எனக்கூறும் சாதாரண உணமையைப் பல சுவைகளுடன் கூடிய கற்பனைச் சித்திரமாகக் கம்பர் இணைத்து விடுகிறார்.

10. கந்தர் கலிவெண்பா

இது குமர குருபர சுவாமிகள் அருளிச் செய்த ஒரு சிறந்த துதி நூல். சைவ சமயத்தில் முருகக் கடவுளிடம் அன்பு பூண்ட மக்கள் இதனை ஒரு பாராயண நூலாகக் கொண்டு நாள்தோறும் ஓதுவதுண்டு. திருமுருகாற்றுப் படை, கந்தரநுபூதி போல இதனையும் மிகப் புனித நூலாக எடுத்து ஓதுவதுண்டு. மற்ற இரண்டைப் போல ஆற்றுப்படை முதலிய இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் சிக்காமல் ஒரு விண்ணப்ப நூலாக ஆக்கப்பட்டுள்ள படியால் பாராயணத்திற்கு இந்நூல் ஒப்பற்றதாக அமைந்துள்ளது. ஆகவே, இது ஒருவர் தம் வழிபாட்டிற்கு ஏற்றுக் கொண்ட கடவுளுக்கு உகந்த நூலாகும் அமைப்பைக் கொண்ட சிறப்பைப் பெற்றது எனலாம்.

இனி, இந்நூலில் சொற்பெருமை மிகுதியாக அமைந்துள்ளது மாத்திரமேயன்றிப் பொருட் பெருமையும் மிகுந்துள்ளது. இதில் அருமையான சொற்பொருள் அமைவுகளேயன்றி அறிவு செறிந்த பொருள்கள் மிக நுணுக்கமான முறையில் பொதிக்கப் பெற்றுள்ளன. மிகுந்த அனுபவ சமய குணம் உள்ளவர்களே இதில் பொதிந்துள்ள பொருள்களை எளிதில் அறிய முடியும். சைவத்திலேயே திகழ்ந்துள்ள வயது நிரம்பிய படித்த பெருமக்களும் ஆராய்ச்சி இல்லாமல் சில நுணுக்கங்களை அறிதல் கடினம்.

இந்நூல் 122 ஈரடிகள் கொண்ட கலிவெண்பா வினால் ஆக்கப்பட்டது. படிக்கப் படிக்க ஒருவரை இழுத்துச் செல்லக் கூடிய நீரோட்ட கதியில் சொற்கள் அமைந்திருக்கின்றன. ஆதலால், வெகு தெளிவாகவும் இனிமையாகவும் நடை ஓடும். பொருளும் அவ்வாறே நீரோட்ட கதியில் செல்லுகின்றது. அது கூறும் செய்திகள் அடுக்கடுக்காக ஒன்றன் பின் ஒன்றாக அமைந்திருக்கின்றன. பொருளை நினையாமல் வாசித்தாலும் இனிமையாக இருக்கும். பொருளை எண்ணி வாசித்தாலும் மிகச் சுவைபட ஓடும். நிரம்ப வடமொழி அணிகளை இட்டுக் கவியைக் கெடுக்காமல்

தெளிவான பொருள் நடையையே இந்நூல் கொண்டிருக்கிறது. அக்காலத்து மடத்தார்களின் சம்பிரதாயப்படி சமயச் செய்திகளுக்கு வடமொழிச் சொற்களை ஆள வேண்டி வந்தது. ஆகவே, இதில் வடமொழிச் சொற்கள் பல நிரம்பி இருக்கின்றன. இருந்தாலும் அவைகளால் நூல் நடைக்கு ஒரு குறையும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த முறையில் இந்நூல் ஒரு சிறப்புப் பொருந்தியிருக் கிறது எனலாம். துதி நூலாக இருந்த போதிலும் சமய உண்மைகளை மிகத் தெளிவாக இடையிடையே அடக்கிக் கொண்டிருக்கிறது. ஒரே சிறு நூலில் பல சமய உண்மைகளை அறிய வேண்டுமாயின் இதை வாசித்தால் போதுமானது.

முருகப் பெருமானுடைய எல்லா இயல்புகளையும் போலவே இந்நூலும் ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவ்விதமாக வெளிப்படையாக ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு எழுதப்படாமல் இருந்த போதிலும் ஆராய்ந்து பார்த்தால் ஆறு பொருட் பிரிவுகள் அதில் தோன்றுகின்றன என அறியலாம்.

1. கடவுட் பண்புகள்
2. உயிர்களின் பிரிவுகள் (மூன்று வகையினர்)
3. முருகக் கடவுளின் உருவத் தோற்றம்
   (i) திரு உருவப் பகுதிகளின் வருணனை
   (ii) தத்துவ விளக்கம்.
4. முருகக் கடவுள் தசாங்கம்
5. முருகக் கடவுள் சரித வரலாறு
6. விண்ணப்பம்.

இவைகளில் ஒவ்வொன்றிலும் பல உட்பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. கடவுட் பண்புகளில் 14 குணங்கள் கூறப்பட்டு உள்ளன. அவைகளில் பதி இலக்கணம் மழுவதும் காணலாம். பதி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளாய் விளக்கப்பட்டுள்ளது. சித்தாந்தக் கொள்கைகள் எல்லாம் இங்கே மிளிரக் காணலாம்.

பிறகு பசுவாகிய உயிர்களின் இலக்கணம் கூறத் தொடங்கி, அவ்வுயிர்களில் முப்பிரிவுகளைக் கூறி, சகலர். பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்பவர்களின் இயல்புகளைக் கூறுகிறது.

இவர்களில் சகலர் மும்மலங்களாலும் பிடிக்கப் பட்டவர்கள். அவர்களுக்கு முக்தியளிக்கும் விதங்களைக் கூறும் வகையில் தத்துவங்கள் (விந்து மோகினி, மான்) ஆறு அத்துவர்கள்- (மந்தரம் முதலிய) நான்கு கொற்றம்- ஏழு யோனிகள்- 8400000 உயிர் வகைகள் சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று - சாலேகம். சாமீபம், சாரூபம் என்ற மூன்று 4 சத்தினிபாதம் முதலியவை கூறப்பட்டுள்ளன. இதில் 17 கருத்துக்களை விரித்துக் கூறி, உயிர்களுக்கு சன் குருபரனாக வந்து உட்கொள்ளும் அருட்செய்தியும் கூறப்பட்டுள்ளது. பிறகு பிரளயாகலராகிய (ஆணவம், கன்மம் என்ற மலங்களை உடைய) உயிர்களுக்குக் கடவுள் தரிசனம் கொடுத்து ஆட்கொள்ளும் வகை கூறப்படுகிறது, இறுதியில் விஞ்ஞானகலர் ஆகிய ஆணவம் என்ற ஒரே மலம் உடையாருக்கு இன்பம் உதவி 21 அவத்தையும் கழற்றி முத்தருடன் இருத்திப் பாமுத்தி தருதலைக் கூறு கிறது. இவ்வாறு பசுக்களுக்கு அருள் புரிவான் கடவுள் என்று இரண்டாம் பகுதி கூறுகிறது.

அவ்வாறு பசுக்களுக்கு முத்தி அளிக்கும் முருகக் கடவுள் எவ்விதத் தோற்றத்தில் விளங்குவான் என்று மூன்றாம் பகுதி கூறுகிறது. அதில் திருமுடி முதல் திருவடி வரையில் மிக விளக்கமான உவமைகளால் அருமையான வருணனை -களைக் காண்கிறோம்.

ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் தனித்தனி யாக வருணிக்கப்பட்டுள்ளன. அதிலே இரண்டாம் உட் பகுதியில் தத்துவரீதியாக முருகனுடைய உருவம் எடுத்தாளப் பட்டிருக்கிறது. மந்திரமே முதலான உவமைகள் அங்குக் காணலாம்.

நான்காம் பகுதியில் முருகக் கடவுளை அரசனாக உவமித்து அரசனுக்குரிய உரிமைப் பொருள்களாகிய தசாங்கம் கூறப்பட்டது. பொருப்பு, ஆறு, நாடு, நகர், குதிரை களிறு, தொடை, கொடி, முரசு, ஆணை முதலிய பத்தும் விவரிக்கப் -பட்டுள்ளன. மணிவாசகப் பெருமான் சிவபெருமானுக்கு எடுத்துப் பாடிய திருத் தசாங்கத்தை இதற்கு ஒத்திட்டுப் பார்த்து மகிழலாம்.

இனி ஐந்தாவதில் முருகக் கடவுள் அவதாரம் முதலாக வள்ளி திருமணம் வரை 16 பகுதிகளில் புராண வரலாறு கூறப்பட்டுள்ளது. கந்த புராணச் சரிதம் முழுவதும் சுருக்கமாக இங்கு மிளிரக் காணலாம். கதை சொல்லுபவர்களுக்கு இவ்வடிகள் மிகவும் பயன்தருபவை. பிறகு ஆறுபடை வீடுகளில் முருகக் கடவுள் எழுந்தருளின செய்தியையும் கூறுகிறது.

இனி, ஆறாவது பகுதி விண்ணப்பம் ஆகும். இது அடியார்களின் பொருட்டு அவதரித்த கடவுளை அணுகித் தமக்கு வந்த ஆபத்திலிருந்து மீட்டுக் கொள்ளும் பொருட்டு உயிர்கள் செய்யும் பிரார்த்தனை ஆகும்.. ஆபத்துக்களை எடுத்துச் சொல்லி முருகக் கடவுளைத் தொழவே அவர் தோன்றுவார் என்றும், தோன்றியதும் கேட்டவைகளை -யெல்லாம் அருளுவார் என்றும், அதில் காண்கிறோம். இந்த விண்ணப்பத்தில் கேட்டிருக்கும் முக்கிய வசதிகள் ஆசுகவி முதலியன பிறகு இருவாதனைகளையும் அகற்றி விடுதலை செய்தல், அதன் பின் அடியாருடன் கூட்டு வித்தல் முடிவாகத் தம்மை ஆட்கொள்ளுதல் முதலியவைகள் கேட்கப் -படுகின்றன. இந்தக் குறைகளைக் கேட்டதும் இந்நூல் முடிவு பெறுகிறது.

இந்நூல் அருளினதற்குக் காரணமாக ஒரு சரிதை உண்டு. 5 வயது வரை ஊமையாக இருந்த குழந்தை திருச்செந்தூர் முருகக் கடவுள் சன்னிதியில் பேசும் அருள் பெற்றது. உடனே இக்கவியைப் பாடியது என்பதே அதுவாம். இந்நூலின் இறுதி

விண்ணப்பத்தில் ‘ஆசு முதல் நாற்கவியும்...... தமிழ்ப் புலமை பாலித்து’’ என்று இருத்தலால் இச்சரிதம் விளக்கம் ஆகின்றது.

நிரம்பிய கல்வியும் அறிவும் பெற்ற ஒரு முதியவர் 1 கூட இதனை அருளியிருத்தல் அரிது. ஆதலின், இதனை - ஒரு ஐந்து வயதுடைய குழந்தை பாடுவதென்றால் பெருமானுடைய திருவருள் பெற்றன்றோ அருளி யிருத்தல் கூடும் என்று வியந்து கொள்க!

11. தனித்தமிழ்க் கொள்கை

தமிழ்மொழி வளர்ச்சியைக் குறித்துப் பற்பல அறிஞர்கள் பற்பல கொள்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். அவைகளையே தத்தம் குறிக்கோள்களாகவும் வைத்துக் கொண்டு பாடுபட முயலுகிறார்கள். அவைகளில் ஒன்று தனித்தமிழ்க் கொள்கை என்பது. இதனைக் குறித்து இருவித எண்ணங்கள் உண்டு. தனித்தமிழே இலக்கிய மேம்பாட்டுக்கு இன்றியமை யாதது என்பது ஒன்று. மக்களுடைய பேச்சுக் கிணங்க அமைக்கப் பெறும் கதம்பத் தமிழே இன்பமும் நன்மையும் தரக் கூடியது என்பது மற்றொன்று. இவ்வேறுபாட்டு உணர்ச்சிகளை ஏனைய மொழி வளர்ச்சி வரலாறு களைக் கொண்டு ஆராய்வாம்.

உலகிலேயே மொழி வளர்ச்சியில் மிகப் புகழ் பெற்ற மொழி ஆங்கில மொழியே, அம்மொழி சென்ற பதினைந்து நூற்றாண்டுகளாகப் படிப்படியாக வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது. இப்போதோ ஏனைய மொழிகளைக் காட்டிலும் சிறப்பிலும் பரப்பிலும் அஃது உயர்வு அடைந்திருக்கிறது. சிற்சில சமயங்களில் அம் மொழியுடன் பல வெளிநாட்டு மொழிகள் போட்டி, யிட்டு வெகு மும்முரமாகத் தாக்கியிருக்கின்றன. சமயச் செய்திகளில் வடமொழி தமிழில் புகுந்து கலக்கியது போல. 6, 7, நூற்றாண்டுகள் முன் ஆங்கிலத்திலும் இலத்தீன் மொழி புகுந்து மிகவும் கலக்கிவிட்டது. நாட்டன்பு மிகுந்த ஆங்கிலர்கள் சமயச் செய்திகளில் இலத்தீனைப் புறக்கணித்து ஆங்கிலத்தையே

கொண்டனர். அவ்விதமான ஒரு செய்தி தமிழுக்கும் சைவ, வைணவ மேம்பாட்டுக் காலத்தில் ஏற்பட்டது. பிறகு பிரெஞ்சு முதலிய ஐரோப்பிய மொழிகள் ஆங்கிலத்தில் புகுந்து அதனை அலசிவிட்டது. அப்போது அதனைத் தூயதாக்கி ஒரு நிலைத்த நடை கொண்டு வரவேண்டும் என்று ஹென்றி என்ற மன்னன் வற்புறுத்தி ஒரு திட்டம் தீட்டினான். அப்போதோ நாட்டில் தூய ஆங்கிலத்திற்கு மாறாகப் பல திசை மொழிகள் நாட்டுள் புகுந்து பேச்சுக் கூற் ஒண்ணாத மாறுபாடுகள் அடைந்திருந்தது. அதனை நீக்கி ஒரு கண்ணியமான நடை தம் மொழிக்கு வேண்டும் என மன்னன் ஆணையிட்டான். பல்கலைக் கழகங்களும் அதனையே ஏற்றுக் கொண்டன.. அதற்கு மன்னர் ஆங்கிலம்' (King's English) என்ற பெயர் ஏற்பட்டது. நிலையற்றிருந்த மொழிக்கு ஒரு நிலை ஏற்பட்டது. எழுத்தாளர்கள் அந்த நிலையையே குறிக்கோளாக வைத்துக் கொண்டு நூல்கள் எழுதினார்கள். அச்சகங்களும் ஏற்பட்டன. மிகுதியாக நூல்கள் வெளிவந்தன. இவைகளும் மன்னன் திட்டத்தையே மேற்கொள்ள ஆங்கில நடை ஒரே நிலை அடைந்து ஓங்கிற்று. இன்று அந்த நிலையை விட்டு மிகுதியான மாறுதல் அம்மொழி அடையவில்லை. அக்காலத்தைப் போலவே தமிழ்மொழிக்கும் இப்போது புரளுகிற ஒரு நிலை வந்திருக்கிறது. சென்ற சில நூற்றாண்டுகளாகவே பல மொழிக் கலப்புகளாலேயே பல வித நடைகள் தமிழில் ஏற்பட்டுள்ளன. புலவர் தமிழ், சைவ, வைணவத் தமிழ்கள் முகம்மதிய கிறித்துவத் தமிழ்கள், பத்திரிகைத் தமிழ். மேடைத்தமிழ் முதலிய பல நடைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளின் இடையே தமிழ் அரசி சிக்கிக் கொண்டு படும்பாடு சொல்ல ஒண்ணாதது. இவைகளில் எல்லாவற்றிலும் புரட்சி தருவது பேச்சுத் தமிழை இலக்கியத் தமிழுக்கு. ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற இயக்கம் தான். அதற்காக இலக்கண வரம்பு வேண்டவே வேண்டாம் என்பர். ஒரு பெரும் கூட்டத்தார். ஆங்கிலத்திலோ இலக்கணத்தையும் கொச்சை மொழிகளையும் மொழி நடைக்குப் பயன் படுத்தினால் உடனே தடுக்க முடியாத எதிர்ப்பு நாடெங்கும்

ஏற்பட்டு விடும். தமிழிலேயோ கொச்சைப் பேச்சுக்களை மேடைகளில் பயன்படுத்துவது மட்டும் அல்ல, திங்கள் வெளியீடுகளில் கொச்சை கொச்சையாக எழுதிவிட வேண்டியது தான் சரி என்றும் செய்யுளிலும் இசைப் பாட்டுக்களிலும் அவ்விதமே கொள்வதே நன்று என்றும், அந்த நடையைப் போற்றவும் தொடங்கி விட்டார்கள். எழுதுவதில் ஓர் இலக்கண எழுத்துப்பிழை செய்தாலும் வேலைக்கு உதவான் என்று கூறும் ஆங்கிலர்கள் இந்தத் தற்காலத் தமிழ் இயக்கத்தை ஏற்றுக்கொள் வார்களா? உரிய மொழி நடையே ஒரு மொழிக்கு ஏற்றத்தைத் தரும் என்று சொல்லுகிற இந்த இயக்கத்தை என்ன என்று சொல்வார்கள்? மேலும் வழக்கத்தில் வந்திருக்கும் வடமொழிச் சொற்களையும் ஏனைய திசைச் சொற்களையும் அப்படியே ஆள வேண்டும் என்று ஒரு சாரார் கூற, அவ்விதம் கூடாது என்றும் தனித்தமிழையே கொள்ள வேண்டும் என்றும் மறு சாரார் கூறுவதை அறிவோம். வடமொழிச் சொற் களும் திசைச் சொற்களும் விரவித் தமிழுக்குள் புகுந்துள்ள நிலையைப் பார்த்தால், நாடெங்கும் அல்லது குடிகள் எல்லாரிடத்தும் ஒரே மாதிரியாக இல்லை என அறிவோம். செங்கல்பட்டு ஆர்க்காடு வட்டங்களில் உள்ள திசைச் சொற்கள் வேறு, சேலம் கோவை வட்டங்களில் உள்ளவை வேறு. மதுரை, திருநெல்வேலியில் அவை வேறு என்றறிக. மேலும். பிராமணர்களில் வழங்கும் வடசொல் ஏற்றமும். வணிகரில் வழங்கும் திசைச் சொல் ஏற்றமும், வேளாளரில் வழங்கும் பிற சொற் குறைவும், ஒதுக்கப் பட்ட வகுப்பார்களில் வழங்கும் பிற சொற்களின் மிகக் குறைவான நிலையும் உச்சரிப்பும் இந்த மாறுபட்ட நிலையை உணர்த்துவன. ஆங்கிலத்தில் ஹென்றி காலத் தில் இவ்வித நிலையைக் கண்டு தான் அம்மன்னன் ஒரு உயர்ந்த தனி நிலை ஏற்படுத்தினான். தமிழுக்கும் இந்த நிலை ஏற்படுத்துதல் நன்று. ஆனால், அதற்கு அரசியல் திட்டம் வேண்டியதில்லை. எழுத்தாளர் இயக்கமே போதுமானது என்று அறிக.

இந்த உயரிய தனிநிலை எத்தன்மைத்தாக இருக்க வேண்டும்? பேச்சுத் தமிழ் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு வகுப்பிலும் மாறுபட்டிருப்பதால் அதனைத் தள்ள வேண்டும். எழுதும் தமிழில் தமிழின் தூய்மையைக் 'கருதித் தனித்தமிழ்ச் சொற்களை நெகிழ விடாது கைப் பற்றிக் கொள்ள வேண்டும். ஓர் எண்ணத்தை அல்லது பொருளைக் குறிக்கும் சொற்கள் தனித்தமிழில் இருந்தால், பிற்காலத்தில் - ஏனைய சொற்கள் வழக்கத்தில் அல்லது புது எழுத்தாளர்கள் மூலம் உட்புகுந்திருந்தால் தனித்தமிழ்மொழியையே இனி' எடுத்தாளல் வேண்டும். இவ்வித ஆட்சியினால் இச்சொற்கள் நூல்களிலும் பேச்சுக்களிலும் தாமே வந்து விடும். எடுத்துக்காட்டாக 'சூழ் நிலை' என்ற சொல் சில ஆண்டுகட்கு முன் கேட்டதே இல்லை. இப்போது எங்கும் கேட்கப்படுகிறது. கலைச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்கள் கிடைத்தால் அவைகளே ஏற்றமுடையவை. வாயில் நுழையாத வடமொழிச் சொற்களை உண்டு செய்து நுழைப்பதில் பயனில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு பாட நூல்களுக்காகச் சில பள்ளி ஆசிரியர்கள் கலை நூல்களை எழுதினார்கள். அவர்கள் வாயில் நுழையாத சில சொற்களை உண்டு பண்ணி விட்டார்கள். உதாரணமாக, தூரலேகணம் முதலிய இவைகளுக்குப் பொருள் சொல்ல ஒரு தனிப் புலவன் வேண்டும். அவைகளைக் காட்டிலும் ஆங்கில மொழிகளே நன்கு புலப்படும் எனலாம். ஆகவே, கூடிய மட்டில் தமிழ்ச் சொற்கள் விரவி விட வேண்டும். நூல்களில் அவைகளைப் புகுத்தி விட்டால் வெகு விரைவில் செயல் வழிக்கு வந்து விடும். இதே முறைதான் ஏனைய வளர்ச்சிகளிலும் ஏற்பட்டிருக்கின்றன. அதுவே இயற்கைக்கு ஏற்றதாவது. இவ்வித இயக்கத்தினால் தமிழ்மொழி தூய்மையுடன் பெருக்கத்தையும் அடையும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தே தமிழுக்கு வடமொழிக் கலப்பு ஏற்படத் தொடங்கிற்று. சங்கத்து நூல்களிலேயே சில வடமொழிச் சொற்கள் காணப்படுகின்றன. ஆனால், கூடிய மட்டில் சங்கப் புலவர்கள் தனித் தமிழ்ச்

சொற்களையே ஆளத் தொடங்கினர். அக்காலத்தில் வடமொழி நூற்பயனைத் தெற்கே கொண்டு வந்தவர்கள் பௌத்தர்களும் சமணர்களும், ஆனால், அவர்கள் தமிழில் எழுதும் போது கூடிய மட்டிலும் தனித்தமிழையே தெரிந்தெடுத்து கைக்கொண்டார்கள், எடுத்துக்கொண்ட சில வடமொழிச் சொற்களையும் தமிழ் உருவம் ஆக்கிக் கொண்டார்கள்.

தங்கள் தனிச் சமய உரை நடை நூல்களை மட்டும் மணிப்பிரவாளம்' என்ற புது உரை நடையில் எழுதினார்கள் (ஸ்ரீபுராணம்). செய்யுள் நடையில் தூய தமிழே கொண்டார்கள் (பெருங்காப்பியங்கள்) பின்னர்ச்சைவ வைணவ மேம்பாடு ஏற்பட்ட காலத்தில் சமய குரவர்களும் ஆழ்வாராதியரும் சிறப்புச் சொற் களை வடமொழியிலிருந்து ஏற்றுக்கொண்டு பொதுப் பெயர்களைத் தமிழிலிருந்தே எடுத்துக் கொண்டார்கள். ஆழ்வார்கள் தனித்தமிழ் ஆர்வத்தை என்னவென்று கூறுவது. ஆண்டாள் திருப்பாவை முதல் பாட்டில்,

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமிர்காள்''

என்ற அடிகளில் எல்லாச் சொற்களும் தனித்தமிழ்ச் சொற்களே. இவ்வடிகளுக்கு இக்காலத்தில் தெளிவான உரை எழுத வந்த பயங்கரப் பெயர் வாய்ந்த ஒரு ஆச்சாரிய சுவாமிகள் திரவிய சம்பத்துள்ள கோகுலத்திலே கைங்கரிய சம்பத்தையும் யவ்வன பருவத்தையும் உடைய ஸ்திரிகள் விலக்ஷண மான பூஷணங் களை அலங்கரித்தவர்காள், மாசங்களில் சிறந்த மார்க்கசித மாசமும் பூர்ண சந்திரோதயத்தையுடைய - (சுக்கில பட்சத்தையுடைய) சுபதினமும் (நமக்குலபித் திருக்கின்றன) புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய உத்கிருஷ்டம் உடையவர்களே ஸ்நானஞ் செய்ய வாருங்கள்? என்று சிறந்த வடமொழி மணிகளைப்

பொதித்துவைத்து எழுதிவிட்டார். இதே தெளிவுரை யானால் பகவத் விஷயம் எழுதின சீயர்கள் தூய்மை வடமொழிகளுக்குச் சொல்ல வேண்டியதே இல்லை. அவைகளுக்குப் பொருள் சொல்ல பெரிய பண்டிதர் அருகிலே இருக்க வேண்டும். மூலமே தெளிவாக இருக்க, இந்தத் தெளிவான உரை வேண்டியதே இல்லை.

நாமும் இனிமேல் தமிழ் வளர்ச்சிக்கு இந்தத் தெளிந்த உரைகள் ஏற்படுத்த வேண்டாம். உரைகள் இல்லாத வரை தமிழ் நன்றாக இருக்கும். இந்தக் கரடு முரடான உரைகள் தோன்றப் போய் தமிழின் வளர்ச்சி குன்றத் தொடங்கும். சைவ நூல்களிலும் பாருங்கள். சிவஞான போதம் எளிய சொற்களால் ஆக்கப்பட்டது. மெய்கண்டார் எளிமை நோக்கினாரேயன்றி கடின நடையை எடுத்தாளவில்லை. ஆனால் அதற்குப் பேருரை சிற்றுரை எழுதிய இரு மொழி வல்லுநரான சிவஞான முனிவர் வடமொழிக்கலப்பையே பெரும்பாலும் கொண்டார். குற்றம் அவர் பேரில் இல்லை. அக்காலத்து மக்கள் நடைப்போக்கு அவ்வாறு இருந்தது. அவரை ஆதரித்த மடங்களில் அந்நடையையே விரும்பினார்கள். -ஆனால், இப்போதோ மக்கள் மனப்பான்மை மாறி விட்டது. எல்லாரும் தெளிவும் அழுத்தமும் விரும்புகிறார்கள்.

ஆகவே, தமிழ் நடைக்கு அப்படிப்பட்ட ஒப்பற்ற நடையே வேண்டும். தமிழ்நாடு முழுமையும் ஏற்கக்கூடிய நடையே வேண்டும். அந்நடையும் எல்லாரும் ஏற்றுக் கொண்டு போற்றக் கூடியதாக இருக்க வேண்டும். அந்நடை உயிருள்ள நடையாக இருக்க வேண்டும். இனி எக்காலமும் பெருகக்கூடிய நடையாக இருக்க வேண்டும். அந்நடையைப் பயின்று வழங்குவோமாக.